# ஈழநாடு

வாரமலர்

மலர் 13 | மாசி 20 | முஹறம் 7 | (4—3—71) | வியாழக்கிழமை | இதழ் 23



"கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி"

'ஔவையார்'

10 மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி ஆறுமுகநாவலரின் உரையுடன் கூடிய 'கொன்றை வேந்தன்' என்ற புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.


# வாக்குப் பெட்டிகளை ஆயுத கோஷ்டி பறித்தது!

## பாரத தேர்தலில் இதுவரை 18 பேர் பலி

### பல இடங்களில் அசம்பாவிதங்கள்

புதுடில்லி, மார்ச் 4

'அமைதியாக தேர்தலை நடத்தும் நாடு என்ற பெருமையை இழந்துவிடக் கூடாது' என்று பிரதமர் இந்திராகாந்தி வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கும்போதும், பாரதத்தின் பலபகுதிகளிலும் ஆங்காங்கே பயங்கரச்சம்பவங்கள் வெடித்துக்கொண்டிருக்கின்றன. நேற்று தேர்தல் ஆரம்பித்த மூன்றும் நாளில் படுகொலைகளும் வன்முறைச் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. பிகாரில் ஜமிக்கிரி என்ற இடத்தில் வாக்குச் சாவடியொன்றில் பயங்கர ஆயுதங்கள்முனையில் வாக்குப்பெட்டிகள் பறித்துச் செல்லப்பட்டன.

பாரதத்தில் நேற்று தேர்தல் மூன்றும்நாளாக தமிழ்நாடு, உத்தர் பிரதேஷ், பீகார், வங்காளம் உட்படப் பல ராஜ்யங்களில் நடைபெற்றது. சில இடங்களில் வாக்காளர்கள் ஆர்வத்துடனும் சுறுசுறுப்புடனும் வாக்களித்துக்கொண்டிருந்த போதும் பல இடங்களில் வன்முறைச்சம்பவங்கள் தலைதூக்கின.

பீகாரில் ஜமக்கிரி என்ற இடத்தில் பயங்கர ஆயுதம் தாங்கிய ஒரு கோஷ்டியினர் வாக்குப்பெட்டிகளை வாக்குச்சாவடியிலிருந்து தேர்தல் அதிகாரியை மிரட்டிப் பறித்துச்சென்றுள்ளனர்.

ஜமால்பூர் எனுமிடத்தில வாக்குச்சாவடியில் திடீரென பட்டாஸொன்று வெடித்ததால் தேர்தல் அதிகாரிகள்பலர் காயமுற்றனர்.

#### வாக்குகளை கிழித்துச் சப்பினர்

பீகாரில் பிறப்பூர் என்னுமிடத்தில் சிலவாக்காளர்கள் வாக்குச்சீட்டுகளைக் கிழித்து வாயினுள் போட்டு சப்பினர்.

உத்தரப் பிரதேசத்திலுள்ள அலிகார் என்னும் பகுதியில் இருபகுதியினர்களுக்கிடையே நடைபெற்ற கலம்பகத்தில் 8 பேர்கொலையுண்டனர்: 45 பேர் காயமடைந்தனர். இப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவம் பாதுகாப்புக்கு அழைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக 45 பேர் கைது செய்யப்பட்டனர். இப்பொழுது நிலைமை கட்டுக்குள் இருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இத்தொகுதியில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

#### வங்காளத்தில்

வங்காளத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் 7 பேர் கொல்லப்பட்டனர். கல்கத்தாவில் ஒருவர்கொலை செய்யப்பட்டார். மூன்று இராணுவத்தினர் உட்படப் பலர் காயமடைந்தனர்.

தமிழ் நாட்டில் இராமநாத புரத்திலுள்ள திருப்பத்தூர் தொகுதியில் தி. மு. க. ஆதரவாளர்களுக்கும் நிஜலிங்கப்பா காங்கிரஸ் ஆதரவாளர்களுக்குமிடையே நடைபெற்ற கைகலப்பை அடுத்து அங்கு இந்திய குற்றத்தடுப்புச்சட்டத்தின் 144-வது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவு 15 நாட்களுக்குத் தொடர்ந்து இருக்கும் கட்சி ஆதரவாளர்கள் அங்குள்ள சில கடைகளைத் தாக்கிய தோடு வீதிகளிலுள்ள மின் விளக்குகளையும் சேதப்படுத்தினர்.

#### சென்னையில்

ஹைலக் பகுதியிலுள்ள நடேசன்சாலையில் இருபகுதியினருக்கிடையே நடைபெற்ற கைகலப்பில் 10பேர் காயமடைந்தனர். இக்கைகலப்பை ஒட்டி 20 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தியுள்ளனர்.

#### பறங்கிமலையில்

பிரபல சினிமா நடிகர் எம். ஜி ராமச்சந்திரன் போட்டியிட்ட பறங்கிமலை சட்டமன்றத் தொகுதியிலுள்ள புரசைவாக்கம் பகுதியில் ஒருவர் கத்திக்குத்துக்குப்பலியானதை அடுத்து அங்கு பதட்டநிலை உருவாகியுள்ளது இப்பகுதிகளில் ஆயுதம்தாங்கிய பொலிசார் ரோந்துசுற்றிவருகின்றனர்.

#### இன்று

தமிழ் நாட்டில் இரண்டாவது வாக்களிப்பு இன்று (வியாழக்கிழமை) ஆரம்பமாகிறது. தமிழ் நாட்டிலுள்ள 13 லோகசபைத்தொகுதிகளிலும் இவற்றில் அடங்கியிருக்கும் 28 சட்டசபைத் தொகுதிகளிலும் இன்று வாக்களிப்பு ஆரம்பமாகும்.

#### புதுச்சேரி

புதுச்சேரிக்கான ஒரேஒரு லோகசபைத் தொகுதியிலும் இன்று வாக்களிப்பு நடைபெறும்.

## தேயிலை ஏற்றுமதி அதிகரிப்பு

கோட்டை, செவ்.

இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து திருக்கோணமலைத்துறைமுகத்தினூடாக தேயிலை ஏற்றுமதி அதிகரித்துள்ளது ஜனவரி மாதம் ஒரு கோடியே 35 லட்சம் ரூத்தலுக்கும் அதிகமானதேயிலையை இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது.

இத்தேயிலையில் 80 லட்சம் ரூத்தல் தேயிலையை பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் பெற்றுள்ளன. மிகுதி கனடா நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது.

## புதிய அரசியல் திட்டம் மார்ச் 14 முதல் தயாராகும்

கொழும்பு, புதன்

இலங்கைக்கான புதிய அரசியல் திட்டத்தை மார்ச் 14-ம் திகதியிலிருந்து அரசியல் நிர்ணயசபை தயாரிக்கவிருக்கிறது.

புதிய அரசியல் திட்ட வழிகாட்டு, விஷயாலோசனைக் கமிட்டிகளினால் தயாரிக்கப்பட்ட அரசியல்திட்ட அடிப்படைத் தீர்மானங்களை முதலில் அரசியல் நிர்ணயசபை ஆராயும் அரசியல் திட்ட அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வாவினால் அரசாங்கத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட 38 அடிப்படைத் தீர்மானங்களுடன், எதிர்க்கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களும் தீர்மானங்களாக இச்சபையில் சமர்ப்பிக்கப்படும்.

இந்தத் தீர்மானங்கள் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதோடு, மார்ச் மாம் 17-ம் திகதிக்கு முன்பாக அவர்களிடமிருந்து விருப்பத் தீர்மானங்களும் வேண்டப்பட்டுள்ளன. அரசியல் நிர்ணயசபை கூடி அடிப்படைத் தீர்மானங்கள் பற்றி ஆராய்ந்து முடிவு செய்ததும், அந்த அடிப்படைத் தீர்மானங்களின் அடிப்படையில் புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிக்கும்படி வழிகாட்டு, விஷயாலோசனைக் குழுக்களிடம் பணிக்கப்படும்.

தேவை ஏற்படும்பட்சத்தில் சில விஷயங்களையும் பற்றி ஆராய அரசியல் நிர்ணயசபை பல குழுக்களாகப் பிரிந்து செயல்படும். இந்தக் குழுக்கள் பொதுமக்களிடமிருந்து எழுத்துமூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ சாட்சியங்களைக் கேட்பதற்கு அதிகாரமுடையதாக இருக்கும்.

புதிய அரசியல் திட்டம் தயாரிக்கப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் பொதுமக்களும் அதில் பங்குகொள்ள வகை செய்யப்படும் என்ற அரசாங்கத்தின் முன்னைய அறிவித்தலை மனதிற்கொண்டே இக்குழுக்களுக்கு இவ்வதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்கள் அமைக்கப்பட்ட இரு மாத காலத்துக்குள் தங்கள் வேலையை முடித்துக்கொள்ளும் இதன் பின்பு வழிகாட்டு விஷயாலோசனைக் குழுக்கள். ஏனைய குழுக்கள் தயாரித்த அறிக்கைகளைக்கொண்டு, இறுதியான அரசியல் திட்டம் தயாராகும். புதிய அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்டதும், அரசியல் திட்ட அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா அரசியல் நிர்ணயசபையில் அதைச் சமர்ப்பிப்பார் "சுதந்திரமான சுயாதீனமான. சுயேட்சையான ஸ்ரீலங்கா மக்களின் அரசியல் திட்டம்" என இது அழைக்கப்படும். அரசியல் நிர்ணயசபையால் இவ்வரசியல் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இலங்கை ஸ்ரீலங்கா குடியரசாகும் (சி பி ஏ)

## மூளையில் காந்த உருண்டையைச் செலுத்தல்

வாஷிங்டன், மார்ச் 3

மூளையில் அறுவைசிகிச்சை செய்ய முடியாத பகுதிகளுக்குள் மருந்து செலுத்துவது எப்படி?

மூளையில் வெகு ஆழத்தில் உள்ள புற்றுநோயைத் தீர்க்கமுயலும் மருத்துவர்களுக்கு நீண்டகாலமாக இருந்து வரும் பிரச்னை இது.

இதற்குஇப்பொழுதுஅமெரிக்க மருத்துவர்களும் அறுவை மருத்துவர்களும் அடங்கிய ஒரு குழுவினர் விடை கண்டுபிடித்திருக்கின்றனர். அவர்கள் காந்தஉருண்டை ஒன்றை மூளையின் ரத்தக்குளாய்க்குள் செலுத்துகின்றனர். பின்னர் இரண்டு காந்தங்களைத் தலைக்கு வெளியே நகர்த்திக்கொண்டிருந்து அந்த உருண்டையை மூளையில் ரத்தக்குழாய் வழியாக வரச்செய்கின்றனர்.

மூளைக்குள்ளேஉள்ளகாந்த உருளையை சின்னஞ்சிறு ரத்தக்குழாய் வழியாகக்கூட செலுத்த முடியும். இதற்கு வெளியேயுள்ள காந்தங்களைச் சுழலச் செய்கின்றனர். இவற்றின்காந்தவிசைமூளைக்குள் இருக்கும் காந்த உருண்டையைத் துல்லியமாகக் கட்டுப்பாடு செய்ய வகை செய்கிறது. எக்ஸ்-றே கருவி ஒன்று இப்பணியைக் கண்காணிக்கிறது. இது ஒரு பெரிய விஞ்ஞான நுட்பச் சாதனை என்றும், இப்பணியை மிகத் துல்லியமாகச் செய்யமுடியும் என்றும் மூளையில் இருக்கும் ரத்தக்குழாய் அறுந்துபோகாமல் இருக்க வகை செய்யும் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆய்வுக்கூடங்களில் விலங்குகளை வைத்து பல ஆண்டுகளாக ஆராய்ச்சி நடத்திய பிறகு முதன் முதலாக இந்த

(16-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி அரசியலும் ஜனநாயகமும்- ஜே. ஆர்.-டட்லி கருத்து வேற்றுமை



ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவு ஏற்படப் போகிறதா? அக்கட்சியின் உபதலைவரும், பாரிலிமெண்டில் எதிர்க்கட்சித் தலைவருமாக உள்ள திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா. அக்கட்சியிலிருந்து விலகி அரசாங்கக் கட்சியில் சேருவாரா? அவருடன் வேறு யாரும் கட்சி மாறுவார்களா? இலங்கையின் புதிய அரசியல் அமைப்பின்படி அரசியல் கட்சிகளுக்கே இனி இடமிராதா? என்ற பல முக்கிய கேள்விகள் இப்போது அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளன.

சென்ற வியாழனன்று கூடிய ஐக்கியதேசியக் கட்சியின் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா சமர்ப்பித்த ஒரு முக்கியமான விஞ்ஞாபனத்தின் பயனாக இலங்கை அரசியலில் புதியதோர் நிலை ஏற்பட்டுள்ளது. இப்போதுள்ள கூட்டரசாங்கத்திற்கு பார்லிமெண்டில் இதுவரை எந்த அரசாங்கத்திற்குமில்லாதபடி பெருவாரி பலம் இருப்பதாயும் அத்துடன் யு. என். பி. ஒத்துழைத்து தனது பழையபோக்கை மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதே திரு. ஜே. ஆர். கூறியுள்ள யோசனை. அக்கட்சியின் காரியக்கமிட்டி

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

## அரசியல் அரங்கு

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

யில் 4 மணிநேரம் இதுபற்றி விவாதம் நடந்தது. அரசாங்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி அளவுக்கு மிஞ்சி ஒத்துழைப்பதாயும் தீவிரமான எதிர்ப்புக் காட்டவில்லையென்பதே காரியக்கமிட்டியின் பொதுக்கருத்தென்றும் ஜனநாயகத்திற்கு மாறான நடவடிக்கைகளையெல்லாம் யு. என். பி. எதிர்க்கும் என்ற ஒரே வாக்கிய மடங்கிய அறிக்கையை யு. என். பி. காரியக்கமிட்டி விடுத்துள்ளதென்றும் தலைவர் டட்லி சேனநாயகா இதுபற்றி வெளியிட்டுள்ள பதிலில் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்விரு தலைவர்களுக்கும் கருத்து வேற்றுமைகள் இருந்து வருவது பகிரங்க ரகசியம். அவ்வேற்றுமைகள் இப்போது அம்பலமாகியுள்ளன. யு. என் பி. கட்சித் தலைமைப்பீடம், ஜே. ஆரின் புதிய யோசனையை ஆதரிக்கவில்லை. பெரும்பான்மையோரின் கருத்தையேற்று அவர் இனியும் அக்கட்சியில் தொடர்ந்து இருந்து வருவாரா? அல்லது அதிலிருந்து விலகி அரசாங்கக் கட்சியில் சேருவாரா? இக்கேள்விக்கான பதில் வெகு சீக்கிரத்தில் தெரிந்துவிடும். எப்படியும் யு என். பி.கட்சியில் ஏற்பட்டுள்ள இக்கருத்து வேற்றுமை அக்கட்சியின் பலத்தைப் பலப்படுத்த உதவாது.

ஜனநாயகஅரசியல் அமைப்பு அமுலிலுள்ள இந்தியாவில் பல அரசியல் கட்சிகளுள்ளன. பிரிட்டன், அமெரிக்கா முதலிய ஜனநாயக நாடுகளிலும் கட்சிமுறை இருந்து வருகின்றது. இதிலிருந்து கட்சிமுறை இல்லாவிடில் ஜனநாயகமும் இல்லையென்று வாதிப்பது அவ்வளவு சரியாகுமா? கட்சி முறையால் புதிதாக சுதந்திரமடைந்த இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள பலாபலன்கள் என்ன என்பதைப் பற்றி நிதானமாக விருப்பு வெறுப்பின்றி யோசிக்கவேண்டும். பல நூற்றுண்டுகளுக்குப்பின் அரசியல் விடுதலை அடைந்த இலங்கை போன்ற நாடுகளில் தீர்க்கப்படவேண்டிய தேசியப் பிரச்னைகள் பல மலைபோல் உள்ளன. அந்நி



யர் ஆட்சிசெய்தபோது பிரித்தாளும் தந்திரத்தை பயன்படுத்தினர். அதை மாற்றித் தேசிய ஒற்றுமை ஏற்படுத்த வேண்டியது முதல்வேலை தேசிய ஒற்றுமை ஏற்பட்டால்தான் வேலையில்லாப் பிரச்னை உள்ளிட்டுப் பல பொருளாதாரக் கஷ்டங்களையும் வெற்றிகரமாகத் தீர்க்க முடியும்.

பிரிட்டனில் கட்சி அரசியல் இருப்பினும், யுத்த காலம் போன்ற தேசிய நெருக்கடியில், கட்சி அரசியலை ஒதுக்கி, தேசிய அரசாங்கத்தை அமைத்தார்கள். அதுபோல நம் இலங்கை விடுதலை அடைந்துள்ள இச்சமயத்தில் ஏற்பட்டுள்ள தேசியப் பிரச்னைகள் கொஞ்சமல்ல. அவற்றைத் தீர்க்க ஒரு தேசிய அரசாங்கமேதேவையேயன்றி, கட்சி அரசியலல்ல. கட்சி அரசியலால், நாட்டில் போட்டிப் பிளவுகள் ஏற்படுவதையும், மக்கள் சக்தியின் பெரும் பகுதி இக்கட்சிப் போட்டிகளில் விரயமாவதையும், நாட்டின் ஒற்றுமை குலைவதையும் பார்க்கிறோம்; தேர்தல் காலத்தில் வகுப்புவாத உணர்ச்சிகள் அதிகரிக்கின்றன. சிறப்பாக இலங்கையில் சிறுபான்மைச் சமூகமாகவுள்ள தமிழரின் மொழி உரிமையைப் பறிப்பதில் யு. என் பி யும் சுதந்திரக் கட்சியும் போட்டாபோட்டிகள்போட்டு, பீரங்கிக் காவலுடன், மொழிச்சட்டத்தை நிறைவேற்றியுள்ளதை நினைவுகூருகையில், கட்சி அரசியல் நாட்டு ஒற்றுமைக்கும் சிறப்பாக சிறுபான்மைச் சமூகத்தவருக்கும் நல்லதா என்பது மிகவும் சந்தேகம்.

தலைமைப் பதவிக்காகவும், ஆட்சி அதிகாரத்துக்காகவும், பலர் பலபல புதிய கட்சிகளை ஆரம்பிப்பதைப் பார்க்கிறோம். பொதுமக்களுக்கு இதனால் பெரும் குழப்பமும் சங்கடங்களும் ஏற்படுகின்றன. புதிதாகச் சுதந்திரமடைந்துள்ள இலங்கைபோன்ற ஒரு நாட்டில் தேசிய ஒற்றுமை ஏற்படமுடியாமற் போகின்றது மக்களின் நன்மையை விட நாட்டின் நன்மையை விட கட்சியின் நன்மையே முக்கியமாகக் கருதப்படுகின்றது. இந்த அவல நிலையை மாற்றி, நமது முக்கிய தேசீயப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளும் வரையிலாவது. அதாவது சுமார் 25 வருட காலத்துக்காவது கட்சி அரசியலைவிட்டு, தேசிய ஒற்றுமையை வளர்க்கக்கூடிய அரசியல் முறையைக் கைக்கொள்வது நாட்டின் நன்மைக்கு மிக அவசியமாகும்.

இலங்கையிலேகமிட்டி அரசியல்முறை இருந்தபோது வகுப்புவாதம் தலைதூக்கவில்லை. நாட்டில் ஒற்றுமை நிலவியது. ஜனநாயகமென்பது நாட்டிலுள்ள ஒவ்வொருவரின் நன்மையையும் பாதுகாக்கவேண்டுமேயன்றி, பெரும்பான்மை மக்களின் நன்மையை மட்டுமல்ல. எந்த அரசியல்முறையிலும்குறைகள் இருக்கலாம். ஆனால் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள அரசியல் தவறுகளை உணர்ந்து, அதனால் பாடம் கற்று அதைத் திருத்திக்கொள்ளக்கூடிய வழிவகைகளைக் காண்பதே. தேசாபிமானமும், அறிவுடைமையுமாகும்.

உரிமை இழந்துள்ள தமிழ் சமூகத்தாரும், கட்சிவேற்றுமைகளை விட்டு, ஒன்றுபட்டு ஒத்துழைக்கவேண்டிய அவசியத்தை இப்போது உணர்ந்துவருவது குறிப்பிடத்தக்கது. அவர்கள் ஒற்றுமைப்பட்டால்தான் மற்றவர்களும் அவர்களை மதித்து அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க முடியும். கட்சி அரசியல் மாறி, தேசிய அரசாங்கம் ஏற்படுவதாயின், சிறுபான்மைச் சமூக நன்மைகள் பாதுகாக்கப்படுவதுடன், அவர்களும் நாட்டு அரசியலில் சரிசமமாக இருந்து பங்குபற்ற முடியும்.

அதிகாரத்திலுள்ள ஒரு கட்சியுடன் ஒத்துழைப்பதன்மூலம் தமிழர் தங்கள் உரிமைகளைப் பெறலாமென்ற நம்பிக்கை, சென்ற சில வருட அனுபவத்தில், சிதைந்துவிட்டது. கட்சி

— பராசரன் —

அடிப்படையிலன்றி தேசிய அடிப்படையிலேயே தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள இப்பொழுது தமிழருக்கு நல்லதோர் வாய்ப்புக் கிடைத்துள்ளது. தமிழ் மொழி உரிமை, சமஷ்டி முறை இவற்றைப்பற்றியும் அரசியல் நிர்ணய சபையில் பரிசீலனை செய்ய இப்போது வாய்ப்புக் கிடைத்துள்ளதாயின், அதற்குக் காரணம் தமிழ்த் தலைவர்களுக்குள்ளாக ஏற்பட்டுள்ள புதிய ஒற்றுமைதான். கட்சிவேற்றுமைகளை தமிழ்த்தலைவர்கள் மறந்து, தமிழ் சமூகத்தின் பொது நன்மையைப் பாதுகாக்க தங்களிடையே விட்டுக்கொடுத்து ஒத்துழைப்பது எவ்வளவு அவசியமோ அதேபோல, எல்லாக் கட்சியினரும் நாட்டு நன்மைக்காக ஒற்றுமைக்காகதங்களிடையேவிட்டுக் கொடுத்து ஒத்துழைக்க வேண்டிய சமயம் வந்துவிட்டது புதிய அரசியலை வகுப்பதில்மட்டுமல்ல. பின்னர் அதை மேலான முறையில் நடத்திவைக்கவும் நமது பிரதிநிதிகளிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவசியமாகும். கட்சி அரசியலில் சில நன்மைகள் இருக்கக்கூடும். என்றாலும், நம் நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்க, கட்சி அரசியலைவிட, தேசிய அரசியலே உதவுவதாக இருக்கும். தமிழர் போன்ற சிறுபான்மைச் சமூகத்தின் உண்மைப் பாதுகாப்பு மகாத்மாகாந்தி கூறியதுபோல், பெரும்பான்மை சமூகத்தவரின் நல்லெண்ணத்திலும் அபிமானத்திலும்தான் பெரிதும் தங்கியிருக்கும். அதே சமயம் சிறுபான்மைச் சமூகத்தவர் திருப்தியுடன் பயமின்றி வாழ்வதில்தான், ஜனநாயக வெற்றியும் அடங்கி இருக்கும்.

# தம்பர் மாஸ்டர் ஞாபகார்த்தமலர்

யாழ்ப்பாணம், வியாழன்

காலஞ்சென்ற முன்னாள் யாழ். மத்திய கல்லூரி அதிபர் ஏ. ஈ. தம்பரின் ஞாபகார்த்தமாக ஒரு மலர் வெளியிடுவதென நேற்று யாழ்ப்பாணத்தில் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மலரில், தம்பர்மாஸ்டரின் சொந்தக் கட்டுரைகள், அவரது நண்பர்களின் கட்டுரைகள், தம்பர் மாஸ்டர் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் இடம் பெறும்.

இக்கூட்டத்தில் 'தம்பர் ஞாபகார்த்த குழு' ஒன்று தெரிவு செய்யப்பட்டது. இக்குழுத் தலைவராக திரு. எஸ். ஆர். கனகநாயகமும், இணைச் செயலாளர்களாக திரு. ரி புத்திரசிங்கம், திரு. எம். பரமானந்தம் ஆகியோரும், கூட்டுப் பொருளாளர்களாக திருவாளர்கள் ஆர். கே, ராஜசேனன், ஏ. ராஜதுரைசிங்கம், ராம் குமாரசாமி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். ஆசிரியர் குழுவிற்கு திருவாளர்கள் என். சபாரத்தினம், எஸ். அம்பிகைபாகன், ரி. சீனிவாசகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். குழு உறுப்பினர்களாக மேற்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர், திருவாளர்கள் கே. நேசையா, என், எஸ். இரத்தினசிங்கம், ஈ. சபாலிங்கம், ஏ. குலேந்திரன், சி. மாணிக்கவாசகர், சி. வைரமுத்து. எஸ். ஏச். பேரின்பநாயகம்.

தம்பர்மாஸ்டரின் 31-வது தினமான மார்ச் 20-ம் தேதி நடக்கும் வைபவத்தில், ஞாபகார்த்த மலர்பற்றிய விபரங்களடங்கிய சிறு புத்தகமொன்று வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. ஞாபகார்த்த மலரை மே மாதம் 6-ம் தேதி வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 4- 3- 71

**344 மீ அன் 61மீ**

(செய்திகள்: காலை6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 பௌத்தநற்சிந்தனை, 6-40 துதிப்பாடல்கள், 7-15மெல்லிசை 7-45 திரைகானம், 8 - 00 இசைவேளை, 8-15 பேச்சு. 8-30 சைவநீதி,

**344மீ அன் 49 மீ**

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 தொழிலாளருடன், 10-30படத்திலிருந்து 11-15 சிறுவர்மலர், 12-00 எமதிதி, 1.05 பெண்ணுலகம்.

**344 மீ அன்ட் 61 மீ**

4-30சங்கமம், 5-00பிறந்த தின வாழ்த்துகள், 5-30 பாட்டு 6-15மெல்லிசை7-00 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 7-30 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு. 9- 45 பாட்டு, 10-30 செய்தி

NIKONA SALES

நிகோந

ஏல நிலையம்

யாழ்ப்பாணத்தின் ஒரே ஒரு ஏலநிலையம் இதுவே!

எல்லாப்பொருட்களுக்கும் விலை குறிக்கப்பட்டுள்ளன.
எவ்வேளையிலும் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
நீங்கள் விற்கவேண்டிய பொருள்களைப் பாவனையாளரின் பார்வைக்குத் தருவது இந்நிலையம்.

தயவு செய்து காரியாலய நேரத்தில் ஒருமுறை விஜயஞ் செய்யுங்கள்!

2-வதுமாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம்,
ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

எஸ். நரசிங்கம் J. P.
ஏல விற்பனையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைப்பாறுகிறீர்களா?

ஜெயசீலன்! வணக்கம் நண்பரே பல நாட்களாய்க் காணவில்லையே!

நடராசன்! என்ன எங்கே போகிறீர்கள்?

ஜெய: நான் இளைப்பாறுவதற்குப் போகிறேன் இப்போது வயதும் வந்துவிட்டது. ஐம்பத்தைந்தும் பூர்த்தியாகிவிட்டது.

நட: அப்படியா? இப்ப என்ன செய்யவேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்? வீட்டில் இருப்பது விருப்பமா? உங்களைப் பார்த்தால் ஐம்பத்தைந்து வயதுள்ளவர் என்று சொல்ல முடியாது. திடகாத்திரமுள்ள உடம்பு உங்களுக்கு உண்டு. இளைப்பாறிவிட்டீர்கள் என்று எண்ணி முயற்சியில்லாமல் இருக்கக்கூடாது. ஏதாவது செய்யும் யோசனையுண்டா?

ஜெய: என்ன செய்யலாம் என்று முடிவுக்கு நான் இன்னும் வரவில்லை. தனியார் துறையிலும் பென்ஷனியர்களுக்கு இடம் கிடைப்பது மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது.

நட: நண்பரே, எனக்கு நன்றாகத் தெரிந்த விஷயமொன்றை நான் உங்களிடம் சொல்வேன் கேளுங்கள். இளைப்பாறிய தினம் வரை நல்ல சௌக்கியத்தோடு இருந்த பலர் இளைப்பாறிய உடனே அடிக்கடி நோயாளியாகி விரைவில் மறு உலகத்துக்கும் போய்விடுகிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒருவர் இளைப்பாறிய பின்பும் வழக்கம்போல காலையில் எழுந்து 'ஸேவ்' எடுத்து தேநீர் அருந்திவிட்டு பஸ்ஸிலே கொழும்புக்குப்போய் அங்குமிங்கும் அலைந்து திரிந்து மாலையில் வீட்டுக்குத் திரும்புவார், தினமும் தவறாமல் அவர் இப்படியே செய்கிறார். இப்படிச் செய்தால் பலகாலம் நோயில்லாமற் சீவிக்கலாம் என்பது அவரது எண்ணம்.

இளைப்பாறிய உடனே வேறு வேலை எதுவும் இல்லாமல் வீட்டிலே சாய்ந்த நாற்காலியிலேயே தங்கியிருக்கிற பலருக்கு பல நோய்கள் வரும். 'நான் ஒரு செல்லாக் காசாய்ப் போனேனே. நெஞ்சிலும் நோவு. ஒரு கையிலும் வருத்தம் எப்பொழுதும் குளிராக (Chill) இருக்கிறதே. ஊம் என்ன நடக்கப் போகிறது என்று தெரியாதே. என் நெஞ்சு எரிகிறதே' என்பதுபோன்ற எண்ணங்கள் வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு ஏற்படுவது இயற்கை!

ஜெய: நீங்கள் கூறுவது உண்மைதான் பல வருடங்கள் அரசாங்க வேலையில் இருந்தும் சேமித்த பணம் எதுவும் இல்லை. பணமில்லாமல் எதையும் ஆரம்பிப்பதும் எப்படி? அதைவிடச் சேரவேண்டிய பணம் எடுப்பதிற்கும் இன்னும் பல வருடங்கள் செல்லும்.

நட: அது எப்படி? உங்களுக்குப் பைத்தியமா? பென்ஷன் எடுக்கிறவனுக்குச் சேரவேண்டிய பணம் ஒரு மாதத்துக்குள் தருவதற்காக எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்று காலையும்மாலையும் வானொலி மூலமாகப் பிரசாரஞ் செய்வது. நீங்கள் கேட்கவில்லையா? மாதந்தோறும் பணத்தைத் தருவதற்கு சகல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது நமது அரசாங்கம்.

ஜெய: நீங்கள் கூறுகிறது உண்மைதான். ஆனால் எனக்கு இதுவரையில் ஒரு சதமும் கிடைக்கவில்லை அது இல்லை, இது இல்லை, இது நமது பொறுப்பல்ல உங்களுடைய திணைக்களத்தின் பிழை மிகக் கவலைப்படுகிறேன் போன்ற பேச்சு மாத்திரமே கிடைத்தன! நாலு மாதகாலம் அங்குமிங்கும் போவதில் கையிலிருந்து பணமும் வீணாகச் செலவு செய்தேனே.

நட: அதுவும் உண்மைதான். ஆனால் மற்றவர்களுடைய குற்றங்களுக்காக நாம் உயிர் விடலாமா? இளைப்பாறவேண்டிய நாள் திடீரென்று நிகழவில்லை, இளைப்பாறவேண்டிய நாளை அறிந்த நாளிலிருந்து தக்க திட்டத்தைப்பற்றி யோசிக்க வேண்டும். அதன்படி செய்வதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

ஜெய: ஆமியிர் நண்பா, என்னைப்போன்ற பென்ஷனியர்களால் செய்யக்கூடிய ஏதேனும் வேலைகளைப்பற்றி நீர் அறிவீரா?

நட: ஆமாம். சிலர் சிறிய வியாபாரம் ஆரம்பிக்கலாம். பெரிய முதலை உபயோகிக்காமல் இதனைச்செய்யலாம், இன்னும் காணி பூமி இருக்கிறவர் கமமும் பயிர்வேலையும் ஆரம்பிக்கலாம், ரேடியோ, கடிகாரம் திருத்தல் செய்வதுபோன்ற வேலைகளை அறிவுள்ளவர்கள் ஆரம்பிக்கலாம். இதுபோலவே தனக்கு ஏற்ற ஏதாவது தொழிலைப் பற்றி முந்தியோசித்துக்கொண்டு அப்படியே செய்யலாம். எப்படியிருந்தாலும் நாள்தோறும் இரண்டு மூன்று மைல்கள் நடப்பதற்கு மறவாதீர்கள்.

ஜெய: மிக நன்றி. உங்களுடைய பேச்சு எனக்குப் புத்துயிர் ஊட்டியது. தங்களுடைய புத்தியின்படி நானும் செய்வேன்.

நட: மிக சந்தோஷம். உங்களைப்போன்றவர்களுடன் சில நிமிடங்கள் சம்பாஷிப்பதிலும் பெருமையடைகிறேன். ஐம்பத்தைந்தில் இளைப்பாறுவதைப்பற்றி சில குறிப்புகள் கூறுகிறேன்.

ஜெய: சொல்லுங்கள் ஐயா. மிக கவனத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

நட: நான் நினைக்கிறபடி புதிய வாழ்க்கையொன்றை ஆரம்பிப்பதற்காகச் சிறந்த வயது 56 ஆகும். உடம்பு திடகாத்திரமாயிருக்கும். மனதும் வளர்ந்து உறுதியாகிவிடும். தேக பலமும் உண்டு. 60 வந்தால் புதியதொரு வேலை தொடங்கமுடியாது. ஞாபக சக்தி, மன உறுதி இருக்கிற 55-ல் புதியதொரு வேலை ஆரம்பிப்பது சுலபம். தமது பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுக்கும் நேரம் கிடைக்கும். உத்தியோகத்தில் ஈடுபடுகிற பலருக்கு தமது பிள்ளைகளுக்காகச் செய்யவேண்டியதைச் செய்வதற்கு நேரம் கிடைக்காமற்போவது சகஜம். அப்படிப்பட்டவர்களுக்கு 55-ல் இளைப்பாறுவது மாறுவேடத்தில் வந்து ஆசிர்வாதம் என்று சொல்லலாம்.

வேண்டிய அளவுக்கு காணி பூமியிருந்தால் அதிலே வீட்டுக்குத் தேவையான மரக்கறி வகைகளும் பழவகையும் பயிரிடுவதற்கு [illegible] கப்படவேண்டும் [illegible] புக்கும் நல்லது. புத்தம் புதிய மரக்கறிகளும் பழங்களும் சாப்பிடலாம். வீட்டிலே சும்மா இருப்பதைவிட மாதாந்தம் வருகிற பென்ஷனைவிடச் சிறப்பான வேலை இதுதான். பணமும் ஆரோக்கியமும் கிடைக்கிற சொகுசான வழி. இளைப்பாறியவர்கள் நினைக்கவேண்டிய விடயம் இதுதானே.

ஜெய: ஓம் ஐயா, நானும் கமஞ்செய்ய வேண்டும். எனக்குச் சில துண்டுவயல்கள் இருக்கின்றன. அரசாங்கமும் தூண்டுதல் செய்கிறதல்லவா? உடனே ஆரம்பிக்கவேண்டும், இடையில் பென்ஷன் பணமும் வந்தால் மகிழ்ச்சியுடன் அதையும் பெறலாம்.

நட: மிக நன்றி அப்படியே செய்யும்.

ஜெய: [illegible]

இளைப்பாறிய சிங்கள ஆசிரியர்
டி. டி. நாணயக்கார
எழுதுகிறார்

# திருநெல்வேலி சைவ அநாதசாலை

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அனுபவம், அறிவு, வயது இவைகளால் முதிர்ந்த பெரியார் ஒருவர் தம் பெயரை வெளிப்படுத்தாமல் சைவ அநாதைப்பிள்ளைகளுக்கு விசேட உணவு வழங்கும்படி ரூபா 100/- அன்பளிப்புச் செய்தார்கள். அடுத்து நான்கு சுக்கிரவாரங்களில் மத்திய உணவின்மேல் நூற்றுக்கணக்கான அநாதப் பிள்ளைகளுக்குக் குறிப்பிட்ட பணஉதவி கொண்டு பாயசம் வழங்கப்பட்டது. பிள்ளைகள் பாயசம் அருந்தித் திருப்தியுற்று மகிழ்ந்தார்கள் பிள்ளைகளின் திருப்தியின் விளைவு செல்லும் உலகத்துக்குச் சேர்த்து வைப்பதொரு புண்ணிய விதை முதலாகும்.

குறிப்பிட்ட பெரியார் சைவ அநாதசாலையின் அபிவிருத்தி குறித்து நீண்டதொரு கடிதம் சைவவித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் அத்துவக்காத்து திரு எஸ். ஆர் கனகநாயகம் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். அக்கடிதம் முக்கியமான பல அம்சங்களைக் கொண்டது. அவற்றைத் தொகுத்துக் கீழே தருகிறோம்.

1 முதலில் குறிப்பிட்ட கடிதத்தில் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் உயிர் நாடியாய் விளங்கிய திரு சு. இராசரத்தினம் அவர்கள் பாராட்டப்படுகின்றார்கள்.

180 பாடசாலைகளை நடத்தியும் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் 500க்கு மேற்பட்ட ஆசிரியைகளையும் சைவாசிரிய கலாசாலையைத் தாபித்து அதன்மூலம் தந்ததும் எத்தனையோ பண்டிதர்கள், வித்துவான்கள் சைவப் புலவர்கள் ஆசிரியர்களுக்குள் தோன்றிச் சமயத்துக்கும், தமிழுக்கும் சேவை செய்து வருவதும் திரு. இராசரத்தினம் அவர்களின் உழைப்பின் விளைவே என்று காட்டப்பட்டது.

2. அதன்மேல் திரு. சு. இராசரத்தினம் அவர்களின் அரும்பெருஞ் சேவைகளுள் சிரோரத்தினமாய் விளங்குவது திருநெல்வேலிச் சைவ அநாதசாலையேயாம் என்பதைப் பெரியார் எடுத்துக் காட்டுகின்றார். இச்சாலை இல்லையேல் ஆயிரக்கணக்கான அநாதர்கள் தமக்கொரு பற்றுக்கோடின்றி மதம் மாறியிருப்பார்கள். அவர்களைப்பாதுகாத்த புண்ணியம் சாதாரணமானதன்று. அநாதர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் ஆசிரியர்களாயும், கிளறிக்கல் உத்தியோகத்தர்களாயும், ஆங்கில பட்டதாரிகளாயும் பெரிய மகாவித்தியாலய அதிபர்களாயும் இருக்கிறார்கள்.

நெடுந்தீவிலுள்ள பிள்ளை ஒருவர் சைவ அநாதசாலைத் தொடக்க காலத்தில் குழந்தையாய்ச் சேர்ந்தவர். பின் சைவ ஆசிரிய கலாசாலையிற் பயின்று ஆசிரியராகக் கிளிநொச்சியிற் பத்தாம் வாய்க்காலில் உள்ள பெரிய பாடசாலையில் தலைமை ஆசிரியராய்ப் பின் அங்கே மகாவித்தியாலய அதிபராய் இப்பொழுது இளைப்பாறி அங்கேயானே இருக்கின்றார் இவர் இடையில் வடக்கே காந்தி ஆசிரமங்களிலும் பயின்றவர் இப்பொழுது இவர் கிளிநொச்சியில் அரசாங்க உதவிப்பணம் பெறாமலே கள் மழைபோல் வழங்க இருக்கிறார்கள் என்பதும் பெரியார் சொல்லும் அரிய புத்திமதி.

சைவாசிரிய கலாசாலையிற் பயின்ற ஆசிரியர்கள் அநாதர்களில் உத்தியோகத்திலிருப்பவர்கள் மற்றும் பரோபகார சிந்தனையுள்ளவர்கள் சேர்ந்ததொரு அணிவகுப்பு அத்தியாவசியம். அவர்களால் வேண்டிய தொகை சேர்த்து உதவ முடியும்.

எல்லோரையும் இயக்குவதொரு நல்ல நிர்வாகக்குழு வேண்டும். இக்குழுவை பல துறைப்பட்ட அறிவாற்றலும் அனுபவமும் படைத்தவரும் இப்பொழுதைய சைவவித்தியா விருத்திச் சங்கத் தலைவருமான எஸ். ஆர். கனகநாயகம் அவர்களே திறம்பட அமைத்துத் த[illegible]

அறுபத்தைந்து (65) ஆண்களும் பெண்களும் கொண்ட அநாத இல்லம் ஒன்றை நடத்தி வருகின்றார் என்பதை அறிந்து பிரமிப்பு உண்டாகின்றது. இவருடைய பெயர் இரத்தினம் என வழங்கும், சுகிரவேலு. இவருடன் காந்தியாசிரமத்திற் பயின்ற மற்றொரு ஆசிரியரும் சேர்ந்து உழைத்து வருகின்றார்.

கிளிநொச்சியில் அரசாங்க உதவியுடன் அநாதசாலை ஒன்று நடத்தும் பிரசித்தி பெற்ற சி. க. வேலாயுதபிள்ளையும் சைவ அநாதசாலை தந்த ஒருவரேயாம். இவ்வகையாக அநாதசாலையின் பயன் தெரிதாம்.

இவ்வநாதசாலையை மேலும் நல்ல முறையில் வளர்க்கப் பெரியார் சில வழிகளை எடுத்துக் காட்டுகின்றார்,

அநாதசாலையின் வருடச் செலவின் இருபது மடங்கு முதல் மூலநிதியாய்ச் சேர்க்க வேண்டுமென்பதும் எத்தனையோ தர்மசீலர்கள், செல்வர்கள் பரோபகாரிகள் பிள்ளைச் செல்வமில்லாதவர் வேண்டுமென்பது பெரியாரின் மதிப்பிற்குரிய வேண்டுகோள்.

3. இன்னும் பெரியார் அவர்களின் நல்ல சிந்தனைகளை அடுத்துச் சிந்திக்க வேண்டியவைகள் உண்டு.

தாய் தகப்பன் இருந்தும் மோசமான அநாதர்களுமுண்டு, அவர்களையும் சேர்க்க வேண்டும். சேர்க்கும் வழிவகைகளையும் அநாதசாலை நிர்வாகிகளே செய்ய வேண்டும். அநாதசாலையை வந்தடைந்தவர்களை வயசு வந்ததும் வெளியே அகற்றக்கூடாது. அநாதர்களின் ஆற்றலுக்கேற்பத் தரம் பிரித்து விசேஷ கல்வித்துறைகளிலும் தொழிற்றுறைகளிலும் பயிற்சி அளித்து வாழ வழிகாட்டவேண்டும், காட்டுதற்கு நிரம்பிய வழிகள் உண்டு விரிந்த மனம் படைத்த நிர்வாகக் குழுவை அமைத்துக்கொண்டால் வரானவெல்லாம் வலிந்து வந்துசேரும் இலவச உதவிக்கு எத்தனையோ பேர் இடைப்பார்கள். ஒவ்வொருவரிடமும் மறைந்து கிடக்


(14-ம் பக்கம் பார்க்க)

நிரந்தர சேமிப்புக்கு கீழ்
குறித்தபடி வட்டி கொடுக்கப்படும்
ரூபா 1000/- க்கு மேல் வருடம் 8 சத வீதம்
ரூபா 10000/-க்கு மேல் வருடம் 9 சத வீதம்
ரூபா 3000/- வரை சேமிப்பை 15 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.
ரூபா 5000/- வரை சேமிப்பை 30 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.
ரூபா 10000/- வரை சேமிப்பை 60 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்,
ரூபா 10000/- க்கு மேற்பட்ட சேமிப்பை 90 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.
குறிப்பு:-
அறிவித்த நாள் தொடக்கம் வட்டி கொடுக்கப்பட மாட்டாது
மறு விபரங்கட்கு:-
தம்பி அன் கோ.,
திருநெல்வேலி — வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைரேகை அனுபவம் – 12

# அதிர்ஷ்ட ரேகையும் சந்திரமேடும்



மனிதர்கள் எல்லோரும் தங்கள் வாழ்வில் அதிர்ஷ்டம் உண்டாக வேண்டுமென்று எண்ணுவார்கள். இவ்வாறு எண்ணுவது இயற்கைதான். வாழ்வில் ஒருவருக்கு அதிர்ஷ்டம் பல வழிகளில் உண்டாகின்றது. சிலருக்கு அவர்கள் செய்கின்ற தொழில் மூலமும், சிலருக்கு எதிர்பாராத பணம், பூமி, பொன், பொருள் ஆகியவை மூலமும் கிடைக்கின்றது. நாங்கள் எல்லோரும் கடும்முயற்சி செய்தும் எங்களுக்குப் போதியளவு அதிர்ஷ்டம் அடிப்பதில்லை. நமக்கு அதிர்ஷ்டமுண்டா? அதன்படி நாம் செல்வந்தர்களாகலாமா? அதைப்பற்றி எவ்வாறு அறியலாம்? என்ற கேள்விகள் நமக்கு எழக்கூடும். இவை எல்லாம் விதிவசமாய் ஏற்படுகின்றன. ''தின்னப் பொசிப்புள்ளவருக்குத் திண்ணைக் கப்பிலே தேன்'' என்னும் சான்றோர் வாக்கு ஞாபகத்துக்குவருகின்றது. விதிவசமாய் ஏற்படுகின்ற அதிாஷ்டத்தைப் பற்றியறிவதற்குக் கையிலுள்ள ரேகைகளுள் அதிர்ஷ்ட ரேகை பிரதானமானது. இது சில ரகசியங்களை வெளிப்படுத்துகின்றது. படத்திலே சுட்டுவிரல் என்ற விரலில், ரேகை இலக்கம்-6 ஐப் பார்க்கவும் இந்த ரேகையை அதிர்ஷ்ட ரேகை என்பர். இந்தரேகை தோன்றுவது மிகவும் கடினமானது. இந்த ரேகை சுட்டுவிரலில் மாத்திரம் தோன்றுவதில்லை. ஏனைய விரல்களிலும்தோன்றும். இந்தரேகை தோன்றிப்பின் மறையும் வரையுள்ள இடைக்காலத்தில் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும். இந்த ரேகை இலகுவில் மறைவதில்லை இந்த ரேகையுள்ளவர்கள் பலவித வழிகளில் அதிர்ஷ்டத்தை அடைந்துள்ளனர். பின்வரும் உதாரணங்கள் மூலம் அதிர்ஷ்டம் அடித்ததைப்பற்றி அறியலாம்.

(1) ஒருவருக்கு அதிர்ஷ்ட ரேகை கையிலுள்ள விரலில் இருக்கக் காணப்பட்டது. அவர் தனது மேற்படிப்பிலும், தனது அலுவல்களிலும் மிகுந்த கவனம் எடுத்தார். பணத்தையோ அல்லது வேறு எந்தப் பொருளையோ தேடுவதில் கவனம் காட்டவில்லை அன்னாருக்கு உறவினர் முறையானவர் அயல்நாட்டில் பெரியஉத்தியோகத்திலிருந்தார். அவர் தனது உறவினனை இந்த மாணவனுக்கு உடுப்புக்களும், ஊற்றுப் பேனையும், கைக்கடிகாரமும் ஒரு தொகையான பணத்தையும் எதுவிதமான உதவியையும் எதிர்பாராமல் கொடுத்துதவினர். இந்த மாணவனுக்கு அதிர்ஷ்டம் உறவினர்மூலம் கிடைத்துள்ளது என்பதை அனுபவ மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

(2) ஒருபெண்ணினுடைய கையிலுள்ள விரலில அதிர்ஷ்ட ரேகை இருக்கக்காணப்பட்டது. அந்தப் பெண் கிராமப்புறத்திலுள்ளவர் ஐந்தாவது வகுப்புவரைதான் படித்துள்ளார். இவர் குடும்பத்திற்கேற்ற நற்குணமுள்ள பெண். இவருடைய தாயாரின் சகோதரி ஒருவர் இருந்தார். அவரிடம் ஒரு நிலம் இருந்தது. அவர் இறக்கும்பொழுது அந்தநிலத்தை இவருடைய பெயருக்கு எழுதியிருந்தார். இந்தப் பெண் தனக்கு நன்கொடையாகக் கிடைத்த நிலத்தை விற்றுப்பெருந்தொகையான பணத்தைப்பெற்றுள். இப்பெண் கல்வி மூலமோ அல்லது தொழில் மூலமோ அல்லது எதுவித முயற்சியின் மூலமோ பணத்தைப் பெறவில்லை. இவர் அமைதியாயிருக்க, முதலில் நிலம்இவர் பெயருக்கு எழுதப்பட்டுப் பின்பு விற்கப்பட்டு இவருக்குப் பணம் கிடைத்துள்ளது.

(3) ஒரு சிறிய கடையை நடாத்தி, அதனால்வரும்வருமானத்தைக்கொண்டு சீவியம் நடாத்தினர் ஒருவர். அவருடைய கையிலுள்ளவிரலில் அதிர்ஷ்டரேகை இருந்தது. இவர் அநேகமாக எல்லோருடனும் தமாசாய்ப் பேசுவார் இவரை ஒருநபர் சந்தித்தார். அந்த நபர் களவெடுப்பதில் கைதேர்ந்தவர். அந்தநபர் யாருடைய வீட்டுக்காவது செல்வார். அங்கே ஒருவரும் இல்லையென்றால் இருக்கின்ற பொருட்களைக் கையாடிக்கொண்டு சென்றுவிடுவார் சில சமயங்களில் களவாடிய பொருட்களைக்கொண்டு இந்தக் கடைக்காரரிடம் வந்து தஞ்சமடைவார். கடைக்காரர் இலேசில் விடுவாரா? காலவிலைக்கோ அல்லது அதிலும் குறைந்த விலைக்கோ பொருட்களைப் பெற்றுக்கொள்ளுவார். களவெடுப்பது தீயபழக்கந்தான். ஆனல் சிலருக்கு அதிர்ஷ்டம் இவ்வாறும் ஏற்படுகின்றது.

(4) ஒருவருடைய கையில் இரண்டு விரல்களில்கட்டையான அதிர்ஷ்ட ரேகை இருந்தது. அவர் சில காலங்களாகச் சுவீப் டிக்கட் எடுத்தார். ஒருமுறை அவருக்கு ஒருலட்ச ரூபா பெறுமதியான பரிசு பணமாகக் கிடைத்தது. அவர் கல்வியறிவில்லாதவர். தனக்குக் கிடைத்த பணத்தைக் கொண்டு காணியொன்றை இரட்டிவிலைக்கு வாங்கினர். பெரிய வீட்டையும் கட்டினர். மரம் பழுத்தால் வெளவால் வருவது இயற்கைதானே. உறவினரும், உறவினர்முறை பேசிய நண்பரும் அதிகமாகினர் நித்தமும் விருந்துக்கொண்டாட்டம். கடாவெட்டி நல்ல சமயல் சமைத்தார்கள். மதுபான வகைகளும் பரிமாறப்பட்டன. இவ்வாறு நாளடைவில் நடந்து இறுதியில் ஒன்றும் எஞ்சியிருக்கவில்லை, அதிஷ்ட ரேகையின்படி பணம் கிடைத்தது. ஆனல் அதைப் பாதுகாக்கப் புத்தியமையவில்லை. அவருக்குப் புத்திரேகை மிகவும் சிறிதாகவிருந்தது.

மனிதன் பல கோணங்களிலும் தொடர்புள்ளவனக வாழ்கின்றன். எனவே அதிஷ்டம் அவரவர்களின் பூர்வபுண்ணியப்படி சூழ்நிலை சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு ஏற்படுகின்றது. மேலே கொடுக்கப்பட்டவை சில உதாரணங்களே. இவ்வாறு பலவழிகளிலும் அதிர்ஷ்டம் ஏற்படுகின்றது. படத்திலே விரல்களின் அங்குலாஸ்திகளில் சிறுசிறு ரேகைகள் இருக்கின்றன. இவைகளும் அதிர்ஷ்டக்குறிகளே ஆனல் அதிர்ஷ்டரேகைக்குசமமானதல்ல. விரல்களில் உள்ள சிறிய அதிர்ஷ்டரேகைகளும் சிறு அளவான அதிஷ்டத்தைக்கொடுக்கின்றன. இவ்வாறன ரேகைகள் உள்ளவர்கள் சிறிய அளவான பணத்தையோ, வெகுமதியையோ, பொருளையோ நித்தமும் பெருதபொழுதிலும் ஆறு மாதத்துக்கு ஒருமுறையோ அல்லது வருடத்துக்கு ஒருமுறையோதான் ஏற்படுகின்றது. அதிர்ஷ்டரேகையில் வெட்டு இருப்பது துரதிர்ஷ்டமாகும். எதுவிதமான அதிர்ஷ்டரேகை ஒன்றும் இல்லாத ஒருவர் பத்துவருடங்களாகச் சுவீப் டிக்கெட் எடுத்தார். இன்னமும் சுவீப் விழவில்லை அவருக்குச் சுவீப் விழுவதற்கேற்ற சாத்தியக்கூறில்லை. இவ்வளவு காலமும் ஐம்பது சதப்படி அவர் எடுத்த டிக்கெட்டுகள் ஏராளம். அவருக்கு அதிர்ஷ்டம் எட்டியும் பார்க்கவில்லையே.

இதுவரை அதிர்ஸ்ட ரேகையைப் பற்றிப் பார்த்தோம் தற்பொழுது F பகுதி மேடாகிய சந்திரமேட்டைப்பற்றிப் பார்ப்போம். சந்திரமேட்டின் அமைப்பை படத்திலே மணிக்கட்டுக்கு மேலேயுள்ள பகுதியாகிய F பகுதியைப் பார்க்கவும். சந்திரமேடு ஒருவருடைய குணத்தன்மைக்கு ஆதாரமானது. சிலருடைய கையில் சந்திரமேடு நன்ருக அமைவதில்லை. சந்திரமேடு நன்ருக அமைந்திருக்காதுவிட்டால் அன்னர் சோம்பலுடையவராகவும், இரக்க குணமற்றவராகவும் இறைபக்தி இல்லாதவராகவும் காணப்படுவார்.

சிலருடைய கையில் சந்திரமேடு சாமானியமாய் அமைந்திருக்கும். இந்தகையவர்கள் உல்லாசப் பிரயாணம் செய்வதை மிகவும் விரும்புவர். இவர்கள் பிரதானமாகத் தெய்வத்தலங்களுக்கு யாத்திரைகளை மேற்கொள்வர். இவர்கள்

(15-ம் பக்கம் பார்க்க)

– மு. குணரத்தினம் –

ஆரோக்கியமான பசி உண்டாவதற்கு அருந்துக

**டியுரோல்**

பசியைத் தூண்டுவது, புதுப்பலமளிப்பது.

இரத்த புஷ்டியை உண்டாக்கவும், பசியைத் தூண்டவும், சோர்வடைந்த தசைநார்களுக்குப் புதுப்பலமளிக்கவும் இழந்த சக்தியை மீட்டுத் தரவும் விஞ்ஞான முறைப்படி சமஞ் செய்து விசேஷ முறையில் உருவாக்கப்பட்ட சுகபானம் டியுரோல் ஆகும். அதன் சுவையான செரிப்பழ ருசி எவரையும் தன்வசப்படுத்தக் கூடியது. உங்கள் மருந்துக் கடையில் அல்லது மளிகைக் கடையில் நிரையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் போத்தல்களில் சட்டென்று தெரிந்தெடுக்கக்கூடிய கச்சிதமான புதிய பெட்டியில் டியுரோல் இப்பொழுது கிடைக்கிறது.

உங்கள் மருந்துக் கடையில் அல்லது மளிகைக் கடையில் கிடைக்கும்.




ஆரோக்கியம், சக்தி; பலம், வலிமை பெற டியுரோல் அருந்துக.

தரச்சிறப்புடைய ஒரு டியுமெக்ஸ் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நீ ஏன் அழுதாய்"

— குப்பிழான் ஐ. சண்முகம்

அரியத்தின் அக்காவுக்கு......,

எப்படி இந்தக்கடிதத்தை எழுதத்தொடங்குவதென்று எனக்குத் தெரியவில்லை எவ்வளவோ நேரம் சிந்தித்தும் ஒரு முடிவுக்குவர என்னுல் முடியவில்லை. கொஞ்சநேரமென்ருலும்- நீ என்னுடன் பழகிய அந்த மகத்தான உணர்ச்சிகரமான நேரத்தைக்கொண்டு எப்படி உன்னை அழைக்கலாமென்று எனக்குப்புரியவில்லை. உன்னை அன்புள்ள சகோதரி என்று விளிக்கவும் என்னுல் இயலும்; அன்புள்ள... என்று விளிக்கவும்என்னுல் இயலும். உன்பெயரைச் சொல்லி உரிமையோடு அழைக்கவும் என்னுல் முடியும். ஆனுல். நீ உன் பெயரை எனக்குச் சொல்லவில்லை. என்னை நீ எப்படிப் பாவித்தாய்-ஒரு உடன்பிறவாச் சகோதரனுகவோ அல்லது நீ உள்ளன்புடன் நேசிக்கும் ஒருவனுகவோ, அல்லதுஎப்போதோ ஒருமுறை சந்தித்து மறந்துவிடக்கூடிய, எதுவித உறவுகள், பந்தபாசங்கள் அற்ற ஒரு மூன்ரும் மனிதனுகவோ -எப்படி நீ பாவித்தாய் என்றே எனக்குத் தெரியவில்லை. அப்படி நீ ஒருவித தொடர்பை வகுத்த என்னோடு பழகியிருந்தால் அந்தத் தொடர்புக்கேற்ற-அந்தத் தொடர்பைப் பாதுகாக்கக்கூடிய- அந்தத் தொடர்பின் உணர்ச்சிகள் நிறைந்த குரலில் நான் உன்னை அழைத்திருக்க இயலும். அந்த மனநிறைவில் நான்நிம்மதிகாண முடியும். நீஎப்படி என்னை அழைக்கிருயென்பதல்ல எனக்கு முக்கியம், இந்த உலகில் நான்வாழக்கூடியநீண்ட காலத்தில்-ஒருசில நேரப் பழக்கத்தில்-என் மனதில் ஒரு உணர்ச்சியை, ஒரு குளிர்ச்சியை ஒரு கிளுகிளுப்பை ஏற்படுத்திய உன் உறவுதான் எனக்கு முக்கியம். அது எப்படியிருந்தாலும் எனக்கு அக்கறையில்லை.

ஆனுல் நீ மொழியளவில் சொல்லக்கூடிய அல்லது எழுதக்கூடிய ஒருவித உறவுகளையும் ஏற்படுத்தாமல்- அதேநேரம் உன் உயிரினுல், உணர்வினுல் ஏதோ ஒரு உறவை ஏற்படுத்தியவளைப் போல கண்கள் கலங்க, குரலடைத்து நெஞ்சம் குலுங்க பீறிட்டுவரும் அழுகையை வலிந்தடக்கி ஒரு செயற்கைப் புன்முறுவல் காட்டி, கரங்களைக் கூப்பி, 'வணக்கம்' வருகிறேன்' என்று விடைபெற்ருயே?

நான் கண்கள் கலங்க, உணர்ச்சிகளை வெளிக்காட்டாது-மரமாய்-கல்லாய்தலையசைத்து விடைகொடுத்தேனே...?

எந்த உறவுக்கு இந்த உணர்ச்சிவரும்?

அந்தஉறவை-அல்ல-அந்த உணர்ச்சிகளைத்தந்த உன்னுடைய உறவை நான் நாடி நிற்கிறேன். அதற்காகஏங்குகின்றேன். அதனுல்தான் இவ்வஞ்சலைவரைகின்றேன்.

இதை எழுத உட்கார்ந்த போதுதான், உன்னை எப்படி விழிப்பது என்ற பிரச்சினைஏற்பட்டது ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் நான் நீண்ட நேரம் சிந்தித்தேன். நீயும், நானும் பழகிய சூழல் மனத்திரையில் விரிய-நீண்ட பஸ் கியூவில் உனக்கும் எனக்குமிடையில் கள்ளங்கபடமற்ற சின்னஞ்சிறிய சிறுமியாய் உன் தங்கை-அவள்தான் அரியம்; சிரித்த காட்சி என் மனத்திரையில்மின்னுகிறது.

அவளால்தானே உனக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவளால்தானே இந்த உறவு-பிரிய வேண்டுமென்று அறிந்திருந்தும்கூட, பிரியும் போது மனதில் வேதனைக் குமைச்சல் எடுக்குமென்றும் தெரிந்திருந்தும்கூட. அதாவது தவிர்க்கவேண்டிய உறவென்று புரிந்திருந்தும் தவிர்க்கமுடியாத உறவாக ஏற்பட்டது.

அதனுல்அவள் பெயரைக் கொண்டே, உன்னை விளிக்கிறேன். அரியத்தின் அக்காவே...என்று அழைப்பதிலேயே ஒரு மனநிறைவை- ஒரு உறவுத்தொடர்பின் உணர்ச்சி இழையைக் காண்கிறேன்.

அரியத்தின் அக்காவே ...

நீ எங்கிருந்தாலும் எனது வணக்கங்கள் உன்னைச்சேரட்டும். 'வாழ்க்கை ஒரு விபத்தென்று' எங்கோ படித்த ஞாபகம். எமக்கு எதிர்பாராமல் நடக்கும் விபத்துக்களின் தொகுப்புத்தான் வாழ்க்கையென்ருல், நீயும் நானும் சந்தித்ததும் ஒரு விபத்துத்தான். அந்த விபத்தின் விளைவாக என் நெஞ்சம் குமையக்குமைய, உன்னை நினைத்து வேதனையுடன் அழவைக்கிருயே; அதுதான் என் வாழ்க்கையா? என் வாழ்நாள் முழுவதும் நான் உன் நினைவில் சித்திரவதைப்படத்தான் வேணுமா? அரியத்தின் அக்காவே ...என்னைச் சித்திரவதை செய்யாதே; ஏதோவொரு உறவுத் தொடர்பில் உணர்ச்சிக்குரலில் என்னை அழைத்து, எனக்கு ஆறுதல் சொல்லமாட்டாயா? உனது உள்ளத்திலிருந்துவரும் உணர்ச்சிதோய்ந்த உறவுத் தொடர்பில் நான் காலாகாலமாக மனநிறைவுகாண நீ தயவுசெய்து அருள் புரிய மாட்டாயா? நீஎங்கிருக்கிருயென்று எனக்குத்தெரிய மாட்டுதே.

'நாம் சந்திக்கின்ருேம்; அன்பு செய்கின்ருேம; பிரிகிருேம்; ஒவ்வொரு மனித மனதின் சோககீதமே இதுதான்' என்று ஒரு ஆங்கிலக் கவிஞன் பாடினுனும். அவனின் இந்த ஆத்மார்த்தமான-அழகிய கவிதை வரிகளை நினைத்து நான் உன்னை மறந்து விடத்தான் முயல்கிறேன். உனது உறவை- அது எத்தகைய உறவென்ருலுங்கூட-அதை நாடி நிற்கும் என் மனதை-உள்ளத்தை சித்தத்தை-இல்லை என்னையே வலிந்தடக்கத்தான் முயன்று பார்க்கிறேன். எப்போதும் நான் அதில் தோல்வியையே காண்கின்றேன்.

உன்னை மறந்து விட்டேனென்ற நினைவில் நான் வீதியில் நடை போடும் போது, அழகியரோசாவில் நீ நின்று அழுகிருய்; உன்னை மறந்து விட்டேனென்ற நினைவில் ஏதாவது பாடலை நான் முணுமுணுக்கும்போது, அந்தப் பாடலில் இழையோடும் சுருதியாய் நீ நின்று உன் சோகக்குரலைக் கொடுக்கிருய்; உன்னை மறந்துவிட்டேனென்ற நினைவில் நான் ஆண்டவனை வணங்கும் போது, வரங்கேட்கும் பாவனையில் நீ என்னைப் பார்க்கின்ருய்; உன்னை மறந்து விட்டேனென்று நினைவில் நான் ஏதாவது படிக்கமுயலும்போது, கண்களில் ஏதோ உணர்ச்சிமிளிர்வுடன் நீ நின்று பாடத்தை மறைக்கிருய். என் நனவிலும்-கனவிலும், விழிப்பிலும், உறக்கத்திலும் நீயே நிறைந்து நின்று என்னை வாட்டுகின்ருய்.

அரியத்தின் அக்காவே ...

உனக்குத்தெரியாமலே நீ ஏன் என் நெஞ்சத்திரையில் மின்னுகின்ருய். எனக்குத் தெரியாமலே நானும் உன் மனத்தரங்கில் இடம்பிடித்திருக்கின்றேனு; அப்படிப் பிடித்திருந்தால், அந்தப் பிடிப்பின் அர்த்தத்தில்- அந்த உறவுத் தொடர்பின் உணர்ச்சியில்- ஒரேயொரு முறையாதல் உன் குரலையெடுத்து என்னை அழைக்க மாட்டாயா? அப்படிஅழைப்பதின் மூலம் எப்படியாதல் ஏதோவொரு உறவுத் தொடர்பை என்னுடன் ஏற்படுத்தமாட்டாயா?

நீ அப்படிச் செய்யமாட்டாய்; அது எனக்குத் தெரியும்.

'ஏன்' என்ற கேள்விக் கொளுக்கியில் பிடித்துப் பின்னேக்கிப் பார்க்கிறேன்.

புலர்ந்தும் புலராத காலை வேளை; வைகறை இளம்பனியின் மெல்லிய தூய்மையான குளிர்ச்சியில் சலசலத்தோடும் மாணிக்ககங்கையில் நீராடி அந்தப்புனித [illegible] பட்டு, மீண்டும் எமது உத்தியோக வாழ்வு என்னும் இயந்திரமயமான வாழ்வை நோக்கிப்புறப்படுவதற்காக நானும், நண்பர்களும் பஸ்நிலையத்திற்கு வருகின்ருேம். இரண்டுதினங்களாக, பச்சைபரந்து உயர்ந்திருக்கும் மலைச் சூழலில், வசந்தக் குறுகுறுப்பில் சிரிக்கும் மரச்சோலைகளில் மஞ்சளாய்ப் பூத்து மணத்து நிற்கும் கொன்றை மலர்ப்பரப்பில் சலசலத்தோடும் மாணிக்ககங்கையில், புனித ஆலயத்தைத் தரிசித்த மனப்பக்குவத்தில், சாதி மத பேதமில்லாமல் மொய்த்துநின்ற சனக்கூட்டத்தில் - வாழ்ந்த வாழ்வை-அந்த இனிமையான வாழ்க்கையோட்டத்தை விட்டுப்போகிருேமே என்று ஏக்கத்துடனேயே நானும் நண்பர்களும் பஸ் நிலையத்தில் நிற்கின்ருேம்.

"இனி எப்போது நாம் கதிர்காமத்துக்குவரப்போகிருேம்'' என்கிருன் நண்பன் பாலச்சந்திரன்.

"வாழ்க்கையில் தரிசிக்க வேண்டிய ஒருதரிசனம் நன்ருக முடிந்து விட்டதே'' என்று கூறி நிம்மதிப்பெருமூச்சுவிடுகிருன், வைதீகப்போக்குடைய நண்பன் பாலு.

"எமது இயந்திரமயமான வாழ்வை விட்டு, இதே போன்ற அருமையான இயற்கைச்சூழலில், காலங்காலமாக அமைதியாகவாழ எங்களுக்குக் கிடையாதா?'' என்று ஏங்கினுன் என்னை நன்ருக அறிந்துகொண்ட என் அறை நண்பன் 'பரி' என்கிற பரிபூரணனந்தன்.

நான் சிரித்தேன்! ஒவ்வொரு மனிதமனதிலும் எத்தனை எத்தனை விதமான ஏக்கங்கள்; அந்த ஏக்கங்களின் தொகுப்புத்தானே வாழ்க்கை. வாழ்க்கை என்பதே ஏக்கங்களின் சிதறல்தானே என்ற அனுபவரீதியான உண்மையை மீண்டும் அசைபோட்டுச் சிரித்தேன்

அழகுபோர்த்துக்கிடக்கும் அந்தச் சூழலில் பசுமை போர்த்துக் கிடக்கும் மலைகளில் ஏறிஉலாவ எனக்கும் ஆசைதான்; சலசலத்தோடும் மாணிக்ககங்கையில் எப்போதும் மூழ்கிமூழ்கிக்குளிக்கவும் ஆசைதான்; உடலை மெதுவாகத்தடவி இதம் கொடுத்து ஊரும் கொன்றைப்பூவாசனை நிறைந்த தென்றலை நுகர எனக்கு என்றும் ஆசைதான்; மாலை மங்கும் நேரத்தில் - மேற்கே உயர்ந்து நிற்கும் மரங்களுக்கப்பால், தங்கச்சூரியன்பளபளத்துக்கொண்டு -மர இடைவெளியினூடாக இடையிடையே மஞ்சள் வெயிலைப்பரப்பிப்பூக்கோலம்போடும்போது அந்த அழகைப் பார்த்துப்பார்த்து கவிதை பாட எனக்குக் கொள்ளையாசைதான். வைகறையின் இளங்குளிரில் மாணிக்ககங்கையில் மூழ்கி முருகசந்நிதானத்தில்நின்று, அருணகிரிநாதரின் திருப்புகழை உருக்கமாக மெல்லிய குரலெடுத்துப்பாட எனக்கு என்றும்ஆசைதான். மத்தியானத்தின்பின் மேகங்கள் திரண்டுஇருள-காற்றுப் பலமாக அடிக்க- மர இலைகளும் கொன்றைமரப் பூக்களும்பொலபொலவென்று உதிர-பறவைகள் ஆரவாரம் செய்துகொண்டு பறக்க மதிய உணவுண்டகளைப்பில் இராமகிருஷ்ண மடத்துப் பளிங்குத் தரையில் படுத்துக்கொண்டு எமது பழைய ஏமாற்றமான சோக நினைவுகளில் மனத்தைச் செலுத்தி- உலகத்து அழகிய காவியங்களில் வரும் சோக கீதங்களையெல்லாம் உணர்ந்து - நயந்து அனுபவித்துப் படிக்க எனக்கு எப்போதுமே ஆசைதான்.

ஆனுல் இந்த ஆசைகளெல்லாம் நிறைவேருதென்று எனக்குத் தெரியும். அவ்வளவு தூரம் அந்தஇயந்திரமயமான வாழ்வில் நாம் கட்டுண்டு இருக்கிருேம். அந்தவாழ்க்கையை உதறித்தள்ள எமக்குத் துணிவில்லை. துணிபிருந்தாலும் எங்கள் குடும்பச் சமூகச்சூழல் அதற்கு இடந்தரப்போவதில்லை.

எனவேதான் வெறுமனே சிரித்தேன்

'என்ன புலவர்! ஒன்றும் பேசாமல் சிரிக்கின்ருர்' என்ருன் பரி.

'என்னத்தைப் பேசிறது!' என்றேன் நான்.

உனக்கும், எனக்கும் இடையில் நின்றஉன்தங்கை அரியம் என்னைத் திரும்பிப் பார்த்தாள், என்னைச்சுட்டிக்காட்டி உன்னிடம் ஏதோ சொன்னுள். நீயும் என்னைத் திரும்பிப்பார்த்து, ஒரு அரைப்புன்னகை காட்டி முகத்தைத் திருப்பிக்கொண்டாய்.

'உலகத்தில் பேசுவதற்குத்தான் எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றனவே' என்று நீ உன்பாட்டிலேயே சொன்னது எனக்குக் கேட்டது.

'உலகத்தில் பேசுவதில் தான் வாழ்க்கை இருக்கிறது என்று சிலர் நம்புகிருர்கள், மனிதன் தோன்றிய ஆதிநாளிலிருந்தே பேசிக்கொண்டுதானே இருந்திருப்பான் பேசிப் பேசிப்பேசியே தன் வாழ்வைக் கழித்திருப்பான். இன்னமும்தான் அந்தப் பேசுகிற வாழ்க்கையில் அவனுக்குச் சலிப்போ, களைப்போ ஏற்படவில்லைப் போலிருக்கிறது'- என்றேன், நான் நண்பனைப்பார்த்து.

அவன் மௌனமாக ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

அப்போது நீ என்னை நன்ருகத் திரும்பிப்பார்த்துமுழுதாகச் சிரித்தாய் உன் அதரங்களைப் பவ்வியமாகத் திறந்து 'உண்மைதான்' என்ருய். அப்போ நான் ஆர்த்தத்துடன் சிரித்தேன்; நீயும் சிரித்தாய்.

உன்னுடன் நான் சிரித்துக் கதைப்பதைக் கண்ட என் நண்பர்கள் ஏதோ உந்தலினுல் உஷார்கொள்கிருர்கள். உலகத்து விடயங்கள் - நுட்பங்களை எல்லாம் தாங்கள் முற்றுமுழுதாக அறிந்தவர்கள் போலவும் பெரிய ஹாசிய மன்னர்களைப்போலவும், அழகு இராசாக்களாகவும் தம்மை உருவகித்து பேசினுர்கள்; பலத்துச் சத்தமிட்டுச் சிரித்தார்கள். நீ மீண்டும் மௌனமானுய். அந்த அல்லோல கல்லோலத்தில் பஸ் நிலையதூணென்றுடன் மோதுண்டு நண்பன் பரியின் தலையில் காயமேற்பட்டபோது, எதுவித உறவுகள் பந்தபாசங்களற்ற ஒரு மூன்ரும் மனிதனைப்போல நீ அவனதுகாயத்தைப்பற்றி விசாரித்தாய்! உன்னுடைய தங்கையும் விசாரித்தாள்; உன்னுடன் வந்த உன் குடும்பத்தவர்களும் விசாரித்தார்கள்.

நீண்ட நெடுநேரத்தின் பின் மாத்தறை நோக்கிச் செல்லும் பஸ் வந்தது.

உனக்கும் உன் தங்கைக்கும் நடுவில் பின்புறமாக நான் உட்கார்ந்துகொண்டேன். என் நண்பன் ஒருவன்பஸ்ஸின்பிற்பகுதியிலும் மற்ற இருவரும் பஸ்ஸின் முற்பகுதியிலும் உட்கார்ந்துகொண்டார்கள். என்னருகில் நீயும் உன் தங்கையும் உன்தாயும் உட்கார்ந்திருந்தபடியால் எப்போதாவது


(12-ம் பக்கம் பார்க்க)

"லேடன்"
LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காஸ்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கிராமம் — 10

# ஆறுதான் இல்லை; ஆனால் அழகு விரிந்து கிடக்கும் நுணுவில்



நுணுவிற் குளத்து அம்மன் கோயில்

1 மருதம் வீற்றிருக்கும் மாண்பு

மலிந்தவூர் எழில் நுணுவில்

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம் வீற்றிருக்கும்

சிறப்பு வாய்ந்தது எங்கள் நுணுவிலூர். ஆம் இய திகை வளப்பதியில் கோசல நாட்டுக்கும் நுணுவிலூருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

இவ்விதம் இனிய இயற்கை எழிலோடு மருதம் வீற்றிருக்கும் நுணுவிலூர் தென்மராட்சியின் திருநகராகிய சாவகச்சேரியைச் சார்ந்தது. சாவகச்சேரி யாழ்ப்பாணக் குடாநாட்டின் இரண்டாவது பெரிய பட்டணம். அதனை மருவியவாறு மேற்கில் நகரசபை எல்லைக்குள் அமைந்திருக்கின்றது நுணுவிலூர் வடக்கில் கல்வயலும் மட்டுவிலும் மேற்கில் கைதடியும் தெற்கில் மறவர்புலமும் அணி செய்கின்றன.

நிரம்பிய தடாகங்கள். விரும்பிய தாமரைகள்' தம்மை மறந்த மந்தையினம். கீதம் இசைக்கும் மாங்குயில்கள், பூத்துக்குலுங்கும் சோலைகள், அவற்றைப் பார்த்துச் சிணுங்கும் கூடல்கள். வான்தோய நீண்டுயர்ந்த ஆலும் வேலும், மாவும் மருதும், தென்னையும் பனையும், புன்னையும் நாவலும் என்றெல்லாம் வருணிக்க முற்படுகையில் கம்பர் பெருமான் மீண்டும் குறுக்கிடுகின்றார்.


நீரிடை உறங்கும் சங்கம்
நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு
தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை
துறையிடை உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம்
பொழிலிடை உறங்கும் தோகை

என்ற சித்திரக் கவிதைக்குத் தக்க அளவுக்கு முத்திரை குத்தி விளக்கந்தரவல்லது எங்கள் ஊர்.

நுணுவிலூர்க் கவிஞர்

## — வி. கந்தவனம் —

இவற்றோடு 'ஓடுமீன்ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்கும் கொக்குகள்' செங்கழுநீர் மொட்டினைப் பாம்பின் பசுந்தலை என்று அஞ்சி இரவெல்லாம் கதறும் குஞ்சுகளைத் தாலாட்டும் தாய் நாரைகள். புன்னை நறுமலரின் பூந்தாதிடை உறங்கும் கன்னிப் பசுக்கள், உன்னி எழுந்து தென்னையின் கள்ளைத் தீர உண்டு குதித்து ஆடி வயல் வீழ்ந்து உழக்கும் வாளைகள் 'சினைச்சங்கின் வெண்தலையைத் தேரைஎன நினைக்கும் குவளைப்பனைப் பைந்தாட் குண்டுகள், அம்புஜத்தின் போதை அறுகாலல் உழக்கித் திறந்து தேன் பாய்ச்சும் தும்பிகள் புன்னை நறுந்தாது கோதி அதனைக் கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும் பொறி வண்டுகள். குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த மழலைக் கிளவிதரும் சிறு பசுங்கிளிகள், நாரையும் கொக்கும் நீர்க்கோழிகளும் சீருடன் வதியச் சிறப்பிடஞ் சமைக்கும் ஊர்ப்புறமமைந்த உப்பங்கழிகள் என்பவையும் இன்னும் பலவும் நுணுவிலூரில் மலிந்திருக்கும்



கொல்லாபுரியாரின் மருதஞ்சூழ் கோயில்

சரித்திரச் சுவடியில் சாகாவரம் பெற்ற ஆலயங்கள்!

நுணுவிற் கிழக்கு மேற்காகநீண்டுநிமிர்ந்திருக்கும் ஒரு பேரூர் அதனால் நுணுவில் கிழக்கு என்றும் நுணுவில்மேற்கு என்றும் ஊர் இருபெருங் கோட்டங்களாயின. நுணுவில் கிழக்கில் கற்குழி, கல்லடி மூட்டு. மணற்பிட்டி, நுணுவிற் கல்லடைல் ஆகிய பகுதிகளும் நுணுவில் மேற்கில் கொலங்கிராய், மணற்குண. கறளியோடை, காந்தாளாம்பிட்டி ஆகிய பகுதிகளும் உள்ளன, ஊரை ஊடறுத்தோடும் பிரதான வீதி (கண்டி வீதி) ஊரின் பெருமையை மேலும் உயர்த்துகின்றது. தென் எல்லைப்புறத்தில் இரயில் பாதையும் இருப்புக் கொண்டுள்ளது. இவ்விதம் கற்பாதை வழியாலும் இருப்புப்பாதை வழியாலும் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றவர்கள் எமது ஊரைத் தரிசனம் செய்த வர வண்டியுள்ளனர். அவர்களென்ன இலக்சபான நீர் மின்சக்தியும் எமது ஊர்வழியாகத்தான வந்து கொண்டிருக்கின்றது.

பிரதான கற்பாதையையண்டி இருமருங்கிலும் குடிச்செறிவு மிக அடர்த்தியாகவுள்ளது வீதிக்குத் தெற்கிலுள்ள குடிமனைகளைக் கடந்து தெற்கு நோக்கிவரின் மருதம் வீற்றிருக்கும் மாண்பில் மனதைப் பறிகொடுக்கலாம். இரயிலில் செல்பவர்களும் சாவகச்சேரிக்கும் நாவற்குழிக்குமிடையில் எமது மருத நிலத்தின் பெரும் பரப்பையும் அருஞ்சிறப்பையும் கண்டின்புறாமல் இருக்க முடியாது.

நெற்றியில் நீறுண்டு; உண்டியில் நெய்யுமுண்டு. ஆயின் ஆறுதான் இல்லை. என்றாலும் அழகு பாழாவதில்லை எந்த மொழியலும் வாரி இறைக்க முடியாத அளவுக்கு மாரியில் நுணுவிலூரின் இயற்கை எழில் ... நிலை அடைவது வழக்கம்.

விதமும் பொலிந்திருக்கும் நிறைவும் சொல்லுந்தரமன்று! சொல்லுந்தரமன்று!

இது வெறும் அண்டப் புளுகோ அசல் உண்மையோ வென்று ஆராய்ந்தறிய விரும்புவோர் மாரியில் நுணுவிலூருக்குச் செல்லுதல் நல்லது. ஏனென்றால் கோடையிற் சென்று பார்த்தால் கொட்டாவியோடுதான் மீளவேண்டிவரும். கோடை என்னவோ கோடைதான். என்றாலும் குளக்காட்டின் ஒரு பகுதியல்லவா? வயல்வெளிப் பகுதியைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வெயில் சேட்டைவிட முடியாது. எனினும் ஆனி, ஆடி. ஆவணி மாதங்களில் மாரிப் பொலிவு மறைந்தேபோய்விடும். பெரிய குளங்கள்பொலி விழந்து காணப்படும், சிறிய தடாகங்கள் நீரிழந்து கிடக்கும். சோழகம் சொல்லி வீசும், புழுதியை எங்கும் தூவும் இந்தப் புழுதியைக்கண்டு எங்கள் ஊரில் யாரும் பயப்படுவதில்லை. ஒரு தட்டில் கொட்டுண்டு போகும் புழுதி இது. இதனால் ஆடைகள் பழுதாவதோ அழுக்கேறுவதோ கிடையாது.

வயல் வெளியில் மூசிவீசும் சோழகத்தின் வேகம் பனங்கூடல்களாலும் ஊர்மனைகளாலும் தடுக்கப்படுகின்றது. வேகம் குறைவதால் கொண்டுவந்த புழுதிகளை ஊர் மனை ஓரமாகக் காற்றுக்கொட்டிவிட்டுச் செல்கின்றது. இவ்விதம் குவிந்த மணல்மேடுகள் நுணுவில் கிழக்கில் அதிகமுள்ளன கட்டிடத் தேவைகளுக்கு மணலை நாங்கள் ... வாங்குவதில்லை.

(7-ம் பக்கம் பார்க்க)

## மௌனத்தின் மகிமை

ஒரு மனிதன் இருபத்துநான்குமணி நேரமும் கடவுளைப் பற்றியேசிந்திப்பதை பழக்கத்திற்குக் கொண்டுவந்துவிட்டால், பிரார்த்தனைக்கென்று தனியாக நேரத்தை ஒதுக்கி வைக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் எப்போதும்கடவுளைச்சிந்திப்பது பெரும்பாலான மக்களுக்கும் சாத்தியமில்லை. கீழ்த்தர ஆசைகள் நிறைந்த அன்றாட உலகம் அவர்களை எப்போதுமே ஆட்கொண்டிருக்கிறது. அவர்களுக்குக்கூட, வெளியுலக விஷயங்களிலிருந்து தங்கள் மனத்தின் தொடர்பை அறவே கத்தரித்துக் கொள்ளுவது—அவ்விதம்செய்வது தினந்தோறும் ஒரு சில நிமிடங்களேயாயினும்— எல்லையற்ற பலனைக்கொடுக்கும்.

சந்தடிக்கும் குழப்பத்திற்குமிடையே கடவுளிடம் நீங்கள் மௌனமான தொடர்பு கொள்ளுவதால் சஞ்சலமற்ற அமைதி ஏற்படுவதுடன், கோபத்தை அடக்கிக் கொள்ளவும், பொறுமையை வளர்த்துக் கொள்ளவும்அது உங்களுக்கு உதவியாக இருக்கும். ஒருவருடைய மனததில் கடவுள் தததுவம் பூரணமாக நிறைந்திருக்கும் போது. அவர் யார் மீதும் துவேஷமோ அலலது கெட்ட எண்ணமோ கொள்வது முடியாத காரியம். அது போலவே, பகைவரும் தமதுதுவேஷத்தைக் கைவிட்டுநணபராகிவிடுவர். பெரும்பாலான சந்தர்ப்பங்களிலும், மனத்தில்கடவுள் தத்துவம் நிறைந்துள்ள போது துவேஷம் மறைந்து விடுகிறது என்பதே எனது அனுபவமாகும். இதை நான் பெருமையாகக் கூறிக்கொள்ளவில்லை. உலகம் ஆரம்பமானதிலிருந்து இடையறாத வரிசையில் வந்துள்ள உலக ஆசாரியர்களும் அதை நிரூபித்திருக்கிறார்கள். மனத்திலிருந்து அவ்விதம் துவேஷம் மறைவது, முற்றிலும் கடவுளின் அருளேயாகும்

கடவுளுடன்தொடர்புவைத்துக்கொள்ள மௌனத்தை மேற்கொண்டுள்ள சமயம் தான் சிறந்தது. மௌனம்உடலுக்கும் உள்ளத்திற்கும் அதியாவசியமானது. பைபிள்வரும் கீழ்காணும் இரு வாக்கியங்கள் கருத்தில் கொள்ள வேண்டியவை!


"என் ஆன்மாவே! கடவுளின் எதிரில் நீ மௌனமாக இரு."

"ஆண்டவனே, பேசுங்கள். உங்கள் ஊழியன் கவனத்துடன் செவிசாய்க்கின்றான்."

— காந்திஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதான் இல்லை



தாமரை விளக்கம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

## 2. பெருகு மாழத்துப்பிள்ளையைப் பேணும் ஊர்

பிள்ளையார் கோவிலுக்குக் காலைப் பூசைக்கு வந்த அந்தணர் பரபரத்தார். திகில் அடைந்தவர் அலறினர். மூலத்தானத் தங்கத் தகடு களவுபோய்விட்டது. காட்டுத் தீயெனச் செய்தி பரவியது. செய்தி பரவி ஒரு மணி நேரங்கூட ஆகியிருக்காது. திருடன் பிடிபட்டுவிட்டான். தங்கத் தகட்டுடன் கோவிலுக்குள் இருந்த வாழைக்குலையையும் திருடர்கள் களவுசெய்திருக்கிறார்கள். வாழைக் குலை கரைந்த பழக்குலைபோலும் திருடர்களும் கடுகி நடந்திருக்கவேண்டும். இடையிடையே வாழைப்பழங்கள் விழுந்துகிடந்தன. கிடந்த வாழைப் பழங்கள் திருடர்களைப் பிடித்துக்கொடுத்தன.

மற்றுமொரு பிள்ளையார் கோவிலிற் பூசை நடக்கின்றது. அது ஒரு விசேட பூசை: நெல் விதைக்கப்பட்டுவிட்டது. புழுதி விதைப்புத்தான். ஆனால் மழையில்லை பருவமழை பொய்த்துவிட்டது நெடுங்கால வரட்சியைப் போக்கி மழைதரவேண்டுமென்ற நேர்த்தியோடு பூசை நடக்கின்றது. பேருகுமாழத்துப்பிள்ளையார் வீதிவலம் வருகின்றார் வெயில் கொளுத்துகின்றது பூசை முடிகின்றது. திருநீறு பெற்றுத் திரும்பிய அடியார்கள் வெளி மண்டபத்தைவிட்டுச்செல்லமுடியவில்லை மழை கொட்டு கொட்டென்று கொட்டுகின்றது.

இவ்விதம் அற்புதங்கள் காட்டி அருள்பாலித்து நிற்கும் ஆனைமுகப் பெருமான் விரும்பி உறைகின்ற பெருமையுடையது எங்கள் ஊர். கொல்லங்கிராய், மணங்குணாய் ஆகிய இரு திருவிடங்களிலும் பன்னெடுங்காலமாகக் காயில் கொண்டு அருள் பாலித்து வருவதினாலேதான் திருவுங் கல்வியும் சீரும் தழைத்தோங்கும் ஊராக விளங்கிவருகின்றது நுணாவிலம்பதி!

மேலே கூறப்பட்டுள்ள அற்புத நிகழ்ச்சிகளுள் முன்னையது கொல்லங்கிராய்ப் பிள்ளையார் கோவிலில் நடந்தது பின்னையது மணங்குணாயிலுள்ள பிள்ளையார் காட்டிய விந்தை.

கொல்லங்கிராய்ப்பிள்ளையார்கோவில்மிகமிகப் பழமை வாய்ந்தது. இங்குள்ள விக்கிரகம் தமிழ் நாட்டிலுள்ள திருக்கொல்லம் என்ற இடத்தில் வார்க்கப்பட்டது. அதனால் இத் திருவிடமும் கொல்லம் — கிராய் ஆயிற்று 'கிராய்' என்றால் புற்காடு என்று பொருள். பாடலிலே கொல்லாபுரி என்று இப் பகுதி குறிக்கப் பெற்றுள்ளது:

வடக்கிலும் மேற்கிலும் குடிமனைகளையும் கிழக்கிலும் தெற்கிலும் மருத நிலங்களையும் கொண்டுள்ள கொல்லாபுரியின் இயற்கைவளமும் மயக்கும் எழிலும் சொல்லுந்தரமன்று. இதனால் கொல்லாபுரியின் ஊஞ்சற் பாட்டிலும் பத்திச் சுவையோடு இலக்கியச் சுவையும் ஏறலாயிற்று.

சிதமருஞ் கானுகரும் மலர்த்தே னுடைச்
  சென்றுழவர் முன்றில்தொறுஞ் செறிந்து பாய
மேதியிளங் கன்றருந்திக் குதிகொண் டேக
  மிக்கபய லினம்வெருவி விண்ண நாடி
மீதெழுந்து பழனங்கண் மேவி மீள
  விளங்குசிறு பார்ப்பொடன்னம் வெருண்டுதாவிப்
போதுறுநற் காவதியும் வளஞ்சேர் கொல்லா
  புரிமேவு மைங்கரனே யாடி ரூஞ்சல்.

அரிவையர்கண் முகமதிகண் டவரு மாபோ
  லதின் றேறல் பருகியிள வாளை பாய்ந்து
கரையில் வளர்ந் துயர்தாழைக் கனியை வீழ்த்தக்
  கழையினிரு லுடைந்துமதுக் காவின் மேவ
விரவுமொழிக் கன்னலுடன் செந்நெல் ஓங்கி
  விண்ணளவு நண்ணிமிக விளைவுண் டாகிப்
புரிவளைசேர் கழனிவளத் தெழில்சேர் கொல்லா
  புரிமேவு மைங்கரனே யாடி ரூஞ்சல்,

## 3. பரிவுசெறி கோலங்கிராயிலுறை மாதூ

பத்திவளம் பல்கிப் பெருகும் எமதுஊரைச் சுற்றி வருவோர் இன்னும் எத்தனையோ பல கோயில்களைக் காண்பர். அவற்றுள் நுணாவிற்குளத்து அம்மன்கோயில் புகழ்வாய்ந்தது. நுணாவிலிற் பல குளங்களுள்ள போதிலும் 'நுணாவிற்குளம்' என்ற சிறப்புப்பெயர் அம்மனின் இத் திருத்தடாகத்துக்கே உரித்தாயிற்று. பன்றித்தலைச்சி அம்மன்கோயிலைப்போன்றே நுணாவிற் குளத்து அம்மன் கோயிலும் அதன் பங்குனித்திங்கட் பொங்கலுக்குப் பெயர்பெற்றது. பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்கள் கடும்வெயில் மாதங்கள். இக்காலத்தில் கொடுநோய்கள்பரவிஉயிர்களைவதைத்தலும்வாங்குதலும் இயல்பு. ஆனால் எங்கள் பகுதியில் இந்நோய்கள் தலைகாட்டுவதில்லை. அம்மன் வழிபாடே இதற்குக் காரணமென்பர் ஆன்றோர் அருள் செய்து காத்தும், அற்புதங்கள் பலபுரிந்து அடியார்களை ஈர்த்தும் நிற்கும் நுணாவிற் குளத்து அம்மன் திருத்தலத்தில் பங்குனித் திங்கட் கிழமைகளில் பக்தர்கள் செம்பித்திரண்டு, பொங்கிப் படைத்து, விதிர்விதித்து, விம்மிப் புலம்பி [illegible]கள் தீரப்பெறுவர்.

நுணாவிற்குளம் கொல்லங்கிராயின் ஒரு பகுதியாகும்' குறைவற்ற செல்வமாகிய நோயற்றவாழ்வினால் உண்மை வழிப் பூத்துப் பொலிந்து விளங்கிய கொல்லங்கிராய் கோலங்கிராய்' என்றும் அழைக்கப்படலாயிற்று கோலங்கிராயிலுறைமாதே' என்றும் நுணாவிற் குளத்து அம்மனை அடியவர்பாடிப்பரவினர்.

அங்கணம்மைக் கடவை செட்டிப் புலமச்சூழ்
  ஆனதொரு வற்றுப்பளை மீதுறைந்தாய்
பொங்குபுகழ் கொம்படி பொறிக்கடவை சங்குவயல்
  புகழ்பெருகு கோலங்கிராய் மீதுறைந்தாய்
எங்குமேயுன் புகழை மங்காம லோத
  என்றனது சிந்தையிலுறைந்த காரணியே
பங்கமுறு துயரங்கள் தீரவருள் புரிவாய்
  பரிவுசெறி கோலங் கிராயிலுறை மாதே.

இப்பாடல் மக்கள்கவிமணி மு. இராமலிங்கம் அவர்களால் திரட்டப்பட்ட நாட்டுப்பாடல் தொகுதியிற் காணப்படுகின்றது. கோலங்கிராய் அம்மன்மீது பாடப்பெற்ற இப்பாடலில் அங்கணம்மைக்கடவை, செட்டிப் புலம், மச்சூழ், வற்றுப்பளை, கொம்படி, பொறிக் கடவை, சங்குவயல் கோலங்கிராய் என எட்டுப்பழமை வாய்ந்த பத்தினித் தலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதனால் ஆராய்ச்சியாளர் கவனத்தையும் இப்பாடல் ஈர்த்துள்ளது. கந்தரோடை புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் திரு. ம. பொ. செல்வரத்தினம் அவர்களும் அங்கணம்மைக்கடவைபற்றி ஆராய்ந்த ஓர் அரிய கட்டுரையில் இப்பாடலை மேற்கோள்காட்டுகின்றார். ('அங்கணம்மைக்கடவை', ஸ்ரீலங்கா ஓகத்து, 1962) இப்பாடல் கோலங்கிராய் அம்மன், வேறு ஏழு தலங்களிலும் விரும்பி உறைகின்றார் என்பதனையும் இத்தலங்கள் பழமை வாய்ந்தனவென்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது.

எங்கள் நுணாவிலம்பதி வீரபத்திரக் கடவுளும் வைரவக்கடவுளும் விரும்பியுறையும் தலமாகவும் விளங்குகின்றது. வைரவக்கடவுள் கட்டிட வசதிகளோடு கூடிய பெருங் கோயிலிற் குடிகொண்டு அருள் பாலித்துவருகின்றார். இவ்விரு கோயில்களும் காலக்கிரமந் தவறாது நடைபெறும் பூசைகளுக்கும் பெயர்பெற்றவை. மனதினைக் கொள்ளைகொண்ட பேத்திஅம்மனும் மணங்குணாயிற் குடிகொண்டுள்ளனள்.

[illegible] எமதூரிற் கோயில் ஒன்றுள்ளது.

(தொடரும்)

# "விண்ணுலக அப்பிள்" தக்காளி

செக்கச் சிவந்து உருண்டு திரண்டு காண்பவரைக் கவர்ந்திழுக்கும் தோற்றம். சற்றே புளிப்புக்கலந்த இனிப்பு! எழிலும் இன்சுவையும் ஒருங்கே அமைந்த பழம். சிமைத் தக்காளிப்பழம்! தனக்கென்று ஒரு தனிமணமும், தனக்கென்று ஒருநிறமும் கொண்டுள்ள தக்காளிப் பழம் இன்று காய்கனி உலகில் முதல்இடம் பெற்றுள்ளது. இதை நமது உணவுப் பொருட்களில் ஒன்றாக விரும்பி நாம் உண்டுவருகிறோம்: ஆனால் சென்ற நூற்றாண்டு வரையில் சிலநாடுகளில் இது நச்சுப்பொருள் என்று கருதப்பட்டிருந்தது. இவ்வாறு நான் கூறுவதைக் கேட்பதற்கு முதலில் விந்தையாகத் தான் இருக்கும்! நஞ்சு என்று கருதிப்பயந்து, ஒதுக்கப்பட்ட இந்தப் பழத்தை டாக்டர் வாஷிங்டன் கார்வர், துணிந்து நீகிரோவர் மத்தியில் பகிரங்கமாக நின்று தின்று காட்டினார் பின்னரே அமெரிக்கர் பலராலும், இது உணவுப் பொருளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தக்காளிப்பழத்திற்குத் தாயகம் தென் அமெரிக்கா அங்குஉள்ள 'பெரு' நாட்டின் மலைப்பகுதிகளில் காட்டுச் செடியாகக் கண்ட கண்ட இடங்களில் முளைத்து வளர்ந்து கிடந்தது. பொன்னையும் பொருளையும் தேடிச் சென்ற ஸ்பானியர் அதைக் கண்டனர். முதன் முதலாக, அதனை உணவுப்பொருளாக உபயோகித்தவர் ஸ்பானியர்களே. அவர்களே அதைப் பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்து பழக்கப்படுத்தினர். ஆரம்பத்தில் வியப்புக்குரிய பொருளாகவே அது இருந்தது பிரிட்டனின் பாவச் செய்கையின் சிவப்பு நிறத்தை எடுத்துக் கூறும் நிறமாகக் கருதப்பட்டது; அறுவடை விழாக்களில், தக்காளிக்குச் சிறப்பான இடம் அளிக்க மறுத்தனர் மதத் தலைவர்கள். நெறியற்றதென்றும், தீமையளிக்கக் கூடியதென்றும் கருதி அருவருத்தனர் ஆங்கிலேயர். அதற்குக்காரணம் ஒன்று இருந்தது. அமெரிக்காக் கண்டத்தில் ஆதிகாலத்தில் குடியேறியவர்களிற் பலர் தக்காளியை முதன்முதலாகக் கண்டதும் அதன் அழகைக்கண்டு அஞ்சினர் அதை அழகிய, ஆயினும் வஞ்ச நெஞ்சம் படைத்த மாதருடனே ஒப்பிட்டு அதைக் கண்டு இவ்வாறு மிரண்டனர். 'துயருற்ற காதலன், அல்லது தற்கொலை செய்து கொள்ளப்போகிறவர்கள் மட்டுமே தக்காளியுடன் தொடர்பு கொண்டிருப்பதைச் சிந்தித்துப் பார்க்க முடியும்' என்று எழுதி வைத்திருக்கின்றனர். அதன்பிறகு நிகழ்ந்தது ஒருவிந்தை! மூந்நூறு ஆண்டுகட்கு முன்பு காதல் மன்னன் சேர் வால்டர்ராலே தமது அன்பிற்குரிய முதலாம் எலிசபெத் அரசிக்குத் தக்காளிச் செடியை அன்பளிப்பாகக் கொடுத்தாராம்! தக்காளிச் செடியைக் காதற்சின்னமாகக் கொடுப்பது அதுமுதல் நாகரீகமாகக் கருதப்பட்டது!

தென்அமெரிக்காவில்.இன்னும் இது காட்டுச்செடியாக வளருகிறது. ஐரோப்பியர் இதைக் காய்கறியாகப்பயன்படுத்திய பின்னரே இது அமெரிக்காவில் உணவுப் பொருளாகக் கொள்ளப்பட்டது அமெரிக்காவின்வெப்பப்பகுதிகளில் தானாகவே விளைந்து கிடந்த இந்தத் தக்காளி இப்போது உலகம் முழுவதும் வெப்ப, மித வெப்பப் பகுதிகளிலெல்லாம் பயிர்செய்யப்படுகின்றது. தக்காளி முதன்முதலில் நமது நாட்டிற்கு ஐரோப்பியரால் கொண்டு வரப்பெற்றுப் பயிர்செய்யப் பட்டது. தென்னிந்தியாவில் நீலகிரி, சேர்வராயன், கோடைக்கானல் முதலிய இடங்களில் பனிக்காலம் ஒழிந்தமாதங்களிலும், பெங்களூர் கோசூர்கோயம்புத்தூர் முதலிய இடங்களில் ஆண்டுமுழுவதும் தக்காளி நன்றாகவிளைகின்றது இந்த இடங்களில்தரம் மிக்கதக்கா

## "நிலவை சங்கர்"

'போர்த்துக்கீசியப் பண்டம்' என்றுபிரசல்பாராட்டப்பெறும் அளவுக்கு தக்காளியைச் சமையற் கலையில் புகுத்தினர் போர்த்துக்கீசியர். அவர்களைப் பின்பற்றினர் பிரஞ்சுக்காரர்கள் அவர்கள்தாம்முதன்முதலில் தக்காளியைக் 'காதல் அப்பிள்' என்று அழைத்தனர்! தமது நாட்டில் அதிகமான அளவில் அதைப் பயிர்செய்யத் தொடங்கினர் இத்தாலியர் அவர்கள் தக்காளிப் பழத்தை 'பொன் அப்பிள்' என்று அழைத்தனர். ஆதியில் மத்திய அமெரிக்காவில் வாழ்ந்த சிவப்பு இந்தியர்கள் வெகுகாலமாகத் தக்காளிப்பழத்தைப் பயன்படுத்தி வந்தனர். அவர்கள் இதை 'தொமட்டி' என்ற பெயரால் வழங்கினர். அந்தப் பெயரிலிருந்துதான் இதன் ஆங்கிலப் பெயரான 'டொமாடோ' பிறந்தது' என்று ஒரு குறிப்புக் கூறுகிறது.

ளிப்பழம் பயிர் செய்வதற்குரியஎல்லா இயல்புகளும் அமைந்துள்ளன. இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிடவும்சிறந்த வகைகள்இப்போது நம் நாட்டில் பெருகியுள்ளன தக்காளி பயிராகும் நிலப்பரப்பும் அதிகமாகிவருகின்றது. நமது நாட்டு மண்ணில் தக்காளி நன்றாக விளைகிறது, ஆண்டுதோறும் வெளி நாட்டிலிருந்து பற்பல புதியவகைகளும் வந்து பயிராகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன: குள்ள அரக்கன் (Dwarf giant) விரைவில் காய்ப்பான் (Earliana) மஞ்சள் நெல்லி (Yellow-pluam) பொன்னரசி golden queen) பெருஞ்சிவப்பன் (Large red) முதலியன நம் நாட்டின் சத்து உணவு நிலையும், பொருளாதார நிலையும் உயர்வடைவதற்குத் தக்காளிப் பயிர் மிகவும் துணைசெய்கின்றது.

30 ஆண்டுகட்கு முன்னர் தக்காளி பெரிய நகரங்களில் மட்டுமே பயன்படுத்தப் பட்டுவந்தது. இதனைப் பயன்படுத்துவதில், பலர் அருவருப்பும் கொண்டிருந்தனர். இக்காலத்தில் இதுமக்கள் மிக அதிகமாக விரும்பி பலவகை உணவாக உட்கொள்ளும் பொருளாயிற்று. தக்காளியும் கத்தரியும், ஒரே தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தன. தக்காளியைப் பச்சையாகவும், சமைத்தும் சாப்பிடுகிறோம். பழத்தில் உள்ள சத்துக்களில் பல, காயில் இல்லை. பழமாகச் சாப்பிடும்பொழுதுதான் அதன் முழுப் பயனையும் நாம் பெறுகிறோம் பழத்தைச் சமைத்துச் சாப்பிடுவதைவிடவும் பச்சையாகப் புசிப்பது நல்லது; தக்காளிச் சாறுகவும் அருந்தலாம். நாரே இல்லாத இந்தப்பழத்தில், சதைப்பற்றுக் குறைவாகவும், சாறு அதிகமாகவும் இருக்கின்றது மற்றெல்லாப்பழங்களையும்விட, இதில் உணவுச்சத்து அதிகம். உயிர்ச்சத்துக்களில் ஏ. பி. சம அளவிலும், சி. சத்து அவ்விரண்டைவிட அதிகமாகவும் இருக்கின்றது. டி. சத்தும் ஓரளவு இருக்கின்றது. காடி (அசிட்) என்னும் புளிப்புப் பொருள். காயில் அதிகமாக உண்டு. பழுக்கப்பழுக்க காடிப் பொருள் குறைந்து, சர்க்கரைச் சத்து அதிகமாகின்றது! இதில் உள்ள உயிர்ச் சத்துக்கள் எளிதில் இரத்தத்தில் சேரக்கூடிய தன்மையில் உள்ளன. உணவுப்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்

## நிறைகுடம்

வீணையின் மெல்லிய நாதத்தை மத்தளம் அடக்கிவிடும்: புனுகின் வாசனையை பெருங்காயத்தின் மணம் ஓங்கவிடாது. அதுபோல அறிவில்லாதவனின் உரத்தபேச்சு அறிவாளியின் குரலை ஓங்கவிடாது அடக்கிவிடும்.

'குவிஸ்தான்'

## அவர் எழுதிய தமிழ்

நாவலர்களும் பாவலர்களும்' சங்க இலக்கியங்களைச் சுற்றி நாலுபக்கமும் வேலிகள் அமைத்து, அங்கு எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் எழுப்புச் சுவரை எழுப்பி வைத்துக்கொண்டு, 'உள்ளே ஆடுது காளி, வேடிக்கை பாரடிதோளி' என்பதுபோல 'தொல்காப்பியத்தைப் பாரீர், அதன் தொன்மையைக் காணீர்' என்ருல் அதனிடம் யார் அணுகுவர்? சங்க இலக்கியங்களை வீட்டைவிட்டு வெளியேற்றி நாட்டிலே நடமாடவிட வேண்டும். நடன சுந்தரிகளாக சிறுசிறு பிரதிகள்மூலம் தொல்காப்பியக் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால்தான், தொல்காப்பியம் சிறுசிறு குழந்தைகளாக ஒவ்வொருவருடைய மடியிலேயும் மனதிலேயும் தவழும். ஒவ்வோர் இல்லமும் இலக்கியப்பூங்காவாகக் காட்சியளிக்கும். இன்றைய புலவர்கள் உண்மையிலேயே இனிமையையும் எளிமையையும் சங்க இலக்கியத்துடன் சேர்த்து மக்களுக்கு ஊட்டியிருப்பார்களேயாளுல், சங்ககாலப் புலவர்களைப் போற்றவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்குமாளுல், இருந்திருக்குமாளுல். அவர்கள்ஒவ்வோர் இல்லத்தையும் இலக்கியப் பூங்காவாக்கும் உழவர்களாக இருந்திடுக்கவேண்டும். ஆளுல், அப்படியில்லை என்பதை நினைக்கும்பொழுதுதான் அவர்கள் இவ்வளவு நாட்களாக நாட்டுக்குச் செய்தது தொண்டு அல்ல, துரோகம் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

— சி. என். அண்ணுதுரை

## பறவை சாஸ்திரம்

■ வீட்டைவிட்டு வெளிக்கிடும்போது மரங்கொத்தி கத்திளுல் போகும்வழியில் இடையூறுகள் உண்டாகும்.

■ பெட்டைக்கோழி கூவுதல் அபசகுனம்.

■ மாடப்புருக்கள் வீட்டில்வந்து குடியேறிளுல் நல்ல அதிர்ஷ்டமுண்டாகும். குடியிருந்து பறந்து போய்விட்டால் கெடுதி.

■ புளினிகள் வளவுக்குள் சண்டைபிடித்தால் வீட்டிலும் சச்சரவு.

■ சாமத்தில் காகம் கரைவது சுகயீனத்தைக் குறிக்கும்.

■ காகம் வீட்டுக்கூடாகப் பறந்துசென்ருல், வீட்டில் ஒருவருக்குக் கஷ்டகாலம்.

■ ஆந்தை அலறிளுல் வீட்டைவிட்டு வெளியேற நேரிடும்.

■ வால்நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடம் போளுல் அபசகுனம்.

இப்படிப் பலவிதமான ஐதீகங்கள் நமது நாட்டுப் புறங்களில் நிலவுகின்றன.

## 'டப்பா' பூக்கள்

மனிதன் தகரத்தில் அடைத்து வியாபாரம் செய்யாத பொருள் எதுவுமில்லை என்று கூறலாம்' சங்கீதம்முதல் சாம்பார்வரை 'டப்பா'க்களில் அடைக்கப்பட்டு விட்டன. இப்பொழுது ஜப்பானில் பூஞ்செடிகளையும் தகரங்களில் அடைத்துவிடுகிருர்கள். இயற்கையான மண் கிடைக்காத நெருக்கமான மாடிக்கட்டடங்களில் வசிப்போர் இவற்றை விரும்பி வாங்குகிருர்கள். கடையில், போய் உங்களுக்குப் பிடித்தமான பூஞ்செடியின் பெயரைச் சொன்ளுல் கடைக்காரர் ஒரு தகரத்தை எடுத்துத் தருவார். தகரத்தைத் திறந்து சூரிய ஒளி படும் ஓரிடத்தில் வைத்து தண்ணீரை ஊற்றவேண்டியது தான் தகரத்திலுள்ள விதை முளைத்து வளர்ந்து மரமாகி வளரும்.


## கிளிக்கு ஒரு ஜோடி

சிலநாட்களாக கிளி எதுவும் சாப்பிடாமல் தூங்கிக்கொண்டிருந்தது. அதைச் செல்லமாக வளர்த்த இளம்பெண் உடனே பறவை வைத்தியரிடம் கொண்டுசென்ருள். அவர் அதைச் சோதித்துப் பார்த்துவிட்டு அதற்கொரு துணை தேவைப்படுகிறதென்று சொன்ளுர். பெண்ணுக்கு இரண்டு கிளிகளை வைத்துக்கொண்டு மாரடிக்க விருப்பமில்லை. 'கூட்டுக்குள்ளே ஒரு முகம்பார்க்கும் கண்ணுடியை வைத்துவிட்டால் போதாதா?' என்று கேட்டாள்.

வைத்தியர் சிறிது நேரம் யோசித்துவிட்டு' 'அம்மா, உங்களுககு ஒரு கண்ணுடி தந்துவிட்டால், நீங்கள் அதோடு 'திருப்திப்படுவீர்களா?' என்று கேட்டார்.

தயாரிப்பு:—வழிப்போக்கன்

# திருவையாறு மஹா கும்பாபிஷேக



கோயிலும் யானையும்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி கோயில் கும்பாபிஷேகம் 31-3-71 ல் நடைபெறுகின்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இக்கோயிலை சுமார் 4 லக்ஷ ரூபாய் செலவில் திருப்பணி செய்துள்ளார்கள்.

திருவையாறு என்னும் தலம் தமிழ்நாட்டில் தஞ்சாவூரிலிருந்து 8 மைல் தூரத்தில் உள்ளது. தஞ்சையிலிருந்து அடிக்கடி பஸ் வசதி உண்டு. இத்தலம் ஐயாறு, பஞ்சநதம், ஜப்பேசுரம் பூலோககைலாயம், கவிரிக்கோட்டம் என்னும் பல பெயர்களை உடையது.

'தனுர்சுப்பிரமணியர்' இங்கே வில்லேந்தி வீரக்கோலத்துடன் நிற்கின்ருர் இருபுறமும் தேவியர் உள்ளனர்.

தருமத்தின் வடிவான ''திருநந்திதேவர்'' திருமணம் செய்துகொண்ட பெருமையும், சிவபெருமான் தன்னைத்தான் பூஜித்தமான்பும் உடையது திருவையாறு. தருமைஆதீனத்தின் இருபத்தேழு விண்மீன்களில் இதுவும் ஒன்று.


சித்ரா பௌர்ணமியில் ''ஏழூர் திருவிழா'' நடைபெறும். (1) திருவையாறு, (2) திருப்பழனம், (3) திருச்சோற்றுத்துறை, (4) திருவேதிகுடி, (5) திருகண்டியூர், (6) திருப்பூந்துருத்தி, (7)

— என். ராமகிருஷ்ணு —

(மாயூரம்)

திருவீதிகள் உட்பட 5 பிரகாரங்களையுடையது. சுவாமிக்கும் அம்மைக்கும் தனித்தனி கோவில்கள் உள்ளன. சுவாமி கோவிலிலுள்ள தக்ஷிணுமூர்த்தி மிகச் சிறப்பானவர். பல மண்டபங்கள் உள்ளன. ஐயாறப்பர் சுயம்பு வடிவம் செம்பொற் சோதியார் அறம் வளர்த்த நாயகி திரிபுரசுந்தரி, தரு

திருநெய்த்தானம் முதலிய ஏழூர்களையும் இறைவன் அம்மையோடும் நந்திதேவரோடும் அலங்கரிக்கப்பட்ட கண்ணுடிப்பல்லக்கில்சென்று ஏழூர் மூர்த்திகளோடு திருவையாறு அடைந்து தரிசனம் தருவார். மக்கள் இவ்விழாவை திருநந்திதேவர் திருமணஊர்வலம் என்பர்.



ஏழூர் திருவிழகாண்ணுடிப் பல்லக்கு

மாம்பிகை இத்தலத்தில் சபதஸ்தானம் என்னும் ஏழூர் திருவிழாவில் இறைவனும் இறைவியும் கண்ணுடிப் பல்லக்கில் ஏறி அருள் வழங்குவார்.

தீர்த்தங்களில் சிறந்தவை 'காவிரியும்' 'சூர்ய புஷ்கரணியும்' இங்கு காவிரியில் ஒரு நாள் மூழ்கிளுல் ஒரு வருட பலன் உண்டு. தல விருட்சம் 'வில்வம்'.

தென் கயிலாயத்தில் இங்கே அப்பர் சுவாமிகள் திருக்கயிலைக் காட்சியைக் கண்டார். 'கண்டறியாதன கண்டேன்' என்று ஆடிப் பாடி மகிழ்ந்தார். நால்வர் நற்றமிழும் பெற்ற தலம் இது.

இறைவனுடைய ஏவலாலே துவாரபாலகர்களில் 'ஆட்கொண்டார்' எமனை காலின்கீழ் வதைக்கும் திருக்கோலத்தில் தென்வாயிலில் காட்சி அளிக்கின்ருர். குங்கிலியமிட்டு அன்பர்கள் இத்தலத்தில் வழிபாடுசெய்கின்றனர் 'புலன் ஐந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி அலமந்தபோது அஞ்சேல் என்று அருள் செய்வான் அமரும் கோயில்' என்பது ஆளுடையபிள்ளையார் அருள் வாக்கு.

தட்சிணுமூர்த்தி 'ஸ்ரீ ஹரிகுரு சிவயோகதட்சிணுமூர்த்தியாக' அருள் வழங்குகின்ருர். அருள் வழியும் முகம் 18 பேதங்களில் சிறப்புள்ள ஒன்று வலது மேல்கரத்தில் பிரம்மகபாலம். இடதுகரத்தில் சூலம் கீழ் வலக்கரம் சின்முத்திரை இடது கரத்தில் சிவஞானபோதம், திருவடிக்கீழ் அசுரன்.

சுற்றுக்கோவில்கள் ''தக்ஷிணகைலாயம்'', ''உத்தரகைலாயம்'' ''தண்டபாணி கோயில்'', மண்டபங்கள் முத்திமண்டபம், நூற்றுக்கால் மண்டபம், உற்சவ மண்டபம்.

சிற்பங்கள் மிகப் பழமையானவை. பல்லவ, சோழ, சாளுக்கிய, பாண்டிய, நாயக்க காலத்து பாணிகள் காணப்படுகின்றன.

சுமார் 70 கல்வெட்டுகள் உள்ளன. உத்தர கைலாயம் முதலாம் இராஜராஜன் மனைவியாகிய ஒலோகமா தேவியாரால் கட்டப்பட்டதால் ''ஒலோகமாதேவீச்சரம்'' என வழங்கப்படுகின்றது. ''திருபுவனமாதேவீச்சரம்'' என்றும் திருக்கோயில் உண்டு. தென் கை

லாயம் முதலாம் இரா திரசோழன் மனைவி வன்மாதேவியால் க பட்டது. இறைவ சர் வாணன். றைவ ச கிருஷ்ண ராஜ யார் பிற்காலத்தி கோவிலைப் புதுப்பித்த

அம்மன்கோயில் தார்களால் திருப்பணி யப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர், பர், சுந்தரர், மாணிக் கர் இத்தலத்தைப் ப பாடியுள்ளார்கள். ஐய காடவர்கோன் க்ஷே திருவெண்பாபாடியுள் அருணகிரிநாதர் திரு உண்டு. திருவையாற் ணமும், திருவையா பதிற்றுபத்தந்தாதியும் பானவை.

திருவாசகத்தேன்

# குற்றங்கள் நீக்கிக் குணங்காட்டும் ஈசன்

கிளிவந்த மென்மொழி
யாள் கேழ்கிளரும்
பாதியனை
வெளிவந்த மாலயனும்
காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச்
சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி
எண்ணரிய இன்ன
ருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின்
உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப்
பாடுதுங்காண் அம்மா
ஞய்.

கிளிபோல இனிமையாகப் பேசும் அகிலாண்டேசுவரியின் ஒளிவிளங்கும் பாதித் திருமேனிகொண்டவர் எம்பிரான். அடியையும் முடியையுங் காண்போம் என்று அகந்தை காரணமாகத் துணிந்து முறையே வராக' அன்னவடிவு கொண்டு வெளியேவந்த அரிபிரமர்களால் அறியவொண்ணு ஒளிவடிவான சதுரப்பாடு உடையவர் பரம்பொருள். தெளிந்த தேனைக இனிமை அருள்பவர், சிறந்த திருப்பெருந்துறையில் பரமாசாரியத் திருக்கோலம் புனைந்து எவரும் காணும் படி எழுந்தருளியிருந்து தமியேன்மீது இரங்கி, அளவிடுதற்கரிய இனிய அருளிளுல் பேரொளி வடிவாக என் மனத்தினுள்ளே ஞானப் பிரகாசம் பொலியும்வண்ணம் திருவருள் புரிந்த அழகிய தண்ணளி கொண்ட எம்பிரானை, அம்மனையாடும் செல்விகாள்! பாடுவீராக.

— க. வை. ஆ. சர்மா

முன்னுனை மூவர்க்கும்
முற்றுமாய் முற்றுக்கும்
பின்னுனைப் பிஞ்ஞகனைப்
பேணு பெருந்துறையின்
மன்னுனை வானவனை
மாதியலும் பாதியனைத்
தென்னுனைக் காவானைத்
தென்பாண்டி நாட்
டானை
என்னுனை என்னப்பன்
என்பார்கட் கின்ன
முதை
அன்னுனை அம்மானைப்
பாடுதுங்காண் அம்
மாஞய்,

பிரமா; விட்டுணு, உருத்திரன் எனப்படும் மும்மூர்த்திகளுக்கும் முற்பட்டவர் எம்பிரான். அகிலப் பிரபஞ்சத்திலும் கலப்பிளுல் எல்லாப் பொருளாகியிரு ரும் எம்மிறைவன். வற்றையும் இறுதியில் முன் ஒடுக்கி தாம் ரம் எஞ்சியிருப்பவர் பரம்பொருள். எவர பேணப்படும் திருப் துறையில் நிலைபெ விளங்கி அருள் புரிபவ பரன், வானவனு உமைபாதியாகியும் னைக்காவில் அப்புலிங் யும், தென் தமிழ்ப்ப நாட்டில் எனக்கு இனி கியும் உள்ளவர் அப் மான் என்னப்பன்என முருகி உரைப்பவர்க இனிய அமுதமாகியும் னையாகியும் அப்பனு விளங்கும் எம்பிரானை மனையாடும் அன்பினீர் வீராக'

பெற்றி பிறர்க்கரிய
பெம்மான்
துறை

கொற்றக் குதிரை
யின்மேல் வந்த
தன்ன

குற்றங்கள் நீக்கிக்
கொண்டு கோதா

சுற்றிய சுற்றத்தொ
அறுப்பான் தொல்
பற்றியப் பாசத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேகம்



லாம் இராஜேந் மனைவி பஞ்ச யால் கட்டப் இறைவன் பஞ் ன். ... றவி அஞ் ஷ்...ராஜஉடை ாலத்தில் இக் புதுப்பித்தார்.

ாயில் நகரத் திருப்பணிசெய் ாது.

சம்பந்தர், அப் , மாணிக்கவாச லத்தைப் பற்றிப் ர்கள். ஐயடிகள் ன் க்ஷேத்திர ாபாடியுள்ளார். ந்தர் திருப்புகழ் வையாற்று புரா ருவையாற்று ந்தாதியும் சிறப்

க்

ன்

ருளாகியிருப்பவ றைவன். எல்லா இறுதியில் தம் தி தாம்மாத்தி ருப்பவர் அப் ர். எவராலும் திருப்பெருந் நிலைபெற்று ன் புரிபவர் அப் னவனுகியும். ாகியும் திருவா அப்புலிங்கமாகி தமிழ்ப்பாண்டி ர்க்கு இனியவனு வர் அப்பெரு ப்பன்னஉள்ள ரப்பவர்களுக்கு மாகியும் அன் அப்பனுகியும் ம்பிரானை அம் அன்பினீர் பாடு

றர்க்கரிய ம்மான் பெருந் துறையரன்
குதிரை ல் வந்தருளித் தன்னடியார்
நீக்கிக் குணங் டு கோதாட்டிச்
றதி தொடர் தொல்புகழே பாசத்தைப்

பற்றநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம்
பாடுதுங்காண் அம்
மானுய்.

உண்மையான அன்பு கொள்ளாத பிறரால் இன்ன தன்மையன் என்று அறிய முடியாத பெருமான் திருப்பெருந்துறையில் சிறந்து விளங்குபவர். வேதமாகும் வெண்கொற்றக் குதிரையில் பரிமேலழகராகத் தோன்றி மதுராபுரியில் எழுந்தருளி வந்து தம்மிடத்தே மெய்யன்பு கொண்ட அடியார்களிடத்துள்ள குற்றங்களையெல்லாம் நீக்கிக் குணங்களையே ஏற்றுக்கொண்டு அவரவர்க்குரிய சிறப்புக்களை அருளியவர் எம்மிறைவன். நம்மைச் சூழ்ந்து பிணித்துள்ள குடும்பப் பாசத்தைத், தொலைப்பவனுகிய சிவபிரானுரது சீர் சிறப்புக்களாகிய திருப்புகழ்களையே நாம் கூறி நம்மைப் பற்றிய ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலத் தொடர்புகள் அறும்படியாக நாம் இறைவனைப் பற்றும்பொருட்டு. அம்மனையாடும் பெண்காள்! நாம் பிடித்துக்கொண்ட பேரானந்தத்தைப் பாடுவோமாக.

# ஐயா, ஒரு பிள்ளை (-பிழை) போதும்!

தேவன் - யாழ்ப்பாணம்

கல்வியமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்கு ஒரு பெரிய கும்பிடு - ஒரு நூற்றுண்டுக்கு மேலாக தப்பும் தவறுமாய் உருக்குலைந்து கிடக்கும் நாட்டின் கல்விச் சேவையில் புதிதாய் எதையாவது சாதித்துவிட்டார் என்பதற்காகவல்ல (அது யாரால் முடியும்?) மக்கள் குழுக்களைக் கலைத்தமைக்காக.

மக்கள் குழு என்று சொன்னால் அதிலிருந்த உறுப்பினர்களுக்கு பொச்சம் தீராது. 'பீப்பிள்ஸ் சொமிற்றி' என்று ஆங்கிலத்தில் குறிப்பிட்டாலும் திருப்தியளிப்பதில்லை. 'ஜனதா கொம்மிற்றி' என்றுல்தான் பூரிப்பு. (ஒலிதயமோ?)

சர்வவல்லமை படைத்த ஆண்டவன் ஒரு குழந்தையைத் தந்தான் - அது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தவறு. ஆனல் இப்போது அதன் பலனை அனுபவிக்கிறேன். ஆண்டவனுக்கனுல் கற்பூரத்தைக் கொழுத்தலாம், தேங்காயை அடிக்கலாம் - ஆனல் அவனுக்கும் மேலான வல்லமை பொருந்திய 'ஜனதாக் கொமிற்றி' உறுப்பினருக்கு என்ன செய்யலாம் என்று என் மண்டையைக் குழப்ப நேரிடும் என்று எங்கே கண்டேன்?

மார்கழி வரைக்குஞ்சும்மா சைக்கிளில் உழக்கித் திரிந்த அந்த மாபாவி - சுவீப் அடிச்சவன் மாதிரி - மாசி பிறக்கும்வரையும், காரில் திரிந்ததென்ன, வீட்டில் விருந்தினரென்ன, எம் பீ மாருடைய வீட்டு வாசல்களிற் போல இயூக்களென்ன, ஈசிசேரில் சாய்ந்தபடி 'பாப்பம்' என்பதென்ன, ... ... என்ன, என்ன, என்ன, என்ன!

கல்வி இலாகா சுற்று நிருபங்கள் முழுவதையும் கரைச்சுக் குடிச்சவன் மாதிரி எனக்கு 'அட்மிஷன்' (அனுமதி - பிரவேசம்) பற்றி விளங்கப் படுத்துகிறுன். பத்திக்கொண்டு வந்தது! என்ரை பிழையைச் சரியா இன்னும் சொல்லேல்லை. ஆடி மாதத்திலை கலியாணம் கட்டுவதில்லை அந்த மாதத்திலை பிழையொண்டுமில்லை. பிறக்கிற குழந்தை சித்திரையிலை பிறந்திடுமெண்டுதான் அது மாதிரி இந்த 'அட்மிஷனை' உத்தேசித்துத்தான் திருமண நாள் வக்கவேண்டும் போலையிருக்கு

என்ரை பொடி பிறந்தது பெப்ரவரி 4ந்-திகதி சுதந்திர தினமெண்டு இருபத்தொருகுண்டு முழங்கேக்கை முளைச்ச அவதாரம். அப்ப நான் பட்ட சந்தோஷம்! இப்ப...? ஜனவரி 31க்கு முந்திப் பிறந்தாலெதானும் அட்மிஷன்: பின்னை ஆரோ ஒருத்தன் — அவன்ரை மூளையை வறுத்து அவிக்கலாம், சொன்னுன், 'ஜனதா கொமிற்றி ஆக்களைப்பிடி, எல்லாம் சரிவரு'மெண்டு.

அண்டைக்குத் தொடங்கின்னுன் இண்டைக்குந்தானே பிள்ளை வீட்டிலை இழிக்குது. இந்தத் திகதி விஷயம் கடைசியாக வெளிக்கிட்ட சங்கதி ...அதுக்கு முந்தி... ஒரு படிவம்- பத்துசதம் - ஒண்டே வாங்கின்னுன்! ஒரு டசின் வாங்கி அஞ்சு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினன். மிச்சத்தை நிரப்பி எனக்குத் தெரிஞ்ச ஜனதாக் கொமிற்றி ஆக்களிட்டைக் குடுத்தன். இதுக்குள்ளை ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் என்ரை வீட்டு விலாசம் வெவ்வேறை. எனக்கே எந்த வீட்டிலை ஆரோடை இருக்கிறன் எண்டு ஒரே குழப்பமாய் போச்சு.

இந்த அமளிக்கை பால் கட்ட வேணும், பிறப்புச் சேட்டிபிக்கேற் வேணுமெண்டு ஒரு கரடி விட்டாங்கள். அதுகளுக்கும் அவரை இவரைப் பிடிச்சு ஒருமாதிரி வேலையைக் கொண்டு போனன். அது ஒருமாதிரிச் சரிவர இருக்கிற இடத்துக்கு விதானையிட்டை துண்டு கூப்பன் எண்டு ஒரு குண்டு போட்டாங்கள்.

அஞ்சு வருஷத்துக்கு முந்தி விட்டபிழை— மசிவனு நான்! அஞ்சு விலாசத்திலும் நான்தான் இருக்கிறனெண்டு —ஒண்டுக்கு விதானையின்ரை துண்டு, மற்றதுஎன்ரைமுதலாளியின்ரை துண்டு, மற்றதுக்கு வீட்டுச் சொந்தக்காரன்ரை வாடகைப் பற்றுச் சீட்டு... இப்பிடி வண்டில் விட்டன்'

கூப்பனைப்பற்றி மெதுவாய் விசாரிச்சாங்கள்... தாயின்ரை கூப்பன்... அதாவது என்ரை மனுசியின்ரை முக்கியமெண்டாங்கள். வளமாய் மாட்டிக்கொண்டன் எண்டுதான் நினைச்சன். ஆனல் இதுக்காகப் பின் வாங்கிறதே. மேலாலை ஒண்டு விட்டன், அது கலியாணங்கட்டின காலந் தொட்டுமனுசியின்ரை தேப்பனிட்டைதான் கூப்பன் கிடக்கு. அத நான் மாத்தேல்லையெண்டு அது கொஞ்சம் வேலை செய்துது.

ஜனதாக் கொமிற்றி கொம்பு எனக்குச் சொல்லுது, நாங்கள் அந்த விலாசத்திலை பாப்பமெண்டுபோனு ...ஆரோ நாங்கள் வருவினம் எண்டு சொல்லிப்போட்டினைபோல இருக்கு. நல்ல வடிவாய் பங்களூர்ச்சீலை கட்டிக்கொண்டு மனுசி நிக்குது இதென்ரை மனுஷியைப் பற்றியல்ல, பங்களூரும் காஷ்மீரும் நான் வாங்கிக் குடுத்தாலெல்லோ.

அஞ்சு வீட்டுக்கும் போனன், எனக்கு அளவான மிஷினை - மன்னிக்கவும் மனுஷியைப் பார்த்து ஆரேன் வந்து கேட்டால் என்ரை பெஞ்சாதியெண்டு நீங்க சொல்லுங்கோ. சும்மா கதைக்குத்தானே? அதுக்கு மேலை என்னவாவது கேக்கப் போறனே' எண்டு வளைச்சு என்ரைபேர் பொடியின்ரை பேர், எல்லாம் பாடமாக் குவிச்சன். ஒரு வீட்டிலை மட்டும் எனக்குக் கொஞ்சம் மனவருத்தம் என்னெண்டா அந்த வீட்டிலை இருந்த மனுஷி அவ்வளவு வடிவல்லை. வயதும் கொஞ்சம்கூட. அதிலையென்ன? பெடியன் பள்ளிக்கூடம் போகவேணும். என்ரை மனுஷி எனக்கும் பாக்க மூப்பு எண்டு ஆரேன் நினைச்சா என்ன?

'அந்தப் பள்ளிக்கூடத்து வாத்தியெண்டா இதுகளை பாக்காம இடம் குடுக்கலாம் ஜனதா கொமிற்றி பேசுது. எனக்கு ஜூவாலை ஏறுது. நான் என்ன தொழில் பாக்கிறது எண்டு இப்பவே யோசிக்கிறன்? எல்லாரும் வாத்திவேலைபாத்தா பிள்ளையளுக்கு 'அட்மிஷன்'! ஆனல் உலகம் எப்படி நடக்கிறது?

'தமையன்மார் ஆரேன் படிச்சா எப்படியெண்டாலும் சுழிக்கலாம்' கல்லூரி அனுமதி நிபுணர் ஆலோசனை கூறுகிறூர். அப்ப தலைப்பிள்ளையளின்ரை கதியென்ன? 'இந்த ஒருபிள்ளைதானே என்ரை பேபிலைபதிஞ்சிருக்கிற பிள்ளை' என்கிறேன் எரிச்சலுடன். சிகரட் பாக்கெட்டை எடுத்துக் கையிலை நீட்டுறன். 'நான் வழக்கமாய் பாவிக்கிறேயில்லை. இப்பிடி கடுமையாய் மூளை வேலை செய்யேக்கை குடிப்பன்' என்ரை பிள்ளையைப் பள்ளியிலை சேர்க்க அவற்றை மூளை வேலை செய்யுதாம்.

'டிரான்ஸ்பர்' (இடமாற்றம்) எண்டாலும் கேள்வி முறையிலாமை எனவாவது செய்யலாம்' பிள்ளையைச் சேர்க்கிறதற்காக அந்நிய ஊரிலை தலைலடிச்சுப் போட்டு பிள்ளைக்கு அஞ்சு வயது முடிய இடமாற்றம் பெறவேணுமாம். 'என்ன சொல்லுறியள் ஒரு பெடியன் பிரவேசப் பரீட்சை எடுத்தவன். குண்டு! நான் மெதுவாய் அதைப்பற்றியொண்டும் சொல்லாமை இன்னொரு விண்ணப்பம் அனுப்புங்கோ இடமாற்றம் எண்டு. நான் வெண்டுதாறன் எண்டன். அலுவலை முடிச்சுக் குடுத்தன்'

'சரியப்ப நான் கூட்டம் நடக்கேயிக்கை அங்கினை வந்து நிக்கிறன். எப்ப'எண்டு சொல்லுங்கோ மனுசியையும் வேணுமெண்டாக் கூட்டிக்கொண்டு வாறன். சிரிச்சுச் இரிச்சு கதைச்சா ஒரு மாதிரி அலுவல் ஒப்பேறும். தானே?' இது அடியேனுடைய கேள்வி,

பொறும். வெள்ளிக்கிழமை பின்னேரம் 5 மணிக்கு—கல்லூரிக்கொமிற்றி, போயாகாலமை...கல்லூரிக் கொமிற்றி ... கல்லூரி இன்னும் அறிவிக்கேயில்லை. போயாவானுக்குமனுசியைக் கொண்டரும். அதிலை இரண்டொருத்தர் எடுபடக்கூடியவையிருக்கினம்'. இவர்மூண்டு ஜனதாக் கொமிற்றி மெம்பர்.

நானும் போய்நிக்கிறனே. வெளுத்து வாங்குறுன்கள்- இன்ஸ்பெக்டர் ஏதாவது சொன்னா எதிர்க்கிறூர்கள். பிறிஞ்சிப்பல் ஏதாவது சொன்னுவளைத்துக்குவாருன்கள், என்ன செய்தாலும் நான்பிடிச்ச மெம்பருக்கு ஒரு வாழைக்குலையாவது கொண்டேக்குடுக்கலாம். ஏனெண்டா மூண்டு பள்ளிக்குடத்திலைதான் மூண்டுவெவ்வேறை விலாசத்திலை வசிக்கிறனுன் எண்டு அடிச்சுச் சொன்னது உண்மை.

கடைசியா 'இனி அடுத்த வரியம் பாப்பம், நானும் ஏலுமானளவு தெண்டிச்சுத்தான் பாத்தன். என்னசெய்யிறது? இதுக்குள்ளை வவுனியா, கிளிநொச்சி அங்கினையுக்கை இந்தவருசம் சேத்து விட்டியெண்டா வாறவருசம் பின்தங்கின இடத்திலையிருந்துவாறபிள்ளை, போடிங்கிலை விடலாம் எண்டுசொல்லிப் பாக்கலாம்.' ஒரு வருசத்திட்டம் தீட்டுகிறது அது

நான் கையை விடுகிற ஆளே! பிறிஞ்சிப்பலைநேரிலை அழுங்குமாதிரிப் பிடிச்சன். அந்தஆள் ஏலாட்ட ஏலேல்லை யெண்டவுடனே வித்தியாகந்தோரிலை போய்த் துண்டு வாங்கியந்தா செய்கிறேன் என்றூர். வித்தியா கந்தோரிலை போய்த் தூங்கி தெரிஞ்சஒரு பீயோனைப் பிடிச்சு ஒரு துண்டு வாங்கினன். 'இடமிருந்தால் இந்த விண்ணப்பத்தை ஆலோசியுங்கள்.''

பிறிஞ்சிப்பல் சொல்கிறூர். 'சேருங்கோ' எண்டு எழுதினுட் பறவாயில்லை. இது சரி

(12-ம் பக்கம் பார்க்க)

# பெருந்தேவனார் கண்ட "அருந்தவத்தோன்"

சங்க இலக்கியங்கள் 'திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் பெருமைகளைப் பல இடங்களிலும் எடுத்துக் கூறுகின்றன. மதுரையிலே இருந்த முதல் தமிழ்ச் சங்கத்தில் இறைவனும் இருந்து தமிழாராய்ந்தார் என்பது வரலாறு. சங்க இலக்கியங்களில் முழுவதும் கடவுளர் புகழையே கூறுகின்ற பல நூல்கள் உண்டு. உதாரணத்திற்கு பரிபாடல் என்னும் தொகை நூலைக் கூறலாம்.

கலித்தொகை, புறநானூறு பதிற்றுப் பத்து, அகநானூறு முதலிய தொகை நூல்களுக்கெல்லாம் ஒருவரே கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். எல்லாப் பாடல்களும் ஒரே விதமானவையல்ல. பல பல விதமாக இறைவனைப் படம் பிடித்துக் காட்டுகிறூர். இவ்வாறு பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனூர் ஆவர்.

## இறைவன் பொதுத்தோற்றம்

அகநானூறு என்னும் சங்கநூலுக்குப்பாடிய கடவுள் வாழ்த்திலே இறைவனின்தோற்றத்தைப்படம் வரைந்து காட்டுகிறூர். மாலைக்காலம்போன்ற சிவந்த மேனி நெருப்புச் சுடர்கள் எழுந்த தன்மை போன்ற சிறந்த சடை; சடையில் விளங்கும் பிறைசந்திரன், கோடுகள் விளங்கும் வலிய புலியின் தோலை உடையாக உடையவர்; மறையிசை பொருந்தியதும், நீலமணிபோன்ற நிறமுடையதுமாகிய கண்டத்தையுடையவர். சிரசிலே பொன்போல் நிறமுள்ள கொன்றைமாலை அணிந்தவர்; நெற்றியிலே [illegible] கப் பெருத கண், மார்பிற் பூணுல், கையிலே தாங்குவது சூலம், மழு, ஏறி நடாத்திச் செல்வது இடபம். அவரின் ஒருபாகமாய்ப்பொருந்துபவர் உமையம்மையார்.

## சிறந்த கொடி

இவ்வாறு இறைவனின் தோற்றத்தை சொற்களால் எழுதிக்காட்டும் பெருந்தேவனூர் வேறு சில இடங்களில் சற்று விரிவாகவும் தெளிவாகவும் விளங்க வைக்கிறூர். புறநானூற்றிலும் கலித்தொகையிலும வரும் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் இத்தன்மையுடையன. சிவபெருமான் தரும் தேவதையையே இடபரூபமாக்கி ஊர்தியாகக் கொண்டார் என்பதுவரலாறு. அறத்தையே முதலாக உடையவர் இறைவன். அறவழி நிற்போர்க்கே இறைவன் அருள் கிட்டும். 'அறவாழி அந்தணன்' என வள்ளுவரும் இறைவனை அழைக்கிறூர். அறக்கடவுளாகிய இடபத்தை ஊர்தியாகக் கொண்ட இறைவன் அதனைக் கொடியாகவும் உயர்த்துவதால் அறத்தின் பெருமையை உணர முடிகிறது. எனவே அது சிறந்த கொடியாகிறது.

'ஊர்தி வால்வெள்
ளேறே சிறந்த
சீர்கெழு கொடியும்
அவ்வே றென்ப'

என்பது பெருந்தேவனூர் வாக்கு

—வ. குகசர்மா—

## கறைமிடறணியல்

இறைவனுடைய நஞ்சுண்டு கறுத்த கண்டம் உயிர்களுக்கு அருளும் செயலை வெளிப்படுத்துகின்றதென்பர். தேவர்களை ஆலகாலவிடம் அழிக்காமல் காப்பாற்றிய அருட்செயலின் அடையாளமே 'கருமணிமிடறு'. இந்த நீலகண்டத்தை ஞானசம்பந்தர் பல தேவாரப் பதிகங்களில் போற்றிப் பாடியுள்ளார். அக்கண்டம் மிக இனிய வீணைஇசை போன்று வேத இசையை எழுப்பும் 'யாழ்கெழுமணி மிடற்றந்தணன்' என்று கூறும் பெருந்தேவனூர் பலராலும் போற்றப்படும் பெருமையையும் எடுத்துக் கூறுகிறூர்.

'கறைமிடறணியலும்
அணிந்தன்று அக்கறை
மறைநவல் அந்தணர்
நுவலவும் படுமே'

## பெண்ணுரு ஒரு பாகம்

பெண்ணை ஒரு பாகமாய் உடையவர் பெருமான் உமையம்மையாராகிய அப்பெண்ணே இறைவன் அருட்சத்தியென்பர். மலரும் மணமும்போல மணியும்போல பேதமற்றவர். இறைவன் செய்யும் தொழிலில் சங்காரத் தொழிலும் ஒன்று, அதற்கு அருட் சக்தியாகிய உமையம்மையார் சம்மதிக்க மாட்டார் என அருளின் பெருமை தோன்றக் கலித்தொகையில் பாடுகிறூர். 'கொல்லும் புலித்தோலாடையைக் கட்டிக்கொண்டு கொன்றைமாலை தலையிற் புரள இறந்தவர்களின் மண்டையோட்டைக் கையில் ஏந்தி கபாலம் என்னும் கூத்தை ஆடும்போது உமையம்மை அதற்கேற்ற தாளம்

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கவி நயம் – 23

# காக்கையக்கா! கவலைப்படாதே!!

அன்புள்ள தம்பி தங்கைகளே இந்தவாரம் சில குழந்தைகளுக்குத் தங்கள் மனதிலே உள்ள சிறுகுறை ஒன்றைப் பற்றிச் சொல்லப் போகிறேன். எங்கள் வீட்டுப் பெண்குழந்தையாகிய திலகவதிக்கும் அந்த மனக்குறை இருக்கிறது. அந்தக் குறை என்ன தெரியுமா? தான் கறுப்புநிறம் என்ற குறைதான் அது திலகவதியின் அண்ணன் சேரன், அவளைப் பார்த்துநீ கறுப்பு. வடிவாக இல்லைஎன்று குறும்புடன் கூறினல் போதும், அவள் அழத்தொடங்கி விடுவாள். கறுப்பாகப் பிறந்ததே ஒரு குற்றம் என்பது அவள் எண்ணம். பெரிய மனக்குறை. இந்த எண்ணத்தை- குறையை மனத்தில் வளரவிடக்கூடாது. இந்தக் குறை மனத்தில் வளர்ந்தால் உங்களுக்குத் தெரியாமலே பொருமையை உண்டாக்கும். சினத்தை வளர்க்கும். வாழ்க்கையையே மோசமாக்கி விடும்.

— இரசிகமணி. கனக. செந்திநாதன் —

பறவைகளுக்குள்ளே காக்கை கறுப்புநிறம். அதற்கும் அந்தக்குறை மனத்தை அரித்தது. புறுவின் நிறத்தைக் கண்டு அது பொறுமைப்பட்டது. மயிலின் அழகைக்கண்டு அது மனம் வருந்தியது. அது ஒருநாள் மரத்திலே இருந்து கா கா என்று அழுதது. எங்கள் வீட்டுப் பெண்குழந்தையாகிய திலகவதியைப் போல அழுதது. அதை மணிவண்ணன் என்ற பையன் கண்டான் அவன் காக்கையைப் பார்த்து காக்கை அக்கா! காக்கை அக்கா! உனக்கு என்ன கவலை என்று கேட்டான் அது பதில் சொல்லியது. புறு என்னைக் கறுப்பு என்று கேலி செய்கிறது. மயிலும் சேவலும் என்னைக் கண்டால் பேசுவதேயில்லை. இதை நினைக்க எனக்கு அழுகை வருகிறது என்றது. மணிவண்ணன் அதற்குத் தேறுதல் கூறினன். கருமை நிறத்தின் பெருமையை எடுத்துக் கூறினன். கறுப்பு நிறத்தின் பெருமை என்ன என்பதை நீங்களும் அறிய ஆவல்கொள்வீர்களல்லவா? இதோ மணிவண்ணன் கூறிய பாடலை நீங்களும் கேளுங்கள்:-

காக்கை யக்கா
காக்கை யக்கா
கவலைப்படாதே-நிறம்
கறுத்திருக்கே
என்று நீயும்
கவலைப்படாதே
பார்க்கையிலே
கறுப்பினுக்கே
பாரில் சிறப்பு-நம்மைப்
படைத்தவனே
படைத்திருக்கான்
மறந்து விடாதே

திருமால் பிரமா முதலிய கடவுளர்கள், நம்மைப் படைத்துக்காக்கும் கடவுளர்கள் கறுப்பு நிறம். முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் கூட தமது கழுத்தில் கருமை நிறத்தை அழகுக்காக வைத்திருக்கிறுரே. இவைகூட உனக்குத் தெரியாதா? கடவுளர் சக்திகளைக் கூறுகிருயே. பூமியில் என்ன இருக்கிறதென்று கேட்கிருயா? கூறுகிறேன் கேள்:

வானநிறம் என்ன நிறம்
வந்துபாருநீ- உலகை
வளைந்த கடல் என்னநிறம்
பார்த்துக் கூறுநீ
காணும்மலை என்னநிறம்
கண்டு சொல்லுநீ-இவை
கண்டு தேர்ந்து தெளிந்த
பின்பு
கவலை கொள்ளுநீ.

வானத்தின்நிறம் என்ன தெரியுமா? கடலின் வண்ணம் என்ன பார்த்தாயா? மலையின் அழகு என்னநிறத்தால் வந்தது உணர்ந்தாயா? எல்லாமே கறுப்பு. இவற்றை யாராவது வெறுக்கிறார்களா? பார்த்துப் பார்த்துப் பரவசம் அல்லவா கொள்கிறார்கள்?

எங்கள் உடலைப் பார். அதில் சிறந்த உறுப்பு கண். கண்ணிலும்கூட நடுவில் இருக்கும் மணி சிறந்தது. அந்தக்கண்ணின் மணி என்ன நிறம்? உன்னுடைய நிறமாகிய கறுப்பு. இனி எந்தப்பறவை கேலி செய்தாலும் கவலைப்படாதே. நான் கூறியவற்றைக் கூறு. மனக்குறையை அகற்று.

உடலுறுப்பில்
சிறந்த தென்று
கண்ணினைச் சொல்வார்-
அந்த
உயர்ந்த கண்ணில்
ஒளிரும் மணி
உன்னிற மன்றோ?
கடவுளரில்
பாதிப்பேர்கள்
கறுப்பர்தானம்மா -
அதால்
கவலைவிட்டு இப்போநீயும்
களிப்புக் கொள்ளம்மா.

காக்கைக்குக் கூறியது போல, கவலைகொள்ளும் சிறுகுழந்தைகளின் மனக் கவலையைஅறிந்து பாடிய கவிஞர் ரா. பொன்ராசன். அவரது கவிதைநூல் பாப்பாப்பாட்டு. நல்ல பல குழந்தைப்பாடல்கள் அடங்கிய இந்த நூலை. அழகுப் பதிப்பகம் காரைக்குடி வெளியிட்டிருக்கிறது. முழுப்பாடலையும் ஒருசேரப் பாடுங்கள்!

காக்கையக்கா
காக்கையக்கா
கவலைப்படாதே- நிறம்
கறுத்திருக்கே என்றுநீயும்
கவலைப்படாதே.

பார்க்கையிலே
கறுப்பினுக்கே
பாரில் சிறப்பு-நம்மைப்
படைத்தவனே
படைத்திருக்கான்
மறந்துவிடாதே.

வானநிறம்
என்ன நிறம்
வந்து பாருநீ- உலகை
வளைந்தகடல் என்னநிறம்
பார்த்துக்கூறுநீ.

காணும்மலை என்னநிறம்
கண்டுசொல்லுநீ- இவை
கண்டுதேர்ந்து
தெளிந்த பின்பு
கவலைகொள்ளு நீ.

உடலுறுப்பில்
சிறந்ததென்று
கண்ணினைச் சொல்வார்
—அந்த
உயர்ந்த கண்ணில்
ஒளிரும்மணி
உன்னிற மன்றோ?

கடவுளரில் பாதிப்பேர்கள்
கறுப்பர் தானம்மா
- அதால்
கவலைவிட்டு இப்போநீயும்
களிப்புக் கொள்ளம்மா!

## பெருந்தேவ..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

போடுவாளோ என்று கேட்கிருர். போடமாட்டாளா என்பது குறிப்பு.

கொல்லை உழுவலைத்
தோலசைஇக்
கொன்றைத்தார்
சுவல் புரளத்
தன் அங்கை கொண்டு நீ
கபாலம் ஆடுவாள்
முலை அணிந்த முறுவலாள்
முற்பாணி தருவாளோ"

என்பது கலித்தொகை. இந்த அருட்சக்தியை தன்னுள் மறைத்து ஒரேபொழுதாகவும் இறைவன் நிற்பார்.

பெண்ணுரு ஒருதிறன்
ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக்
கரக்கினும் கரக்கும்'

### பிறைநுதல் வண்ணம்

இறைவன் பிறைச் சந்திரனைச் சடையில் தரித்துள்ளான். அதுவும் அருட்செய்கை. பிறை செவ்வியாள் நெற்றியைப் போன்றது. பிறை இறைவன் சடாமுடியில் இருக்கும் பெருமையால் யாவரும் அதை வணங்குகிறார்கள்.

'கோலப் பிறை வரவே சிவன் திருக்கோலம் தெளிவேண்டி' என்றுசீ ஒருபுலவர். இதையே பெருந்தேவஞர்

'பிறைநுதல் வண்ணம்
ஆகின்று அப்பிறை
பதினெண் கணனும்
ஏத்தவும் படுமே'

எனக் கூறினர்.

### முடிவுரை

தவமுதிர்ச்சியின் சான்றாவது தாழ்சடை. அனைத்துயிர்மேலும் செல்லும் கருணையைக் குறிக்க, கையில் நீர் வற்றுதல் இல்லாத கமண்டலம் உண்டு. அவரை வணங்கினுல் நமது துன்பமெல்லாம் நீங்கும்.

'எல்லா உயிர்க்கும் ஏமமாகிய
நீர் அறவு அறியா [illegible]
தாழ்சடைப் பொலிந்த
அருந்தவத் தோற்கே'

## உங்களுக்குத் தெரியுமா?

### கேள்விகள்

1. உலகில் நாகரீகத்துக்குப் பெயர்போன பட்டினம் எது?
2. விநோதம் நிறைந்த கூடு அமைத்து வாழும் பறவை எது?
3. கோப்பி குடித்தலை முதலில் ஆரம்பித்தவர் யார்?
4. இலங்கைக்கு எப்போது மகாத்மாகாந்தி வந்தார்?
5. கொலம்ப எப்போது, எங்கே பிறந்தார்?
6. இலங்கையின் முதல் கவர்னர் ஜெனரல் (மகா தேசாதிபதி யார்?
7. தமிழ்மறை எனப் போற்றப்படும் நூலின் பெயர் என்ன?
8. உலகில் பெரிய மிருகம் எது? அது எங்குள்ளது?
9. பறக்கும் வெடிகுண்டு எவ்வகையினது?
10. மனித உரோமத்தால் செய்யப்பட்ட வடம் எங்குள்ளது?

### விடைகள்

1. பாரீஸ்
2. தூக்கணாங்குருவி.
3. அரேபிய நாட்டினர்.
4. 1929-ல் வந்தார்.
5. ஜெனோவா பட்டினத்தில் 1451-ம் ஆண்டு பிறந்தார்.
6. லோட் சோல்பரி பிரபு.
7. திருக்குறள்.
8. ஆஸ்ட்ரிச் இது ஆபிரிக்காவில் உள்ளது.
9. ஆளின்றித் தானே பறந்துசெல்லக் கூடியது
10. யப்பானில் உள்ளது.

அனுப்பியவர்:
செல்வி. விஜயாசிவசம்பு.




## அன்பு

-வேமோன்-

இருளைப்போக்க ஒளியுண்டு. தாகத்தைப் போக்க நீருண்டு. களைப்பைப் போக்கக் காற்றுண்டு. பசியைப் போக்க உணவுண்டு. குளிரைப் போக்க நெருப்புண்டு. வெய்யிலைப்போக்க நிழலுண்டு. ஆனல் உலகில் நிலவிவரும் பிணிகளான களவு, பொய், வறுமை, பொருமை என்பவற்றை அடியோடு அதிகாரத்தோடு அழிக்க அரிய மருந்து ஒன்று உண்டு. அதுவே அன்பு! அதனை வளர்த்தே மேற்படி பிணிகளைப் போக்கலாம்.

புத்தரின் புன்சிரிப்பிலே, புனிதத்திலே பொலிவு பெற்ற முகத்திலே பரந்தது அன்பே. இயேசுவின் இதயத்திலே இயங்கியதும் அன்பே! நபியின் நல்ல வார்த்தையிலே நடைபோட்டதும் அன்பே! காந்தியின் கருணைமுகத்திலே தாண்டவமாடியதும் அன்பே! உலக சமாதானத்தின் தூதர் ஜோன். எப். கென்னடியும் ஆபிரகாம் லிங்கனும் மற்றும் உலகபோதனையில் நல்ல செயல்களைக் காட்டிய புத்தர், இயேசு, காந்தி, நபியின் பெயர்கள் இன்றும் வரலாற்றில் இடம் பெற்றன் என அதற்குக் காரணம் அவர்கள் நினைவிலே சொல்லிலே, செயலிலே, இதயத்திலே முகத்திலே அன்பு என்னும் அச்சாணி அடிப்படைக் கோலாக அமைந்திருந்ததே. அவர்கள் யாவரும் அன்பு வாழ்க்கை வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

திருக்குறளிலே அன்புடைமை என்ற ஓர் அதிகாரத்தையே பாடியுள்ளார் வள்ளுவர். அன்புடையவரை பிறருக்கு உதவுபவர் என்றும் நிலைபெற்ற வாழ்வுடையவர் என்றும் விளம்பி இருர். அன்பிலாதவர்களை சுயநலவாதிகள் என்றும், பாலைநிலத்திலே வளரும் மரம் என்றும் எலும்பால் போர்த்த உடம்பு என்றும் விளம்புகின்ருர். அன்பிற்கு இருக்கும் சக்தி அளப்பரியது அடைக்கும் தாழே இல்லை என்கிருர்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறுவதை ஒழித்தால் மனிதகுலம் மாபெரும் சாதனையை அடைந்து விடும். இதனுல் எதனையும் இலகுவில் வெற்றிபெற முடியும். இதனை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. மனிதனே கண்ணீர் கம்பலையாக துயரச் சூழலில் சிக்கி அன்பு என்னும் ஆயுதத்தைத் தாங்கிக்கொள்ளாமல் கலங்குகிருன். ஆனல் மாருக அன்பினைக் கைக்கொண்டால் அவனிலுள்ள அத்தனை மனிதரும் அகமும் முகமும் மலருவர்!

## நல்ல பழக்கம்

—பொன்னிலத்தான்—

காலையில் எழுவது நல்ல பழக்கம்-தினம்
கடவுளைத் தொழுவது நல்ல பழக்கம்.

படித்து முடிப்பது நல்ல பழக்கம்-உள்ள
பாடங்களைப் படிப்பது நல்ல பழக்கம்

அன்னையை மதிப்பது நல்ல பழக்கம்-என்றும்
அவள் உரை கேட்பது நல்ல பழக்கம்.

சிரித்து மகிழ்வது நல்ல பழக்கம்- வாழ்வில்
நேர்மையில் நிற்பது நல்ல பழக்கம்.

நேசம் படைப்பது நல்ல பழக்கம்-வரும்
சினம் ஒழிப்பது நல்ல பழக்கம்.

கொடுத்து மகிழ்வது நல்ல பழக்கம்-இந்தக்
கொள்கையில் ஊன்றுதல் நல்ல பழக்கம்.

பாடி மகிழ்வது நல்ல பழக்கம்-அதில்
பக்தியைச் சேர்ப்பது நல்ல பழக்கம்.

உரிமை படைப்பது நல்ல பழக்கம்-நித்தம்
உழைத்தே உண்பது நல்ல பழக்கம்.

கூடி உடன் வாழ்வது நல்ல பழக்கம்-கள்
குடிப்பவரை தடுப்பது நல்ல பழக்கம்.

[illegible] காப்பது நல்ல பழக்கம்-நம்
நாட்டை [illegible] நல்ல பழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு முன்னேற்றத்தில் நமக்கும் சில பணிகள்

குடும்ப சுடர்



தயாரிப்பு: குணம்

பெண்மையின் சக்தி வியாபித்துவரும் இன்றைய சமுதாயத்தில் மகளிரின் சேவை இன்றியமையாத ஒன்றுகிவிட்ட இன்றைய நிலையில் நான் - எனது குடும்பம் என்ற குறுகிய எல்லையைக் கடந்து நாம் - நமதுசமுதாயம்-நமது நாடு என்ற பரந்த மனப்பான்மையில் ஊன்றி, நமக்காக நமது நாட்டுக்காக - நமது மக்களுக்காக என்ற எல்லைவரை அடியெடுத்து வைக்கத் துணிய வேண்டியது மகளிர் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

ஆம், இந்நாடு நமது சேவையைஒவ்வொரு துறையிலும் எதிர்பார்த்து நிற்கையில், இன்னும் நாம்குறுகிய வட்டத்தைக் கடக்காமல் இருப்பது எத்துணை பெரிய தவறு. பிறநாடுகளின் வளர்ச்சிகளை, அங்கு மகளிர் ஆற்றும் சேவைகளைப் பல நூல்கள், பத்திரிகை வாயிலாக தினமும் படித்துவிட்டு படித்தவை மனனுற உழைக்காதிருப்பது மடமையிலும் மடமையன்றோ!

கலைகள், கைப்பணிகள், சுகாதாரம், கல்விபோன்ற இன்னோரன்ன பலவழிகளில் நமது பணியைச் செவ்வனே ஆற்றி, நமது வழியில் மற்றவர்களையும்அழைத்துச் செல்வதன்மூலம் நாட்டிலே சிறப்பையும் சீர்திருத்தத்தையும் உருவாக்க முடியும்.

எத்தனைதான் செல்வம் இருந்துவிட்ட போதிலும் அதை அனுபவிக்கத்தக்க உடலாரோக்கியம் இல்லாதவாழ்க்கை நரகமாகி விடுகிறது. இதனுலன்றோ நோயற்ற வாழ்க்கையைக் 'குறைவற்றசெல்வம்' என்று கூறியிருக்கிறார்கள்.

நகரவாழ்க்கையில் சுத்தம் என்றபேச்சுக்கே இடமில்லை, நெருக்கடிக்கும். பரபரப்புக்கும், ஆடம்பரத்துக்கும் உறைவிடமான அங்கேஇவைகளைக் கவனிக்கப் பொழுதுமில்லை, மனமும் வசதியுமில்லை.

'இன்றைய மகளிர் பலர் எப்போ விடியும்; எந்த சினிமாவுக்குப் போகலாம். யாரைப்பற்றி வம்பளக்கலாம் என்று வீண்வழிகளில் காலத்தைக் கடத்துகிறார்கள். இந்நிலையில் ஊருக்கு ஊர், குறிச்சிக்குக் குறிச்சி பக சங்கங்களை ஏற்படுத்தி அதன்மூலம் நாட்டுக்கு உழைக்கும் வழியை அவர்களுக்கு உணர்த்துவதால் எத்தனை பெரும்நன்மைகள் ஏற்படும்.

சங்கங்கள்மூலம் சுகாதாரத்தின் பயனை நோயற்ற வாழ்வின் சிறப்பை ஒவ்வொரு பெண்ணுக்கும் எடுத்தியம்பி அவர்கள் மனத்தில் ஆழப்பதித்தால் ஆரோக்கியமும் வீரமும், நற்குணங்களும் நிறைந்த சிறந்த பிரஜைகளை உருவாக்கும் அவர்கள் அப்பணியைச் செவ்வனே ஆற்ற வழிவகுத்தவர்களாவோம்!

நமது வீட்டுக்குத் தேவையான பொருட்களை ஒன்றுக்குப் பத்தாக விலைகொடுத்து கடைகளில் வாங்குகிறோமே நீண்ட நாட்கள் உழைக்க முடியாத அப்பொருள்களில் பணத்தைக் கொட்டும் நம் சகோதரியர்க்கு அதனுல்ஏற்படும் பொருள் விரயத்தை எடுத்தியம்பவேண்டும் பணம் பொருட்களின்மூலம் பன்ன வேலைகள்பல செய்விக்கலாம் இதனுல் வீட்டுத் தேவையும் நாட்டின் பொருளாதார தேவையும் வளர உறுதுணை செய்தவர்களாவோம்.

கலைகள்தமிழரின்சொத்து. அன்றையகாலத்தவர் தமது காந்தள் விரல்களைக் கொண்டு பொன்னுன நேரத்தை உறுதுணையாக்கி அழகிய கலைப்பாடமைந்த சட்டைகள், உறைகள் திரைச்சீலைகள், மேசைவிரிப்புக்கள் உருவாக்கினர்கள். நவீன யுகமான இன்றே இயந்திரங்களின் உதவியுடன் குறுகிய காலவரையில் அவைகளைச் சாதிக்க முடியுமாயிருந்தும் சோம்பல் காரணமாக வாளாவிருக்கின்றுர்கள். சோம்பலால் ஏற்படும் இவ்விழப்புகளை அவர்களுக்கு உணர்த்தி அவர்களைச் செயற்படவைப்பது நமது கடமையாகும். மாதர்தம் கைவண்ணத்தால், வண்ண வண்ணமான பொம்மைகள். வீட்டைஅலங்கரிக்கும் அழகு சாதனங்கள்உருவாக்கலாம்,

வீட்டின் தோட்டம் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஊன்றுகோலாகும், ஒவ்வொருவீட்டிலும் காய்கறி, பழவகைத் தோட்டங்களைஉருவாக்கி அதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர நமது பணியைச் செய்யலாம்.

சங்கமொன்றை உருவாக்கிநாம் தயாரிக்கும்பொருட்களை அதன் மூலம்விலைப்படுத்திநாட்டின் தேவையையும் பூர்த்திசெய்யலாம்.

இவ்வாறு இன்னும்பலவழிகளில் மகளிராகிய நாம் உழைக்கப்புகின் நாடு வளராதா? நலம் பெருதா? நமது பணியும் பங்கும் நிறைவுருதா?

படித்துவிட்டுப் பல மகளிர்வீடுகளில் இருந்தும் வரட்டுக் கௌரவத்தினுல் நமது பண்டைய தொழில்களைச் செய்யக் கூசுகிருர்கள். உத்தியோகம்பார்ப்பது தான்கௌரவமல்ல; நேர்மையானமுறையில் எச்சிறு தொழிலைச் செய்தாலும் கௌரவமே. இதை மனதில் நிறுத்தி நம் பெண்கள் நடப்பார்களா? நாட்டுக்கு உழைக்க முன்வருவார்களா?

## நினைவில் இருக்கட்டும்

**புத்திசாலிப்பெண்**

புத்திசாலியான பெண் தான் செய்யக்கூடியகாரியத்தைச்சொல்ல மாட்டாள். சொல்லக்கூடாததைசெய்ய மாட்டாள்.

0 0 0

**நல்லவரை கண்டால்...**

நல்லவரைக்கண்டால் அவரைப்பின்பற்றிநட தீயவரைக்கண்டால் அவரிடமுள்ள கெட்ட குணங்கள் உன்னிடமும் என்ன இருக்கின்றன என்றறிந்துதிருத்திக்கொள்.

0 0 0

**உண்மைக்காக...**

உண்மைக்காக ஒரு பெண் தன் தொழிலையோ அல்லது மற்றும் தன் நலன்களையோ தியாகம்செய்யலாம். ஆனுல் எதற்காகவும்உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.

0 0 0

**கடமையை உணர்ந்து—**

ஒவ்வொருவருக்கும்வாழ்க்கையில்ஏற்பட்டகடமையை உணர்ந்து அதனை நன்கு நிறைவேற்ற முயல்வோமாகுல் அதில்மனதுக்கேற்படும் திருப்தியும் நிம்மதியும் வேறெதிலும் இல்லை

## தாகத்தை தணியுங்கள்

அடிக்கடி பலருக்குத்தாகம் ஏற்பட்டுக்கொண்டே யிருக்கும். இத்தகையவர்கள் தண்ணீரைப் பருகுவதனுல் தாகம்குறைந்துவிடாது. தாகத்தைத் தணிக்கத் தக்க சக்தி பேரீச்சம் பழத்துக்கு அதிகம் உண்டு. எனவே உங்கள் தாகத்தைத் தணிக்க அடிக்கடி பேரீச்சம் பழத்தைச் சாப்பிடுங்கள். எலுமிச்சம்பழச் சாறு கலந்த நீரில் சிறிது உப்புப்போட்டுக்குடித்தாலும்சுலபமாகத் தாகத்தைத் தணித்து விடலாம்.

## "நகுலாஸ்"



நம் நாட்டு நாட்டுக்கூத்துகள் போன்று ரஷ்ய நாட்டுப் பாடல்களும் அவற்றைஅடிப்படையாகக் கொண்ட நடனங்களும் புகழ் பெற்றவை. எவராலும் விரும்பப்படுபவை. இப்படத்தில் ரஷ்யநாட்டுப்பாடல் கோஷ்டியொன்றின் இடையர் நடனத்தை நீங்கள் காண்கிறீர்கள்.

## கண்ணைக்காப்பாற்ற..



உடம்பில்எந்தப்பகுதியில வருத்தம் வந்தாலும் கண் பாதிக்கப்படும் வாய்ப்புண்டு.

இருதயவியாதி, சிறுநீரக உறுப்பு வியாதி, நரம்புத் தளர்ச்சி இருந்தால் கண் கெடும்.

உணவில் சத்து குறைந்தாலும் கண்கெடும் பெலிபியிட்டிஸ், கோனேரியல், கண் ஜஸ்டிவிடிஸ் ட்ரகோமா என்ற கண்வியாதிகள் பெரிய கண் வியாதிகள்.

குறைந்தவெளிச்சம்உள்ள அறைகளில் வேலைசெய்யக்கூடாது. வெளிச்சம் எதிரே இருந்து வரக்கூடாது. வெளிச்சம் பின்பக்கத்திலிருந்துதான் வரவேண்டும்.

தொடர்ந்து சிலவேலைகளைச் செய்யும்போது அடிக்கடி கண்களை மூடிவிட்டுப் பிறகு திறப்பது நல்லது. இதனுல் கண்களுக்கு நல்ல ஓய்வு கிடைக்கிறது.

வானத்தையும், கடலையும் வயலையும் பச்சை மரங்களையும், செடிகொடிகளையும் உற்றுப்பார்ப்பது கண்களுக்கு நல்லது.

கண்ணில் ஏதாது விழுந்துவிட்டால் உடனே கண்ணைக் கசக்கக்கூடாது. தாங்கக்கூடிய வெந்நீரவிட்டுக்கழுவினுல் கண்ணில் விழுந்தது தானுகவே வெளியே வந்துவிடும். கண்களில் கண்ட கண்ட கண்ணுடிகளை யெல்லாம் போட்டுக்கொள்ளக்கூடாது. கண் டாக்டர் அனுமதி கொடுத்தகண்ணுடிகளை மட்டுமே போட்டுக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப்பிரியும் மூன்றும் மனிதனைப்போல உன்குடும்பம் சூழல், தொழில்என்பன பற்றி விசாரித்துக்கொண்டேன். பேச்சுவாக்கில் உன் தங்கையின் பெயர் அரியம் என்றும், உனது ஊர் இலங்கையின் கீழ்ப்பகுதியிலுள்ள ஓர்எழில் கொழிக்கும் நகரமெனவும் அறிந்தேன்.

பஸ் தன்பயணத்தைஆரம்பித்ததும்நான்என்னைமறந்த நிலையில் இயற்கைக் காட்சிகளில் மனதைப்பறிகொடுத்திருந்தேன் வரண்ட அம்பாந்தோட்டைப் பகுதியின் உப்பளங்களையும் பற்றைக் காடுகளையும், எங்காவது தென்படும் ஒற்றைப் பனை மரத்தையும் பார்த்துக்கொண்டிருந்தேன் நீர்நிலைகளில் தம்மை மறந்து படுத்துத்தூங்கும் எருமை மாடுகளையும்பார்த்துஎன்னைமறந்திருந்தேன்.

எப்போதாவது உன்னைத் திரும்பிப் பார்க்கும்போது நீ சிந்தும் மோகனப் புன்னகையில் அப்போது ஒரு அர்த்தத்தை மெதுவாக உணரலானேன்! அதனால் இயற்கையை மறந்து நான் உன்னையே பார்க்கத் தலைப்பட்டேன் நீ என்னைப் பார்த்துச் சிரிக்கும்போதெல்லாம் நானும் பதிலுக்குப் புன்னகை புரிய முற்பட்டேன். நீ சிந்திய புன்னகைகளின் அர்த்தத்தை நான் புரிந்துகொண்ட ரீதியில், உன்னோடு உறவுத்தொடர்பு கொள்ள வேண்டுமென்ற ஆதங்கத்தில் நான் தவிக்கலானேன். பேச்சைப்பற்றி நான் முன்னர் சொன்னதை நன்றாகப் புரிந்து ஆமோதிப்பதுபோல் நீ வாயால் பேசமுற்படவில்லை. நானும் பேசவில்லை. நீ கண்ணால் ஏதோ பேசுவதாக நினைத்து அந்தப் பேச்சின் சாரங்களை நான் எனக்குகந்த மாதிரிப் புரிந்து, அந்த ஆனந்தத்தில் மகிழ்ந்திருந்தேன்.

எப்போதோ ஒருமுறை சந்தித்து மறந்துவிடக்கூடிய எதுவித உறவுகள் பந்தபாசங்களற்ற ஒரு மூன்றாவது ஆளாக பஸ் நிலையத்தில் என்னால் கணிக்கப்பட்ட நீ — பஸ் பயணத்தில் உணர்ச்சிகளும் உயிர்த்துடிப்பும் மிக்க உறவு கொள்ளக்கூடிய —உறவு கொள்ளவேண்டிய ஒருத்தியாக என் மனத்தரங்கில் இடம் பெற்றாய். அப்போது உன் உறவை நான் நாடி நின்றேன். அதற்காக ஏங்கினேன்.

நீண்ட தூரப்பயணம் ஆதலால் வழியில் ஒரு பஸ்தரிப்பில் ஓய்வெடுப்பதற்காகப் பத்து நிமிடம் பஸ் நின்றது. ஓய்வெடுப்பதற்காகவும், அந்தச் சூழலை அவதானிப்பதற்காகவும் நானும் அவ்விடத்திலிறங்கி சிறிது உலாவலானேன். அப்போது பஸ்ஸின் முற்பகுதியிலிருந்த லௌகீக அனுபவங்கள் மிக்க என் நண்பன் பாலச்சந்திரன் உன்னைப்பற்றி நான் எதிர்பாராத சங்கதிகளைக் கூறினான். நீ அவனுடன் கண்களால் பேசுவதாகவும் சொன்னான். என்னுடன் மட்டுமே ஏதோ ஒரு உறவை நாடி நிற்கிறாய் என நான் நம்பிய நீ, அவனுடனும் அப்படியான உறவை விழைகிறாய் என நான் அறிந்தபோது என்மனம் துடித்தது உன்னைப்பற்றி என் மனத்திலிருந்த உயர்வான அபிப்பிராயம் தவிடுபொடியானது உன்னைப் போய் உணர்ச்சிகளும் உயிர்த் துடிப்புமுள்ள ஒருத்தி என்று நான் நினைத்ததை நினைத்து வெட்கினேன். பஸ்ஸில் ஏறியபோது மூன்றும் மனிதரோரணையில் உன்னுடன் பேசியதை பேசாமலே இருந்திருக்கலாம் என எண்ணத் தலைப்பட்டேன். அதனாலே தான் நீ அதே உணர்ச்சிகளுடன், அதேஉயிர்த் துடிப்புடன் அதே மோகனத்துடன் என்னைப் பார்க்கும் போதெல்லாம் நான் காணாதவன் மாதிரி ஏதோ பெரிய யோசனைகளில் ஈடுபட்டிருப்பவன்மாதிரி நடிக்கலானேன்

பஸ்பயணம்முடிந்து றெயிலில் நாங்களும் நீங்களும் ஒன்றாகவே பயணத்தைத் தொடர்ந்தோம். உன்னைப் பற்றி ஒரு மூன்றும் மனிதரிலும் கீழான மதிப்புக்கொண்டிருந்த படியால் நான் உன்னைக் கவனிக்கவுமில்லை; உன்னைப்பற்றி அக்கறை காட்டவுமில்லை. நிமிரும்போதெல்லாம் உன்னைச் சந்திக்கக் கூடிய கோணத்திலிருந்து பஸ்ஸில் பிரயாணம் செய்த நான், நீ என்னைப் பார்க்கவோ, நான் உன்னைப் பார்க்கவோ முடியாத கோணத்திலிருந்து றெயிலில் என் பிரயாணத்தைத் தொடரலானேன்.

நான் உண்மையாகவே உன்னைப்பற்றிக் கேலியாக நினைத்துச் சிரித்தேன். உனது புனிதத்தை உணராது சிரித்தேன் காலம், சூழல், சந்தர்ப்பம் என்பனவற்றிற்கு ஏற்ப மாறும் சமுதாயச் சூழலில், பெண்களும் ஓரளவு சகஜமாக எல்லோருடனும் பழகவேண்டும் என்று உணராமையால் உன்னைத் தவறாக எடைபோட்டு அதனால் என்னை நானே பாராட்டி ஒருவித 'தற்கிரமிடுக்கில்' நான் சிரித்தேன். அப்படிச் சிரித்ததற்கெல்லாம் இப்போது நினைந்து நினைந்து உருகி உருகி அழுகின்றேன்.

றெயிலில் புதிதாக எனக்கு ஒரு நண்பன் அறிமுகமானான். கொஞ்சம் துடுக்கும் துடிப்பும் மிக்கவனான அவன் உன்னையே வைத்தகண் வாங்காமல் பார்க்கலானான். உன்னிடத்தில் அவன் மயங்கிக் கிடந்தான்: 'என்னுடையதும், என் நண்பன் பாலச்சந்திரனுடையதுமான சகாப்தங்கள்' முடிந்து அவன் சகாப்தம் ஆரம்பமாகிறது. பாவம் ஏமாறட்டும்; நல்லாக ஏமாறட்டும் என நான் எனக்குள் நினைக்கலானேன். நான் விரும்பியிருந்தால் அவனை அவ்வாறு செய்யவிடாது தடுத்திருக்கலாம். ஆனால் நான் அதை விரும்பவில்லை. அவன் வழியில் குறுக்கிட நான் முற்படவில்லை,

நீலக்கடலலைகள் ஓங்காரித்துச் சத்தமிட்டுக்கொண்டேயிருந்தன; கடலுக்கும் றெயில் பாதைக்குமிடையில் ஒழுங்காக அழகாக குளிர் நிழல் பரப்பி நின்ற தென்னஞ்சோலைகள் காற்றில் சலசலத்து களிநடம் புரிந்தன. என் முன்னாலிருந்த கண்ணாடி மனிதன் ஏதோ பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்தான். என் புதிய நண்பன் உன்னைப் பார்க்கக்கூடிய கோணத்திலிருந்து உன்னையே பார்த்துக்கொண்டிருந்தான். எனக்குப் பக்கத்தில் முன்னும் பின்னுமாக ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக்கொண்டிருந்த சிங்களவர் இருவர் அப்போது வெளியாகியிருந்த நாவலொன்றை காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். நான் மௌனமாக இருந்தேன்.

என் புதிய நண்பன் உன்னையே பார்ப்பதைக் கண்ட நானும் நீ என்ன செய்கிறாய் என்று அறிவதற்காக உன்னைப் பார்க்க முற்பட்டேன். நான் உன்னைப்பார்க்க நெளிந்து திரும்புகையில் எனக்கு முன்னாலிருந்தவர் உன்னைப் பார்த்துவிட்டு என்னைப் பார்த்துச் சிரித்தார். எனக்குச் சங்கோஷம் குறுக்கிட்டது. நீ என்னையே பார்த்துக்கொண்டிருந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியலாயிற்று. ஆனால் என்னால் உன்னைப் பார்க்க முடியவில்லை.

அரியத்தின் அக்காவே......

நீ எவ்வளவு மனம் நொந்திருப்பாய் என்பதை இப்போது நினைக்கும்போது என்னையே என்னால் ஆற்ற முடியாத துக்கம் பீறிடுகிறது. இப்போ ஏங்கி என்னசெய்ய முடியும்.

றெயிலில் கூட்டம் கூடியிருந்தது. என் புதிய நண்பன் உன்னைப் பார்ப்பதைவிட்டு எங்கோ சென்றிருந்தான். நான் உன்னைப் பார்க்க முற்பட்டேன். கூட்டம் கூடியிருந்ததால் அது முடியவில்லை

நாம் இறங்கவேண்டிய கோட்டை ஸ்டேஸன் அண்மியபோது உன்னருகில் நின்று என் புதிய நண்பன் என் பெயரைச் சொல்லிக் குரல் கொடுத்தான். அவனின் மனோநிலையை நினைத்து நான் மனதில் சிரித்துக்கொண்டேன்.

கோட்டையில் புகையிரதம் நின்றது. ஒருமாதிரியான சோக பாவனையில் நீ 'வணக்கம் வருகிறேன்' என்று விடைபெற்றாய். நான் பதிலுக்குத் தலையசைத்தேன். என் கண்கள் ஏன் கலங்கின என்று எனக்கே தெரியவில்லை.

புதிய நண்பர் தவிர மற்ற நண்பர்கள் ஒன்று சேர்ந்தோம்.

நண்பன் பரி உன்னைப் பற்றிக் கதை கதையாகக் கூறினான். உன்பின்னாலிருந்த அவன் வெளியே ஜன்னலினூடாக தலையை நீட்டி உன்னோடு எத்தனை எத்தனையோ கதைகள் கதைத்தானாம். நீ பரிசுத்தமான புனிதமான பிறவியாம்.

என் புதிய றெயில் நண்பன் உன்னைப்பார்த்துஏதோ கேட்டானாம். வற்புறுத்தி வற்புறுத்திக் கேட்டானாம். நீ கண்கள் கலங்கி அழுதாயாமே. உன் அழகிய கண்களினால் கண்ணீர் முத்துக்கள் சொரிந்தனவாமே. மௌனமாக ஏங்கிப் பெருமூச்சு விட்டாயாமே. ஆற்றமுடியாத சோகத்தில் சிலையாக மாறியிருந்தாயாமே.

நண்பன் அதற்கான காரணத்தை அறிய எவ்வளவோ முற்பட்டானாம். நீ அவனிடம் சொல்லவில்லையாம். நீ அவனிடம் சொல்லியிருக்கலாம். அவன் நல்லவன்; மிகமிக நல்லவன்.

நீ ஏன் அழுதாய்? நீ ஏன் கண்ணீர் முத்துக்களைச் சிந்தவிட்டாய்? நீ ஏன் ஏக்கப் பெருமூச்சு விட்டாய்? நீ ஏன் சோகச் சிலையாக மாறியிருந்தாய்.

இவற்றை அறியத் தான் நான் விழைகிறேன். நீ அழுதாயாமே—அதைக் கேட்கும்போது ஏன் என் கண்கள் கலங்கவேண்டும் —ஏன் என் நெஞ்சம் துடிக்கவேண்டும்; ஏன் நான் பேசமுடியாதவனாக வேண்டும். ஏன் நான் என்னையே மறக்க வேண்டும்.

நீ ஏன் அழுதாய் என்பதை அறியாமல் என்னால் நிம்மதியாக இருக்க முடியாது. இந்த உலகம் முழுவதுமே நீ அழுவதுபோன்ற பிரமையையே எனக்குத் தந்து நிற்கின்றது.

நீ [illegible]

இளங்கோ

(யாவும் கற்பனை)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

# ஐயா, ஒரு பிள்ளை...

வராது. ஒவ்வொரு வகுப்பிலையும் 40 பிள்ளையள் இருக்கு. இதுக்குள்ளை உங்கடை சமயப்படி வீதாசாரம் முழுப்பிள்ளையளும் சேர்ந்துட்டுது இனி உங்கடை சமயஆக்களை எடுத்தா அமைச்சிலையிருந்து கேள்வி வரும். இதென்னடா புதுக் கரடி!

காலுக்குக் கீழாலை நிலம் வழுக்குது. தோல்வி எண்டு ஏக்கம் தொடுகுது. ஆனால் கடைசி முயற்சி. 'ஐயா நீங்கள்தான் கதி' எண்டு காலிலை விழுறன். கல்லாயிருந்தவர் கொஞ்சம் இளகுவது போலத் தெரியுது 'வாற வருஷம் நான் இடந்தாறன். நேரை இரண்டாம் வகுப்பிலைகூட சேர்க்கலாம். இந்த வரியம் எங்கையாவது நல்ல இடத்திலைவிட்டுப் படிப்பியும் கெட்டிக்காரனாயிருந்தா அதிலை வில்லங்கம் வராது. அடுத்த வருசம் அவர் அங்கையிருப்பாரோ தெரியாது. வாக்குறுதிதாறார். ஏன் வேண்டாமென்னுவான்?

இரண்டரை மாதம் ஒரே அலைச்சல், உலைச்சல், முசுப்பாத்தியும்தான். ஆனால் பிள்ளைக்கு பள்ளிக்கூடத்திலை இடமில்லை. வாறவரியம் பெடியன், பிறப்புச்சேட்டிபிக்கேற். பால் கட்டின சேட்டிபிக்கேற் இவ்வளவையும் கொண்டுபோய் 'ஏற்கிறியோ, இல்லையோ?' எண்டொரு கேள்வி. இல்லையெண்டா பல்லையுடைக்கிறது. நல்லசேட்டை.

என்ரைபெடியைச்சேர்க்க பிறகுதான் ஜவதாக் கொமிற்றிக்கு தெரிவுசெய்யப்படலாம். அப்ப காட்டுறன் விளையாட்டை! ஆண்டவனே! ஒரு பிள்ளை (-பிழை) போதும். என்ரை மனுசியை நீயே ஏத்துக்கொள்.

'எப்ப அப்பா பள்ளிக் கூடத்துக்குப் போறது?'

'மொண்டிசோரியிலை சேத்துவிடப்போறியளே?'

'இரண்டாம் வகுப்பிலை படிக்கப்போறன்.'

இதுகளெல்லாம் எங்கடை கதையளைக் கேட்டுவிளங்கிக்கொண்டதை வச்சுக்கொண்டு என்ரை சந்தானதிரவியம் செல்லமாய் தினமும் சொல்கிறபாட்டு.

# பறக்கும் ரயில் வண்டி

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் சக்கரங்கள் இல்லாத 'துரித ரயில்வண்டி' மணிக்கு 500 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியதாகக் கண்டு பிடித்துள்ளனர் இந்தப் பறக்கும் ரயிலுக்கு 'டிரான்ஸ்ராபிட்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. ரயில் வண்டியினுள் அமைந்த டீசல் மின்சார ஜெனரேட்டர்களின் உதவியினால் ஏற்படுகிற 'காந்த மெத்தை' மீது மிதந்தவாறு இரயில் செல்லும். தண்டவாளத்துக்கும் ரயிலுக்குமிடையே பிணைப்பாக இருப்பது காந்த சக்தியே. பூமிக்குச் சற்று உயரத்தில் அமைக்கப்பட்ட தண்டவாளத்தின்மீது இரயில் பட்டும் படாததுமாகச் செல்லும், ஒரு பெட்டியில் 200 பிரயாணிகள் செல்லலாம்.



கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல: 37/39, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'நாலு' அன்னங்கள்' பி. ரொச்சி கோவ்ஸ்கியின் அன்னத் தடாகத்தில் ஒரு காட்சி.

# ரஷ்யாவின் கலை வளர்ச்சி

பிரச்னைகள் எங்கு தோன்றுகின்றதோ அங்கு அமைதி பிறக்க முடியாது. ஆனால் அமைதியை மனித நெஞ்சங்கள் எப்போதுமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. சோவியத் ருஷியாவில் மக்களின் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்துள்ளது. மக்களின் அபிலாஷைகள்தானே கலையுருவம்பெற வேண்டுமென்ற தத்துவத்தை அங்குள்ள கலைஞர்களும் கலை நிறுவனங்களும் கொண்டிருக்கின்றன...

கலைகளின் ஏற்றம் எந்த அளவுக்கு அமைந்துள்ளது? கலைஞர்கள் சமுதாய உணர்வை ஊட்டுவதற்காக முன்னணியில் நிற்கின்றார்கள் என்பதை எல்லாம் தெட்டத் தெளிவாகக் காட்டிவருகிறார்கள்.




## கலைவாணி கலாலயத்தாரின்

# இலங்கேஸ்வரன்

அயோக்கியத்தின் அடுத்த அவதாரம் என்றால் அது இலங்கேஸ்வரனாகத்தான் இருக்க முடியும் என்ற இழிவான எண்ணத்தைப்போக்கி இலங்கேஸ்வரன் பண்பும், பாசமும் உள்ள ஒரு ...மன்னன் என்பதை எல்லோரும் உணரும்வண்ணம் இலங்கேஸ்வரன் நாடகத்தை நடித்துக்காட்டி அதிவெற்றியும் கண்டுவிட்டார்கள்... வட்டுக்கோட்டை கலைவாணி கலாலயத்தார்.

தங்கத் தொட்டிலில் தாலாட்ட வேண்டிய தன் மகள் சீதைக்கு தன்னுடைய நாட்டிலேயே வளரக்கூடாதென்ற நிலை ஏற்பட்ட போது இலங்கேஸ்வரன் கலங்குகின்றான். பாசம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதையே நடிப்பால் உணர்த்தி உறங்காத உள்ளங்களையே உருக்கி விடுகிறார் இலங்கேஸ்வரனாக நடித்தவர். கும்பகர்ணனாகவும், விபூஷணனாகவும் நடித்தவர்கள் பாத்திரங்களின் தன்மையை உணர்ந்து பக்குவமாக நடித்தனர். எனினும்... என்ன காரணத்தாலோ... கும்பகர்ணனின் குரல்கூடக் குழறிவிட்டது. இராமனாக நடித்தவர் இராமனாகவே மாறிவிட்டார் என்று சொல்லுமளவிற்கு அவரின் நடிப்பு நன்றாக அமைந்திருந்தது. பரதனாக நடித்தவரின் நடிப்பும் பர

(14-ம் பக்கம் பார்க்க)

## 'நினைவுகள் எங்கே?

அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் 'நினைவுகள் எங்கே?' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது.

ஆசிரியர் திரு. வே. சி நல்லதம்பியின் கதைவசனத்துடனும், ஆசிரியர் திரு எஸ். அமிர்தலிங்கத்தின் டைரக்ஷனுடனும் இந் நாடகம் உருவானது.

## பாலனா?பரமனா?

கந்தப்புராணத்தை மையமாக வைத்து அமைக்கப்பட்ட இந்த நாடகம் மகா சிவராத்திரியின் போது அராலி தெற்கு செம்பி தோட்ட வைரவர் கோவில் முன்றலில் அரங்கேற்றப்பட்டது.

மொத்தம் 20 நடிகர்களினால் அமைக்கப்பட்ட இந்த நாடகம்புராண உண்மையை மக்களுக்கு கொடுத்து-சிவராத்திரி இரவை பயனாக்கியது.



வட சோவியத்திலுள்ள கதைப்பாடல் நாடகக் கம்பனியாரின் "வொல்காலேஸ்" என்னும் நாடகத்தில் சோவியத் நங்கைகள் இவ்வாறு காட்சி தருகின்றனர்.



இசைவாத்தியங்களை மீட்டிக் கொண்டு உள்ளங்கள் பிரதிபலிக்க இங்கே காட்சி தருகின்றார் எவ்சென் சுகோவும் ஏ பக்காரினும். வட சோவியத்தின் இசைப்பாடல் கம்பனியாரின் நாடகத்தில் ஒரு காட்சி.



நற்றலயா பெஸ்மெத்ரேனுவும் நிக்கோலை படியிச்சேவும் "அன்னத் தடாகம்" என்னும் நாட்டிய நாடகத்தில் இவ்வாறு காட்சி தருகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலி...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் தெய்வ சக்தியை வெளிப்படுத்தவேண்டும்.

சைவ அநாதரர்களின் பாயச ஏப்பத்துடன் இக் கட்டுரை பூர்த்தியாகின்றது பெயர் வெளிப்படுத்த நாணும் பெரியாரின் வள்ளன்மைக்கு—

## இலங்கேஸ்வரன்..

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

வாயில்லை. நடிப்பை நடிப்பால் நயம்படப் புரியவைத்துள்ளார் கும்பகர்ணனை நடித்தவர்.

நாடகத்தின் சிறப்பு என்னவென்ருல் பெண்பாத்திரங்கள் ஏற்று நடித்தவர்கள் எல்லோரும் ஆண்களாக இருந்தபோதும் பெண்கள்கூட அப்படி நடிக்கமுடியாது என்றளவிற்குத் தத்ரூபமாக நடித்துள்ளார்கள். சிங்கன். சிங்கி மங்கன் பாத்திரங்கள் ஏற்று நடித்தவர்கள், சில சில இடங்களில் அளவு கடந்து நடித்துவிட்டாலும், நகைச்சுவையால் சிந்தை மகிழச்செய்துவிட்டார்கள்.

காட்சி அமைப்பை திறம்படச் செய்திருக்கலாம். மாயாவி தோன்றும்போது மாயாவியின் தோற்றம் ஒப்பனைக்கலைக்கு ஒரு எடுத்துக்காட்டு என்று சொல்லலாம். ஆனுல் ஒளியமைப்பு கொட்டும் பனியில் விடிய விடிய விழித்திருந்தவர்களுக்கு அளவுகடந்த ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கும். இலங்கேஸ்வரன் நாடகத்தை சிறப்பாகச் செய்தார் என்றுமட்டும் சொல்லலாம்.

—சு. செல்லச்சாமி.

## விண்ணுலக...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களிலுள்ள உயிர்ச் சத்துக்கள், பொதுவாகச் சூடேறியவுடனே ஓரளவு அழிந்துபோகும். ஆனுல் தக்காளியில்மட்டும், சமைத்தபோதிலும்கூட அழியாத தன்மையில் அதன் சத்துக்கள் இருக்கின்றன! சிறிய குழந்தைகளும் நோயாளிகளும் இதை உண்ணலாம். பக்கவாதம், குண்டிக்காய் கோளாறு முதலிய தீங்குகள் ஏற்படாதவாறு தக்காளிப் பழம் காக்கின்றது. எளிதில் செரிக்கக்கூடியதாகையால், கைக்குழந்தைகளுக்கு இதன் சாற்றைப் பாலோடு கலந்து ஊட்டலாம்.

தக்காளிப் பழத்தில் மூளைக்கு வேண்டிய எரியம். வலிமைக்கு வேண்டிய ஊதியம்' மயிர், தோல் இவற்றிற்கு வேண்டிய கந்தகம், நரம்புகளுக்கும் செரிப்பதற்கும் நிலவியம், இரத்தத்திற்கு இரும்பு, எலும்பு வலிமைக்கு சுதையம், முக அழகிற்குத் தேவையான சாம்பரம்' உவரம் ஆகியவை உள்ளன.

தக்காளியைக் கோடைக் காலத்தில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். உடம்பைக் குளுமையுடன் வைத்திருக்க இது உதவுகின்றது. 'விண்ணுலக ஆப்பிள்' என்ற பெயரும், தக்காளிப் பழத்திற்கு உண்டு. இந்தப் பொருத்தமான பெயருக்கு ஏற்ப, உடல் தன் வேலையைச் செம்மையுறச் செய்வதற்கு மிகவும் தேவையான அத்தனை சத்துப் பொருட்களையும் இச்சிறிய பழத்தில் நமக்கு அளித்துள்ள இறைவனின் அளப்பரிய அன்பை அனைவரும் அறிந்து வியந்து போற்றுவதுடனே அதன் இனிமையைச் சுவைத்தும் மகிழ்வோம்: 'ஒரு நாளைக்கு ஒரு பெரிய தக்காளிப்பழம் அருந்தினுல் மருத்துவர் அருகில் வரமாட்டார்' என்ற பழமொழியின் உண்மையை ஓரளவிலாவது உணருவோமாக.

## ஈழத்துச் சிதம்பர புராணம்

நூலாசிரியர்:
புலவர்மணி, பண்டிதர்
சோ. இளமுருகனுர்

குறிப்பு: பாயச நன்கொடை போல சைவ அநாதசாலைக்குப் படுக்கை விரிகள் நன்கொடையும் அத்தியாவசியகம். படுக்கை விரிப்பைப் பிள்ளைகள் போர்வையாகவும் பயன்படுத்திக்கொள்வார்கள். சின்னஞ்சிறு குழந்தைகள் இந்தப் பனிகாலத்தில் போர்வையின்றி நடுநடுங்குவது பார்க்குந் தரமன்று. பதின்மூன்று (13) வயசுக்குட்பட்ட பத்து ஆண்பிள்ளைகளுக்கும் பத்துப்பெண் பிள்ளைகளுக்கும் அவசியம் படுக்கை விரிதேவை. புண்ணியவான்களுக்கு இதனைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

உரையாசிரியர்:
பண்டிதைமணி,
பண்டிதை இ. பரமேசுவரி

ஈழத்துச் சிதம்பரம் என்னும் பெருமை வாய்ந்த காரைநகர் திருத்தில்லை புரத்தைப்பற்றி புலவர் மணி சோ. இளமுருகனுரால் இயற்றப்பட்டு அச்சாகிக்கத்திலிருக்கும் 1000 பக்கங்கள் கொண்ட நூலின் 5-வது சருக்கத்தையடக்கியதே இந்நூலாகும். ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தினருக்காக சிவத்திரு க. வைத்தீசுரக்குருக்கள் பதிப்பாசிரியராக முன்னின்று இந்நூலை அமைத்திருக்கிருர்.

ஈழத்தில் அண்மைக்காலத்தில் யாக்கப்பட்ட மிகப் பெரிய நூலின் அம்சமாக விளங்குவது இந்நூல்.

பண்டைய பண்பும், ஆழ்ந்த இலக்கியச் செறிவும், அநஞ்சையன்ளும் அழகும் அருளும் வளமையும் இந்நூலின் கவிதைகள் மிளிர்கின்றன.

ஆசிரியரின் புலமைக்கு பாரிய எடுத்துக்காட்டாகவும். இன்றைய விஞ்ஞான உலகில்மெய்ஞ்ஞானத்தைப் புலப்படுத்தும் சாதனமாகவும் காட்சிதருகின்றது.

ஈழத்திலும் இந்தியாவிலுமுள்ள பேரறிஞர்கள் பலர் வியந்து பாராட்டும் பெற்றுமையுற்றுள்ள ஈழத்துச் சிதம்பர புராணத்தின் முழுமையான வடிவை புலப்படுத்தும் தூரதிருஷ்டிக்கண்ணாடியாகவும் இந் நூல் அமைந்துள்ளது.

0 0




### ஸ்ரீ வள்ளி நாயகன்

(நாடகக் காவியம்)

ஆசிரியர்: அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்.
விலை: ரூபா: 1-50.

தண்ணருள் படைத்த சமயநெறி தழுவுகின்றவர்களுக்குப் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டது இந் நாடகக் காவியம். சமயப் பிரசங்கத்தின்மூலம் இந்

(15-ம் பக்கம் பார்க்க)




இந்த இரு குழந்தைகளுமே லக்டஜன் குழந்தைகள்தான். ஒன்றிற்கு அதிகப்படியான பிசிதம் தேவை. மற்றது வழமையான (Standard) லக்டஜன் அருந்தி வளர்ந்துள்ளது. இருவரும் செழிப்போடு வளர்வார்கள். நெஸ்லே ஸ்தாபனத்தார் இப்பொழுது பிசிதம் நிறைந்த (Full Protein) லக்டஜனை அளிக்கிருர்கள். டாக்டர்களின் அபிப்பிராயப்படி குழந்தைகளின் உணவில் அதிகமான பிசிதம் தேவை எனக்கருதும் குழந்தைகளுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்ட ஓர் புதிய லக்டஜன் பால்.




இரண்டு லக்டஜன். வித்தியாசத்தை கூறுவது கடினம் தான் இருவரும் வைட்டமின் நிறைந்த லக்டஜன் அருந்தி பலனடைந்துள்ளார்கள். "வழமையான" (Standard) லக்டஜனிலும் "பிசிதம் நிறைந்த"(Full Protein) புதிய லக்டஜனிலும் அளவான கல்சியம், இரும்புச்சத்து உள்ளன. லக்டஜனைப்பற்றி உங்கள் டாக்டரிடம் கலந்தாலோசியுங்கள் அவர் உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும் செழிப்பாகவும் வளர எது சிறந்தது என்பதை சிபாரிசு செய்வார்.

குழந்தைகள் பராமரிப்புக்கு, நெஸ்லே பராமரிப்பே சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

இப்பொழுது நடைபெறுகிறது
மனோகரா—யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா தினங்களில்
நாலு காட்சிகள்
★ காந்தாராவ்
★ தேவிகா
★ பாலையா
★ லலிதா
முதலியோர் நடித்த



சுகுண சுந்தரி

யாழ். வின்ஸர்
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகமும் நாட்டியப் பேரொளியும்
சேர்ந்து நடிக்கும் வண்ணக் காவியம்
ஜெமினியின்
விளையாட்டுப்பிள்ளை
(ஈஸ்மன் கலர்)
மற்றும் நடிகர்கள்
காஞ்சனா, சோ, மனோரமா, பாலையா.

7-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல்
(கொழும்பு)
சிவாஜி
காஞ்சனா
எம் என்,
நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த





சிவந்த மண்

# அதிர்ஷ்ட ரேகையும்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கீதத்தில் விருப்பமுள்ளவர்களாகக் காணப்படுவர். சந்திரமேடு சில நோய்களின் தன்மைகளையும் காட்டும். சந்திரமேடு நன்குயமைந்தவர்களுக்குப் பித்தத்தினால் ஏற்படும் நோய் உண்டாவதில்லை. சிலர் நன்றாகக் கனவு காண்பார்கள். நித்திரையிலிருந்து எழுந்து தமது கனவைப்பற்றியும் கூறுவர். தெய்வ அருள் காரணமாகச் சிலருக்குக் கனவு மெய்ப்படுவதுமுண்டு ஆனால் சில சந்தர்ப்பங்களில் கெட்ட கனவுகளினால் தொந்தரவுமடைவர். இதனால் சோம்பல் அசதி ஆகியவைகளும் ஏற்படுகின்றன. ஏனைய கிரக மேடுகளின் நிலை நன்கு அமைந்தால் இவ்வாறான சில தன்மைகள் படிப்படியாகக் குறையும் அல்லது இல்லாது போகும்.

சந்திரமேடு அளவுக்கு மேற்பட்டிருப்பின் மாறுபட்ட தன்மையையே கொடுக்கும். அதாவது இத்தகையவர் சபலசித்தமுள்ளவராகக் காணப்படுவர். அத்தகையவருக்கு வாதம் போன்ற நோய் இருக்கக் காணலாம். தெய்வீக உணர்ச்சியற்றுத் தெய்வ நிந்தனை செய்பவராகக் காணப்படுவர். தனது கடமையைப் பயத்துடனும் வெறுப்புடனும் செய்வர். "எது நடந்தாலும் நடக்கட்டும். நமக்கென்ன" என்று தன் பாட்டிலேயே இருப்பர்.

எங்கள் எல்லோருடைய கைகளிலும் எல்லாக் கிரக மேடுகளும் இருக்கக்காணலாம். ஆனால் கிரகமேடுகளின் தன்மைகள் வித்தியாசமாய் இருக்கும். இந்த மேடுகளில் பலவகையான குறிகளைக்காணலாம். ஆனால் எல்லாக் குறிகளையும் ஒரு கிரகமேட்டிலும் எல்லாக் குறிகளும் உள்ள கையையும் ஒரே நேரத்தில் காண்பதரிது. சில குறிகள் சில காலங்களுக்கும் சில குறிகள் பல காலங்களுக்கும் இருக்கக் காணலாம். ஆனால் பிரதானமான ரேகைகள் மறைவதில்லை. சந்திர மேட்டின் தன்மையைக்கொண்டு ஒருவருடைய நோயின் தன்மையை அறியலாம். சிலருடைய கையில் சந்திர மேட்டில் அனேகரேகைகள் குறுக்கும் மறுக்குமாய் இருக்கக் காணலாம். இத்தகையவர்களுக்கு வாதம், பிடிப்புப் போன்றநோய்கள் ஏற்படும். இவர்களுக்குத் தேகத்தில் காயம் ஏற்படும் இக்காயங்களினால் வேறுவேறு வகையான ரோகங்களும் உண்டாகும். சிலருடைய கையில் சந்திரமேட்டில் தனித்த ஒரு ரேகை இருக்கக் காணலாம். இந்த ரேகை சந்திரமேட்டிலிருந்து நேராக விதி ரேகையை முட்டும். இவர்கள்தான் கடல் கடந்து சென்று கல்விகற்கவும் வாய்ப்புள்ளவர்கள். மாணவர்கள் அநேகமாய் "நான் கடல் கடந்து செல்வேனா? என்று கையைக் காட்டிக் கேட்பது வழக்கம். சந்திர மேட்டிலுள்ள ரேகை விதி ரேகையை முட்டினால்தான் கடல்கடந்து செல்ல வாய்ப்புண்டு. முட்டாதிருந்தால் வாய்ப்பில்லை. தொண்ணூற்றொன்பது சதத்துடன் ஒரு சதத்தைப் போட்டால்தான் ஒரு ரூபாவாகமாறும். ஒரு சதம் போடாதிருக்கும் வரை தொண்ணூற்றொன்பது சதமே. சிலருடைய கையில் சந்திரமேட்டில் சூலக்குறி பெரிதாகவும், சிறிதாகவும் இருக்கக்காணலாம். இத்தகையவர்கள் வஞ்சகம், பொறாமை முதலிய கெட்டகுணங்கள் உள்ளவர்களாகவும், சந்தேகம் உள்ளவர்களாகவும் காணப்படுவர். ஆனால் சந்தேகம்ருசுவானால் சந்தேகித்ததில் அர்த்தமுண்டு. இந்த மேட்டில் கறுப்புப்புள்ளியிருந்தால் நரம்பு சம்பந்தமான நோய் உண்டாகும். வட்டம், நட்சத்திரம் ஆகிய குறிகள் தீங்கையும் கெடுதியையும் குறிப்பன. சதுரமான ரேகையிருப்பின் தக்க நியாயத்துடன் எந்தவிதமான அலுவல்களையும் தீர்க்கமாக ஆலோசிப்பர். இந்த மேட்டில் முக்கோணமிருப்பின் இத்தகையவர் பெருத்த தொழில்களுக்கும், பெருப் விஷயங்களுக்கும் தனது புத்தியையும் அதன் காரணமாயுள்ள யோசனையையும் மற்றவர்களுக்குப்பயன் படுத்துவர்.

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய் சங்கர் - வாணிஸ்ரீ
முத்துராமன் விஜயகுமாரி
நடித்த
டீச்சரம்மா

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 6-30 9-30
போயா நாட்கள் 2-30
சுந்தர ராஜன் - விஜயா
நடித்த
நாணல்

REGAL Jaffna
Daily 4-45, 7& 9-45 p. m.
Poya days 4 shows
Peter O'Toole,
Omar Sharif
in
THE NIGHT OF THE GENERALS
(Panavision-Color)

2-வது வாரம்
வெல்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ஏ.வி.எம் ராஜன்-சாரதா
நடித்த
துலாபாரம்

ராஜா — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர் ★ நிர்மலா
★ முத்துராமன் ★ லெட்சுமி
சுந்தரராஜன் — நாகேஷ் — வி,கே ராமசாமி
மற்றும்பலர் திறம்பட நடித்த
சிறந்த ஹாஸ்ய சித்திரம்
வீட்டுக்கு வீடு
(ஸ்ரீ. வி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உங்களுக்குக் காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி (Hearing Aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது. சீடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட் 122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2868

நூல் வாங்குவதற்கும் பெர்மிட் உள்ள பதிவு செய்யப்பட்ட நெசவு நிலையமும் சிங்கர் தையல் மெசினும் விற்பனைக்குண்டு. 68, கனகரத்தினம் ரோட், நாயன் மார்கட்டு, (நல்லூர்) 2859

பேர்குஸன் றக்ரர் டீசல் 22 SRI 8332 கலப்பையுடன் வேலை செய்யும் நிலையில் விற்பனைக்குண்டு. விலை 6500/- கொன்றக்ரர் கனகரட்ணம். முதலாம் குறுக்கு வீதி, வவுனியா. 2870

### தேவை

சிவானந்த குருகுலப் பெண்பாலார் மேற்பார்வைக்கு சைவ ஆச்சாரம் நன்கு தெரிந்தவரும் தேவாரம் பாடக்கூடியவருமான பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியை தேவை- க. பொ.த சாதாரண உயர்தரமும் விண்ணப்பிக்கவும்: தருமகர்த்தா. சிவானந்த தபோவனம், திருகோணமலை என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 2862

### மருந்து

முகப்பருக்களையும் கரும்புள்ளிகளையும் போக்கி அழகையும் வசீகரத்தையும் தரும் பிம்பிளெக்ஸ் — Pimplex செற் ரூ-4-50. வி. பி. பி.யில் பெற்றுக்கொள்ளலாம். வைத்தியநிலையம், இரண்டாம்மாடி. சங்கரப்பிள்ளை கட்டிடம், யாழ்ப்பாணம் 2871

யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்வி அறிவித்தல்

### பண்ணை மீன் சந்தைக் குத்தகை -1971

1-4-1971 தொடக்கம் 31-12-1971 வரை பண்ணை மீன்சந்தைக்கான கேள்விகள், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரால் 12-3-1971 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து, கேள்விப் பத்திரப் பணமாக ரூ 5/-ம் கேள்வி வைப்புப்பணமாக ரூ 50/-ம் செலுத்திப்பெறக் கூடிய மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருத்தல்வேண்டும். கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும். அல்லது சபையின் கேள்விப்பெட்டியில் போடுதல்வேண்டும்.

கேள்விப்பத்திர மேலுறையில் பண்ணை மீன்சந்தைக் குத்தகை-1971 எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 9-3-1971 செவ்வாய்க்கிழமை பி. ப 3-00மணி வரை அதற்குரியபணத்தைச் செலுத்தியதன்பேரில் வழங்கப்படும்.

இதர விபரங்களை நேரில் வந்து அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்.
28-2-1971. 2798

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி மொழி!

மகனே யாதொருவன் உன்பேரில் தீங்கான எண்ணங்கொண்டாலும், உனக்கு வருத்தமுண்டாக்கும் பேச்சுக்களைப் பேசினாலும், நீ அதனால் வருத்தப்படாதே. நீ உன்னைப்பற்றியே இன்னும் அதிக நீச எண்ணங்கொண்டு, மற்றெவரைப் பார்க்கிலும் நீ பலயீனனாய் இருக்கின்றாயென்று நினைத்துக்கொள்வாய். நீ உண்மையாகவே அந்தகாரச் சீவியத்தில் சீவிக்கிறவனாயிருப்பாயாகில், பறந்து போகிற வார்த்தைகளைக் கொஞ்சமாகிலும் சட்டைபண்ணமாட்டாய். நீ நல்லவனென்றும் கெட்டவனென்றும் தீர்மானமாய்ப் பேசினாலும் அதைப்பற்றி நீ வேறு மனிதனாகப் போகிறதில்லை. மெய்யான சமாதானமும் மெய்யான மகிமையும் எங்கேயிருக்கின்றன? நம்மிடமல்லவா?

— கிறிஸ்துநாதர்




# தமிழர் நல்லெண்ணத்தை சிங்களவர்க்கு விளக்குவேன்

## சபாநாயகர் வாக்குறுதி

— நமது நிருபர் எஸ். ஆர். ஞானசுந்தரம் —

மாவிட்டபுரம் புதன் 'யாழ்ப்பாணத்தில்தங்கியிருந்த இரு நாட்களும் தமிழ்மக்கள் எனக்கு அளித்த நல்லெண்ண வரவேற்புக்கு நன்றி கூறுகிறேன் இந்நாட்டில் இரு சமூகங்களுக்குமிடையில் நல்லெண்ணம் உருவாகவேண்டும் என்ற தமிழ்மக்களின் விருப்பத்தை நான் கொழும்பு சென்றதும் பிரதமரிடம் எடுத்துக் கூறுவதுடன் சிங்கள மக்களிடமும் நேரில் இதுபற்றிஎடுத்துக்கூறி இன ஒற்றுமை ஏற்பட வழிவகுப்பேன்' என்று சபாநாயகர் திரு ஸ்ரான்லி திலகரத்தின உறுதிகூறினார்.

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை விஞ்ஞானகூடத்துக்கான அத்திவாரக்கல்லை நாட்டி வைத்துப்பேசுகையிலேயே சபாநாயகர் இப்படிச்சொன்னார்

யாழ் அரசாங்க அதிபர் விமல் அமரசேகரா தலைமையில்நடந்தஇவ்விழாவில் சபாநாயகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

'வடபகுதி மக்களிடையேயும், அரசியல்வாதிகளிடையேயும் ஏற்பட்டுள்ளபோட்டிகளால்தான் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன, அதேபோல இந்தவித்தியாலயத்தை மகாவித்தியாலயமாக்கும் பிரச்னையிலும் அரசியல்வாதிகள் தலையிட்டால் பயன் ஏற்படாது. நான் சபாநாயகர் என்ற முறையில் நடுநிலைமையில் நின்று இப்பாடசாலையைத் தரம்உயர்த்த முயற்சிப்பேன்; மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்படும் பட்சத்தில் இப்பாடசாலைக்கு எனது பெயரையோ அல்லது எந்த அரசியல்வாதிகளின் பெயரையோ சூட்டக்கூடாது. மகாவித்தியாலய தரத்துக்கு உயர்த்தத் தேவையான விஞ்ஞான கூடத்தை அமைத்துதவிய கல்கிபீடி உரிமையாளர் சின்னத்துரையின் நாமம் இணுவில் சரித்திரத்தில் இடம் பெறவேண்டும்,

### தென்பகுதியில் தமிழ்பாடசாலை

எனது தொகுதியில் ஒரு தமிழ் மகாவித்தியாலயம் உண்டு. அது சிங்கள தமிழ் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் சின்னமாக அமைந்துள்ளது. அதுபோல தமிழர் சிங்களவர்கள் நல்லுறவைப் பலப்படுத்த மகா வித்தியாலயங்கள் இங்கு உருவாகவேண்டும். எமது அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள்இருவர் இங்கு படித்து உயர்கல்வி பெற்றதுடன் இருஇனத்தின் இணைப்புப்பாலமாகவும் விளங்குகிறார்கள், அதுபோல தமிழ் மக்களும் சிங்களமக்களடன் இணைந்து கல்வியில் மட்டுமல்ல சகல துறையிலும் செயலாற்றவேண்டும்.

### யாழ்ப்பாணத்தில் சிங்கள தமிழ் ஒற்றுமை

யாழ்-சிங்கள மகாவித்தியாலயத்துக்கு நான் சென்றிருந்தபோது சிங்களமக்களுடன் யாழ்ப்பாணத் தமிழர் நன்றாகப்பழகுகிறார்கள் என்று பல சிங்களப் பெற்றோர் என்னிடம் கூறினார்கள். என்னிடம் தெரிவித்தால் மட்டும் போதாது இதை தென்னிலங்கைக்குச் சென்றுகிராமமக்களிடையே தெரிவியுங்கள். அப்போதுதான் இனஒற்றுமை ஏற்படும் என்று நான் அவர்களிடம் கூறினேன்.

நான் கொழும்பு சென்றதும் தமிழ்மக்களின் நல்லெண்ணத்தை சிங்களமக்களிடம் கூறுவதுடன் பிரதமரிடம் எடுத்துக்கூறி, வடபகுதிக்குச்சென்று தமிழ் மக்களின் அன்பைப் பெறும்படி வற்புறுத்துவேன் என்றும் சபாநாயகர் கூறினார்.

உடுவில் எம். பி திரு.வி தருமலிங்கம் நல்லூர் எம். பி. திரு. அருளம்பலம், யாழ் அரசாங்கஉதவி அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, திரு. வி. பொன்னம்பலம், உடுவில் கி. ச. தலைவர் திரு.ச. முத்துலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

இணுவில் சந்தியிலிருந்து வித்தியாலயம்வரை பிரமாண்டமான ஊர்வலம் நடாத்தப்பட்டது. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன, இணுவில் பிள்ளையார் ஆலய விசேடபூசையிலும் சபாநாயகர் கலந்து கொண்டார்.

••• •••

ஈழநாடு

சாதாரண வருடம் மாசி மாதம்
20-ந் திகதி [4-3 71]

## ஜீவ சேவையே சிவ சேவை

கல்கத்தாவிலிருந்து ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் செல்வந்தரான ஓர் அன்பருடன் காசியாத்திரை சென்றார். வழியில் தேவ்கார் என்ற சிவஸ்தலத்தில், பல ஏழைகள் உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி தெருவில் பட்டினியால் சோர்ந்துகிடந்தனர்.

அவர்களுக்கெல்லாம் உண்ண உணவும், உடுத்த உடையும் அளிக்கவேண்டுமென்று ஸ்ரீபரமஹம்சர் கூறவே இப்படியெல்லாம் செய்வதாயின் அது கட்டுபடியாகாதென்று, அவருடன் வந்தவர் சிரித்துச்சொல்லிவிட்டு மேலே நடந்தார்.

ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் விடவில்லை. அவர்களுக்கெல்லாம் உணவும் உடையும் அளிக்காவிடில் தாம்வர முடியாதென்று கூறி அப்படியே உட்கார்ந்துவிட்டாராம். மக்கள் சேவையே மகேஸ்வரன்சேவை யென்று அவர் அறிவுறுத்தியதை உணர்ந்து, அங்கிருந்த மக்களுக்கெல்லாம் உணவும் உடையும் அளித்து திருப்தி செய்த பின்பே ஸ்ரீகுருமகாராஜ் அவ்விடம்விட்டுச்சென்றார்!

ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலே நடக்கும் ஜயந்தி விழாக்களில் அன்னதானமே, அன்ன சேவையாக முக்கிய இடம்பெற்றுவருகிறது. பசிக்கு உணவு கிடைப்பதாயின் மனிதனின் மனம் புரட்சி முதலிய கோணல் வழிகளில் செல்லாது. இன்று நடைபெறும் பல கிளர்ச்சிகளுக்கும் முக்கிய காரணம் உணவு, உடை முதலிய முக்கிய தேவைகள் கிடைக்கமுடியாமல் இருப்பதுதான்.

இறைவன் பெயரால் இத்தேவைகளைப் பூர்த்தி செய்து குறைவிலாது உயிர்கள் வாழ வகைசெய்வது பெரும் புண்ணியமாவதுடன், நாட்டின் அரசியல், பொருளாதார சிக்கல்களையும் தீர்த்துக்கொள்ள வழி செய்வதாகும்.

'நடமாடும் கோயில் நம்பர்க்கொன்றீயின் அது படமாடும் கோயில் பரமர்க்கன்றாமே; என்ற உபதேசப்படி ஸ்ரீராமகிருஷ்ண மடத்தர்கள் நடந்துகாட்டும் வழியை ஒவ்வொரு ஊரிலும் நாட்டிலும் பின்பற்றுவதாயின் பலாத்கார புரட்சிகளெல்லாம் மறைந்துபோகும். அன்புப் பணியே மக்களின் பிரச்னைகளைத் தீர்க்குமேயன்றி வேறு பலாத்கார வழிகளால் முடியுமா?

ஜீவ சேவையே சிவசேவை; நர சேவையே நாராயண சேவை; மானவ (மனித) சேவையே மாதவ சேவை'யென்ற மகாமந்திரமே இன்று உலகப்பிரச்னைகளைத் தீர்க்க வழிகாட்டுவதாகும். ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி நடைபெறும். இச்சமயத்தில் நாம் நினைவுகூர்ந்து அதன்படி வாழ்க்கையில் நடக்கவேண்டியது இம்மந்திரமேயாகும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

## நமது நூல் நிலையம்

14ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டில் ஆன்மீகப்பற்றை வளர்த்துவரும் அருட்கவி விநாசித்தம்பியரின் கவிதா சக்திக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

"அந்திப் பொழுதில்
சொந்தத் துடனே
அம்பும் சிலையும்
கையேந்தி
கந்தம் பொழியும்
கானத்திடையே
கடுதும் நம்பிராசனவன்
சிங்கம் கரடி
கரிபன்றி
சிறுத்தை வேட்டை
யாடலுற
தங்கும் வேடர்
கிளைசூழ
சார்ந்தான்
வள்ளிமலையருகே..."

இத்தகைய சந்தப்பிடிப்பு மிகுந்த கவிதைகள் நாடகக் காவியத்தின் சிறப்பைப் புலப்படுத்துகின்றன. எளிமையும், காலப்புதுமையும் கலந்த கருத்துக்களினூடே முருகப்பெருமானின் தத்துவத்தைத்தெளிவாக விளக்குகின்றது இந்நூல்.

நல்ல கடதாசியில் திருமகள் அழுத்தகத்தின் அச்சுக்கலையின் சிறப்பையும் புலப்படுத்துகின்றது.

— இ. நா.

## பூசை நடக்கிறது

மாவிட்டபுரம், செவ்வாய் தையிட்டி கணையவிற்பிள்ளையார் ஆலயத்தில் மீண்டும் 2 மாதங்களின் பின் பூசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன சமாதான முயற்சி மேற்கொள்ளப்பட்டதன் பயனாக நேற்று ஆலயம் திறக்கப்பட்டு பூசைகள் நடைபெற்று வருகின்றன.

## மழையினால் நெல் பாதிப்பு

பூநகரி புதன்

பூநகரிப் பகுதியில் கடந்த இரு தினங்களாகப் பெய்த மழையினால் இங்கு அறுவடைக்குத் தயாராயிருந்த நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டன. வயல்களில் நெல் மீண்டும் முளைக்கும் நிலையில் இருப்பதாகவும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது நிருபர் தெரிவிக்கிறார்

## மூளையில்..

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

முறை 1970-ல் மனிதர்களுக்குப் பயன்படுத்திப் பார்க்கப்பட்டன. பாஸ்டனுக்கு அருகேயிருக்கும் மாஸச்சூஸட்ஸ் மருத்துவமனையில் இது நடந்தது இது மருத்துவ மனையைச்சேர்ந்த டாக்டர் புரூஸ் மான்ட்காமரி, டாக்டர் எஸ். பி. யோக், ஃபிரான்ஸிஸ்பிட்டர் நாஷனல் மாக்னட் லாபரேட்டரி என்றஆய்வுக்கூடத்தைச்சேர்ந்த என். டி. பீயர்ஸ், ஜே. ரிச்சர்டு ஹேல் ஆகியோர் கூட்டாக உருவாக்கிய வழி இது அந்த ஆய்வுக்கூடமும் பாஸ்டன் நகரில்இருக்கிறது பாஸ்டன் நகரில் 1970-ல் நடைபெற்ற மூன்றாவது அனைத்துலக உயிர் பெளதிக இயல் காங்கிரஸில் இந்த ஆராய்ச்சிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org